விலை ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 31 கதிர் 86 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 08, சனிக்கிழமை 20.02.2016

### காட்டு யானை தாக்கியதில் ஒருவர் சாவு

வவுனியா, பெப். 20

வவுனியா-செட்டிகுளம் பகுதியில் நேற்றுக் காலையில் இடம்பெற்ற இரு வேறு காட்டு யானைத் தாக்குதல் சம்பவங்களில் பக். 24

# போர்ப் பாதிப்பு இழப்பீட்டுக்கு 3 ஆயிரம் மில்லியன் தேவை

### ஆயினும் அரசு 550 மில்லியன் ரூபாவே ஒதுக்கீடு

கிளிநொச்சி, பெப்ரவரி 20

போரினால் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கு 3 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி தேவை என மதிப்பிடப்பட்டுள்ளபோதும் அரசு 550 மில்லியன் ரூபா நிதியை மட்டுமே ஒதுக்கீடு செய்துள்ளது.

எனவே, பெருமளவு நிதியை வெளிநாட்டு உதவிகள் மூலம் எதிர்பார்த்துள்ளதாகப் புனர்வாழ்வு அதிகார சபையின் மேலதிகப் பணிப்பாளர் எஸ்.எம். பதூர்தீன் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகள், மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் ஆள்களையும் ஆதனங்களையும் கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் பக். 23

## வித்தியா கொலை விசாரணையில் இதுவரை என்னென்ன செய்தீர்கள்?

### அடுத்த தவணை நீதிமன்றில் அறிக்கையை சமர்ப்பிக்க சி.ஐ.டிக்கு கண்டிப்பான உத்தரவு

யாழ்ப்பாணம், பெப். 20

புங்குடுதீவு மாணவியின் கொலை வழக்கின் விசாரணைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன என்று குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் கூறிக்கொண்டிருக்கும் நிலையில், இதுவரை அப்படி என்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளீர்கள் என்றும் அடுத்த தவணையில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றும் ஊர்காவற்றுறை நீதிமன்று கண்டிப்பான உத்தரவை நேற்றுப் பிறப்பித்துள்ளது.

புங்குடுதீவில் பாடசாலை சென்று கொண்டிருந்த போது மாணவி கடத்தப் பக். 24

## நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே

### விக்கியின் கேள்விக்கு சுமந்திரன் பதில்

யாழ்ப்பாணம், பெப். 20

வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயின் பதவியேற்பு வைபவத்தில், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் நேருக்கு நேர் சந்தித்துப் பேசிக் கொண்டனர்.

இருவரும் மாறிமாறி அறிக்கைகள் விட்டு முரண்பட்டிருந்தனர். இவ்வாறானதொரு நிலையிலேயே நேற்று இருவரும் நேருக்கு நேர் சந்தித்துப் பேசியுள்ளனர்.

இதன்போது, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், பக். 25

## இராணுவம் வசமுள்ள தனது வீட்டை கோருகிறார் விநாயகத்தின் மனைவி

### கிளிநொச்சி அரச அதிபருக்கு மனு

யாழ்ப்பாணம், பெப். 20

கிளிநொச்சி மாவட்ட சிவில் பாதுகாப்பு அலுவலகமாக தற்போது செயற்பட்டுவரும் வீட்டைக் கையளிக்குமாறு, அந்த வீட்டின் உரிமையாளரான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தளபதிகளில் ஒருவரான விநாயகத்தின் மனைவி கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டம் கனகாம்பிகைக்குளம் பகுதியில் உள்ள சிவில் பாதுகாப்பு அலுவலகம் இயங்கும் வீடானது எமது சொந்த வீடு. அது இன்றுவரை இராணுவத்தினின் சிவில் பாதுகாப்புப் பிரிவினர் வசம் உள்ளது. எனவே எமது வீட்டைப் பெற்று வழங்க ஆவன செய்யுங்கள் என்று பக். 25

முச்சந்தி முரளி



எல்லாரும் நல்லாத்தான் நம்பியுள்ளனர் பாருங்கோ...

## மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றக் கூடியவர் கூரே

### வடக்கு முதலமைச்சர் நம்பிக்கை

யாழ்ப்பாணம், பெப்.20

தமிழ் பேசும் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றக்கூடிய ஆளுநர் எமக்கு கிடைத்துள்ளார். அவ்வாறு தகைமையுடையவர்களாக தமிழ் மக்களுக்காக வரக்கூடியவர்களை விரலில் எண்ணி எடுக்க வேண்டியிருக்கின்றது.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகா பக். 25

## மன்னார் விபத்தில் இரண்டு பேர் சாவு

### ஒருவர் படுகாயம்

மன்னார், பெப். 20

மன்னார்-இலுப்பைக்கடவை பிரதான வீதியில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதோடு ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்று பொலிஸார் பக். 25

## தனக்குள்ள அதிகாரங்களைப் பகிர முன்வரவேண்டும் வடக்கு ஆளுநர்

### பதவியேற்பு நிகழ்வில் சுமந்திரன் எம்.பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 20

வடக்கு மாகாண சபையின் புதிய ஆளுநர் ரெஜினோல்ட் கூரே ஆளுநர் என்ற வகையில், தனக்குள்ள நிறைவேற்று மற்றும் சட்டவாக்க அதிகாரங்களை மாகாண சபைக்கு மாற்றுவதற்கு முன்னின்று செயற்படவேண்டும்.

இவ்வாறு கேட்டுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் .

நிறைவேற்று அதிகாரத்தைத் துறக்கும் நிலையிலேயே தற்போதய ஜனாதி பக். 23

## வடக்கு மக்களுக்காக பணிபுரியவே வந்தேன்

### பதவியேற்பு நிகழ்வில் நேற்று வடக்கு புதிய ஆளுநர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், பெப். 20

நான் ஆளுநராக அல்லாமல் ஒரு சேவையாளனாக, உங்களுக்கு பணிபுரிவதற்கு வந்துள்ளேன். என்னுடைய வாழ்க்கையில் எல்லா இன மக்களையும் மதிக்கிறேன். வடக்கில் நிலம், நீர் என பல பிரச்சினைகள் உண்டு. அவற்றுக்குத் தீர்வு காண பக். 25

### 26 கிலோ கஞ்சாவுடன் யாழ்.நகரில் மூவர் கைது

### பிரான்ஸில் வசிப்பவரும் ஒருவர்

யாழ்ப்பாணம், பெப். 20

26 கிலோ கிராம் கேரளக் கஞ்சாவை வைத்திருந்த குற்றச்சாட்டில் வெவ்வேறு சுற்றிவளைப்புக்களின் போது 3 பேரைக் கைது செய்துள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் பிரான்ஸ் பக். 24

## சரணடைந்தவர்கள் விவரம் உள்ளதா என்பது தெரியாது

### கைவிரிக்கிறார் இராணுவப் பேச்சாளர்

கொழும்பு, பெப். 20

போரின் இறுதிக் கட்டத்தில் படையினரிடம் சரணடைந்தவர்களின் பெயர்ப் பட்டியல் 58 ஆவது டிவிசன் படைத் தலைமையகத்தில் இருக்கின்றதா, இல்லையா என்பது தெரியாது.



இவ்வாறு தெரிவித்துள்ளார் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயநாத் ஜயவீர.

அத்துடன்,காணாமற்போன பக். 23

## புதைகுழி எனச் சந்தேகிக்கும் கிணற்றை தோண்ட உத்தரவு

### நேற்று பிறப்பித்தார் மன்னார் நீதிவான்

யாழ்ப்பாணம், பெப். 20

மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் புதைகுழி எனச் சந்தேகிக்கப்படும் இடத்தில் தோண்டி எடுக்கப்பட்ட 78 எலும்புக்கூடுகள் தொடர்பான விசாரணை அறிக்கை ஒன்று மன்னார் நீதி பக். 25



## 9ஆவது தேசிய ஜம்போறி இன்று யாழில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப். 20

இலங்கை சாரணர் சங்கத்தின் ஒன்பதாவது ஜம்போறி (சாரணர்களை ஒன்றிணைக்கும் பாசறை) நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளது.

நாடு முழுவதும் உள்ள மாவட் டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 8ஆயிரத்துக்கும் மேற்பட்ட சாரணர்கள் கலந்துகொள்ளவுள்ள இந்த சாரணர் பயிற்சிப் பக். 23



Digitized by Noolaham Foundation.

# மாணவி கொலையாளிகளுக்கு சாவுத் தண்டனை வழங்குங்கள்








வவுனியா,பெப்.20
வவுனியா–உக்கிளாங்குளம் பகுதியில் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சிறுமிக்கு நீதி வேண்டியும், அதனுடன் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்து தண்டனை வழங்கக் கோரியும் வவுனியா விபுலானந்தாக் கல்லூரி ஆசிரியர்களால் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று மேற் கொள்ளப்பட்டது.

அத்துடன் வவுனியா மகளிர் செயற்பாட்டு அமைப்பினரும் குற்றவாளிகளைக் கைது செய்து சாவுத் தண்டனை வழங்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆசிரியர்களால் மேற்கொள்ளப்பட்ட கவனவீர்ப்புப் போராட்டம் நேற்றுக் காலை சிறுமியின் உடலை அடக்கம் செய்வதற்காகக் கொண்டு செல்லும்போது ஆரம்பிக்கப்பட்டது.

சிறுமியை நல்லடக்கம் செய்வதற்கான கிரியைகள் அனைத்தும் முடிவடைந்து உடல் ஊர்வலமாக வீதியால் எடுத்துச் செல்லப்பட்டது.

மாணவியின் கொலைக்கு நீதி வேண்டி வவுனியா விபுலானந்தாக் கல்லூரி ஆசிரியர்களால் குறித்த கவன யீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தின்போது ஆசிரியர்கள், மாணவர்கள் கறுப்புப் பட்டிகளை அணிந்துதமது கண்டனங்களை வெளிப்படுத்தியிருந்தனர். இந்தக் கொலையுடன் சம்பந்தப்பட்ட வர்களை உடனடியாகக் கண்டுபிடிக்குமா றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்த இறுதிச் சடங்கின்போது பெருந்திரளான மக்கள் அங்கு கூடியிருந்தனர்.

வவுனியா –உக்கிளாங் குளப்பகுதியை சேர் ந்த 13 வயது பாடசாலை மாணவி கடந்த புதன்கிழமை நண்பகல் தனது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

சிறுமியின் தாயாரான ஆசிரியை பாடசாலைக்குச் சென்று வீட்டுக்கு திரும்பியபோதே சிறுமி தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டதாகத் தெரிவித்திருந்த சிறுமியின் தாயார், சிறுமி தூக்கில் தொங்கிய அறை அலங்கோலமாக்கப்பட்டிருந்தாகவும் கூறியிருந்தார்.

மருத்துவப் பரிசோதனையில் சிறுமி வன்புணர்வின் பின்னர் கொலை செய்யப்பட்டதாக நேற்றுமுன்தினம் வவுனியா சட்ட வைத்திய அதிகாரியால் தெரிவிக்கப்பட்டது. இதனை அடுத்து நேற்று முன்தினமே சிறு மியின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-ஜ-21-402)

# 2 குளங்கள் புனரமைப்பில் முறைகேடு; விசாரணை அறிக்கை இன்னும் இல்லை

யாழ்ப்பாணம், பெப். 20
முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள இரு குளங்களின் புனரமைப்பின் போது முறைகேடுகள் இடம்பெற்றதாகக் குற்றம் சுமத்தப்பட்டு அது தொடர்பில் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று வடக்கு மாகாண சபையில் தீர்மா னம் நிறைவேற்றப்பட்டு, ஆறு மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.

'விசாரணை அறிக்கையைத் தரு மாறு நினைவூட்டல் விடுத்த போதும், விசாரணையாளர்கள் அறிக்கையை இன்னமும் என்னிடம் சமர்ப்பிக்கவில்லை' என்று வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் அ.பத்திநாதன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு மற்றும் தண்ணிமுறிப்புக் குளங்கள் பெரிய நிதிச் செலவில் கடந்த 2013 ஆம் ஆண்டில் புனரமைப்புச் செய்யப்பட்டன. குறித்த குளப் புனரமைப்பின் போது முறையான நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என்றும், இதனால் அடுத்து வந்த ஆண்டின் மழைக்கு அணைக்கட்டுகள் அடித்



துச் செல்லப்பட்டன என்றும் விவசாய அமைப்புக்களினால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது.

இதன் பின்னர் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனால், இது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் என்றும், விசாரணை அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்படவேண்டும் எனவும் கோரும் பிரேரணை, மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டிருந்தது.

வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய, வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் அ.பத்திநாதன் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டிருந்தது. இந்தக் குழு, விசாரணைகளை முன்னெடுத்திருந்தது. இந்த விசாரணை அறிக்கை, கடந்த ஆண்டு இறுதிக்குள் சபை க்கு சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தபோதும், இன்னமும் சமர்ப்பிக்கப்படவில்லை.

இது தொடர்பில் வடக்கு மாகாணப் பிரதமசெயலாளரிடம் கேட்ட போது, விசாரணைக்கு அமைக்கப்பட்ட குழு தனது அறிக்கையைக் கடந்த ஆண்டின் இறுதியில் சமர்ப்பித்திருக்கவேண்டும். இருப்பினும், அவ்வாறு சமர்ப்பிக்காதமையினால் இது தொடர்பாக இரு முறை நினைவூட்டலும் அவர்களுக்கு அனுப்பி வைத்தோம். இருப்பினும் குறித்த அறிக்கை இன்னமும் கிடைக்கவில்லை என்றார். (த-5-101)

# மாணவி கொலையாளிகளை உடனடியாகக் கண்டறியுங்கள்

### வவுனியா பொலிஸிடம் கோரிக்கை

மன்னார். பெப். 20
வன்புணர்வின் பின் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்ட வவுனியா விபுலானந்தாக் கல்லூரி மாணவியின் கொலைக்குக் காரணமானவர்களைக் கண்டுபிடித்து உச்ச தண்டனையைப் பெற்றுக்கொடுக்க வவுனியாப் பொலிஸார் உடன் நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் ஆகியோர் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் இணைந்து விடுத்துள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வவுனியா மாணவியின் கொலைக்குக் காரணமானவர்கள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்புவதற்குச் சந்தர்ப்பம் வழங்கக்கூடாது.

இளம் பெண்களோ, பாட சாலை மாணவியோ வீட்டில் தனியாக இருக்க முடியாத ஆபத்தான சூழல் என்றால், நாடு பயங்கரமான நிலைமைக்குள் சென்று கொண்டிருப்பதை உணர்த்துகின்றது. குற்றவாளிகள் கைது செய்யப்படாமலிருப் பதும், கைது செய்யப்பட்டவர்கள் உரிய தண்டனை பெறாமல் தப்புவதுமே இந்த நிலைமைக்குக் காரணமாகும். எனவே வவுனியாப் பொலிஸார் விசாரணை களை உரிய முறையில் மேற்கொண்டு குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும்.

> இளம் பெண்களோ, பாடசாலை மாணவியோ வீட்டில் தனியாக இருக்க முடியாத ஆபத்தான சூழல் என்றால் நாடு பயங்கரமான நிலைமைக் குள் சென்று கொண்டிருப்பதை உணர்த்துகின்றது.

இதுதவிர, கொலை செய்யப்பட்ட சிறுமியின் வீட்டுக்குச் சென்று திரும்பிக்கொண்டிருந்த மாகாணசபை உறுப்பினர் இந்திரராஜா மீது நடத்தப்பட்ட தாக்குதலை மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம். தனிப்பட்ட குரோதம் காரணமாகவோ அல்லது தூண்டுதல் காரணமாகவோ இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் அல்லது அரசியல் காரணங்களால் கூட பழி வாங்கப்பட்டிருக்கலாம்.

எதுவாகவிருப்பினும், மாவட்டத்தின் உயர் நிலை அரசியல்வாதி ஒருவர் தாக்கப்பட்ட விடயத்திலும் பொலிஸார் உரிய நடவடிக்கை மேற்கொண்டு சம்பந்தப் [illegible] (த-4-56)



# தூவல் நீர்ப்பாசனத்தில் புதிய தொழில் நுட்பம்

### யாழ். பல்கலைக்கழக விவசாய பீட மாணவர்கள் சாதனை

கிளிநொச்சி.பெப்.20
கிளிநொச்சி வளாகத்தைச் சேர்ந்த யாழ். பல்கலைக்கழக விவசாய பீட மாணவர்கள் விவசாயத்துறையில் மேலும் ஒரு மாபெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளனர். தற் போது கால் ஏக்கர் பயிர்ச் செய்கைக்கு 65 ஆயிரம் ரூபா செலவில் மேற்கொள்ளப்படும் தூவல் நீர்ப்பாசனத்தை புதியமுறையில் அறி முகப்படுத்தி 5 ஆயிரம் ரூபா செலவில் மேற்கொள்ளும் வகையில் புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

அதற்கான பரீட்சார்த்த முயற்சியையும் மேற்கொண்டு அதில் வெற்றியும் கண்டுள்ளனர்.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன நனோ தொழில்நுட்பத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட 'ரெயின் கோஸ்' எனும் குழாயைப் பயன்படுத்தியே குறித்த தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தியுள்ளதாக விவசாய பீடத்தைச் சேர்ந்த மாணவர்கள் தெரிவித்தனர்.

இந்தப் புதிய தொழில்நுட்பத்துக்கு குறித்த குழாய்க்கான செலவே 5 ஆயிரம் ரூபா எனவும், தற்போது விவ சாயிகள் கால் ஏக்கர் பயிர்ச் செய்கைக்காக 65 ஆயிரம் ரூபாவைச் செலவிடுவதாகவும், அதற்கான மாற்றியீடாக குறித்த குழாயைப் பயன்படுத்தி வெறும் 5 ஆயிரம் ரூபாவுக்கு இந்தத் தூவல் நீர்ப்பாசனத்தை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளனர்.

மின்மோட்டரிலோ ,நீரிறைக் கும் இயந்திரத்திலோ நேரடியாகப் பொருத்தத்தக்க வகையில் எளிமையாகவும், விவசாயிகளினால் விளங்கக்கூடியதான வகையிலும் இது உற்பத்தி செய்யப்பட்டுள்ளமை இதன் சிறப்பாகும்.

சகலவிதமான மரக்கறிப் பயிர்ச் செய்கைகளுக்கும் இந்தத்தொழில் நுட்பம் மூலம் நீர்பாய்ச்ச முடியும். நீர்பாய்ச்சும் நேரமும் ஒரு நாளைக்கு10-20 நிமிடங்களாகக் குறைக்கப்பட்டுள்ளது என விவசாய பீட மாணவர்கள் மேலும் கூறினர்.

இதேபோன்று அண்மையில் கிளிநொச்சியைச் சேர்ந்த இளைஞன் ஒருவரால் அரிவு வெட்டும் இயந்திரமும், புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உரு வாக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-ஜ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்சேகாவின் எம்.பி. பதவிக்கு எதிராக வழக்கு

கொழும்பு, பெப் 20

முன்னாள் இராணுவத்தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு நாடாளுமன்ற உறுப்புரிமை வழங்கியமையை எதிர்த்து வழக்குத் தொடரப்பட்டுள்ளது. மாற்றுக்கொள்கைகளுக்கான கேந்திர நிலையம் உயர் நீதிமன்றில் நேற்று முன்தினம் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளது.

சபாநாயகர் கருஜயசூரிய, தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய மற்றும் சட்டமா அதிபர், ஐ.தே.க. பொதுச் செயலாளர் கபீர் ஹாசிம் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சரத் பொன்சேகாவுக்கு நாடாளுமன்ற உறுப்புரிமை வழங்கியமை சட்டவிரோதமானது என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசமைப்பின் 99ஆம் சரத்தை மீறும் வகையில், சரத் பொன்சேகா தேசியப் பட்டியல் நாடளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அந்த மனுவில் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டுக்கான பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சமர்ப்பித்த தேசியப்பட்டியல் உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியலில் சரத் பொன்சேகாவின் பெயர் உள்ளடக்கப்படவில்லை. இவ்வாறு நாடாளுமன்ற உறுப்புரிமை வழங்கியமை நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் வகையிலானது என சுட்டிக்காட்டியுள்ளது.

சரத் பொன்சேகாவின் நியமனத்திற்கு எதிராகத் தடையுத்தரவு பிறப்பிக்குமாறு நீதிமன்றில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சரத் பொன்சேகா நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்படுவதைத் தடுக்க இடைக்கால தடையுத்தரவு விதிக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கியதேசியக்கட்சியின்பொதுச் செயலாளர் கபீர் ஹாசிம், முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, சபாநாயகர் கரு ஜயசூரிய, நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க திஸாநாயக்க, தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (த-சி)

# சகல வழக்குகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டார் சிராணி

கொழும்பு, பெப்.20

முன்னாள் பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் தாக்கல் செய்யப்பட்ட சகல வழக்குகளில் இருந்தும் அவர் நேற்று விடுவிக் கப்பட்டுள்ளார்.

முன்னாள் பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக, கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில், இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த மூன்று வழக்குகளும் நேற்று விலக்கிக் கொள்ளப்பட்டன.

2010ஆம், 2011ஆம், 2012ஆம் ஆண்டுகளில் சொத்து விவரங்களை வெளியிடவில்லை என்று முன்னாள் பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக மூன்று வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

குறித்த வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்படவிருந்த நிலையில், இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் சார்பில் முன்னிலையான அரசதரப்புச் சட்டத்தரணி டிலான் ரத்நாயக்க, இந்த வழக்குகளை விலக்கிக் கொள்வதாக அறிவித்தார்.

இதையடுத்து, இந்த வழக்குகளில் இருந்து சிராணி பண்டாரநாயக்க விடுவிக்கப்படுவதாகவும், வெளிநாடு செல்வதற்கு அவருக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்படுவதாகவும் கொழும்பு பிரதம நீதிவான் கிகான் பிலப்பிட்டிய அறிவித்தார்.



மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத் தில் அரசுக்குச் சார்பாக நடந்து கொள்ளவில்லை என்பதால், சிராணி பண்டாரநாயக்க பழி வாங்கப்பட்டுப் பிரதம நீதியரசர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

புதிய அரசு அமைக்கப்பட்ட பின்னர், அவர் மீண்டும் பிரதம நீதியரசராக ஒரு நாள் பணியாற்றிய பின்னர், ஓய்வு பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-வ)

# இராணுவத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுங்கள்

### தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

வன்னிப் பிரதேசங்களில் கட மையாற்றுகின்ற பல ஆசிரியர்கள் அங்குள்ள விடுதிகளில் தங்கியிருந்து தமது அர்ப்பணிப்பான சேவையைச் செய்து வருகின்ற நிலையில், அவர்களுக்கு இராணுவத்தால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமைக்கு உரிய சட்ட நடவடிக்கை எடுக்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது.

இது தொடர்பில் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வன்னியில் தங்கி நின்று கல்வி கற்பிப்பவர்களில் அனேக ஆசிரியர்கள் பெண்கள். அவர்கள் தங்கியுள்ள விடுதிகள் இரவு நேரங்களில் தட்டப்பட்டு அங்குள்ள ஆசிரியர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர். இத்தகைய சம்பவம் முழங்காவில் மகாவித்தியாலயத்தில் தங்கியிருந்த பெண் ஆசிரியர்களின் விடுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்த விடுதிக்கு அருகில் இராணுவ முகாம் அமைந்திருப்பதாகவும், இராணுவத்தினரே இத்தகைய செயலில் ஈடுபட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

வன்னிப் பிரதேசம் தவிர்ந்த வெளிமாவட்டங்களைச் சேர்ந்த பல ஆசிரியர்கள் தமது குழந்தைகளையும், உறவுகளையும் விட்டுவிட்டு விடுதிகளில் தங்கியிருந்து தமது சேவையை ஆற்றிவரும் நிலையில், இத்தகைய சம்பவங்கள் அவ்வா சிரியர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளதுஎன அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ஜ-4)

# இலங்கை அதிபர் சேவைக்கு மார்ச் இறுதிக்குள் நியமனம்

### வழங்குமாறு கல்வி அமைச்சர் அறிவுறுத்து

கொழும்பு, பெப்.20

இலங்கை அதிபர் சேவை தரம் 3 இற்கான போட்டிப் பரீட்சையில் தெரிவான 4 ஆயிரத்து 76 பேருக்கான நியமனக் கடிதங்கள் மார்ச் மாதம் முடிவதற்கு முன்னர் வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு குறித்த நியமனங்கள் தொடர்பாக அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம்.

கடந்த 2005 ஆம் ஆண்டு இறுதியாக அதிபர் சேவையின் தரம் 3 இற்கு தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை நடைபெற்றிருந்தது. அதன் பின்னர் சேவை அடிப்படையிலேயே பதவி வெற்றிடம் பூரணப்படுத்தப்பட்டது. இதற்கமைவாக, 5 ஆயிரத்து 600 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு 19 ஆயிரம் பேர் விண்ணப்பித்திருந்தனர். இதில் தெரிவு செய்யப்பட 4,076 பேருக்கான நியமனங்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
19.02.2016 | 1944 | சிவப்பு
வெற்றி இலக்கங்கள்
03 08 39 61
ஞாயிற்றுக்கிழமை வெற்றிப் பொதி
ரூ. 3,260,920/-

நியத்த ஜய
வெற்றி எண் : 438
திகதி : 19.02.2016
வர்ணம் : நீலம்
விஷேட வெற்றி இலக்கம்
1296
12,019,380/-
02 15 19 45 S
Tel: 011 4 824 824

பதவி வெற்றிடம்
யாழ்.நகரில் இயங்கிவரும் மொத்த விற்பனை நிலையத்துக்கு A வகுப்பு சாரதி அனுமதிப்பத்திரம் உடையவர்கள் தேவை. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்பாக கிடைக்கக் கூடியவாறு தங்கள் சுயவிவரக் கோவையைக் கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
விளம்பர இல - 5095
மே/பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

விற்பனைக்கு
நல்ல நிலையிலுள்ள Bajaj Discovery விற்பனைக்கு உள்ளது.
NP UBxxxx Black Colour)
Tel: 077 8536 808 (69438)(10.17)

வீட்டுப்பணிப்பெண் தேவை
சிறிய வைத்தியர் குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து வேலை பார்ப்பதற்கு வீட்டுப்பணிப்பெண் ஒருவர் தேவை.
தொடர்புக்கு: 077 2626 944

வேலையாள் தேவை
யாழ்.கே.கே.எஸ் வீதியிலுள்ள பிரகாஸ் ரான்ஸ்போர்ட் நிறுவனத்திற்கு அலுவலக உத்தியோகத்தர் தேவை.
இருபாலாரும் திங்கட்கிழமை தொடர்பு கொள்ளவும். (69406) (14,18,20)
தொடர்பு: 077 538 9987

கணினி திருத்தம்
உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம்.
GUNA BEST PC Computer Repair
077 9086737 50/12, Hospital Road Jaffna. (Vairavar Kovil lane)
லப்டொப் கணினிகள் திருத்தம் விற்பனை பாவித்த கணினிகள் வாங்குதல்

SLEAS வகுப்புகள்
நடைபெறுகின்றது
வளவாளர்
பேராசிரியர் மா. சின்னத்தம்பி
CAPS No. 52, பலாலி வீதி, திருநெல்வேலி சந்தி (Near Sampath Bank)
தொடர்புகளுக்கு: 077 3867 458

கணினி மலிவு விற்பனை



BRANDED
HP DUAL CORE
24,750/= மட்டுமே.
Free :- W-Cam/8GB PEN/ H.Phone
ஒரு வருட உத்தரவாதம்
ST.ANTONY'S
187, K.K.S. Road, Jaffna Town.
(17 ஆவது வருட சேவையில்)
Cont: 021 222 4865
075 069 8608
(C/29181) (10.12.17)

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
Diploma in English 2 1/2 Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention
(c.29172) (13.20.18.17)
No.15 1/2, Siriampiyady Lane, (Above Sathosa SM) Jaffna. Tel :021-2224550
Hotlines 077 036 5728 0777585913, 0777222422, 071429935
கிழமை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்
Batch 1 : 22.02.2016
Batch 2 : 24.02.2016
Batch 3 : 27.02.2016
Batch 4 : 29.02.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்குண்டு

5 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தில் (யாழ் மாநகர சபை எல்லைக்குள்) சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. (69368)(15.17)

தொடர்புகளுக்கு: 077 6953 215, 077 3621 136

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி கலாசாலை வீதியில் 3பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (69406) (14,18,20)

தொடர்பு: 076 558 9752 (S.தர்மராஜா) 077 655 7086

## பெயர் மாற்றம்

அராலி தெற்கு, காளி கோயிலடி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த **இந்திரேஸ்வரன் கனீந்திரன்** ஆகிய நான் எனது பெயரை **இந்திரேஸ்வரன் ராஜினி** எனப் பெயர் மாற்றி சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

ராஜினி

(68529)(2.18.20)

## வேலையாள்கள் தேவை

மீசாலை புத்தூர்ச் சந்தியில் இயங்கி வரும் நிமல் வெல்டிங் கடைக்கு மோட்டார் சைக்கிள் திருத்தல் வேலை தெரிந்தவர்கள் உடனடியாகத் தேவை. (தங்குமிட வசதிகள் கொடுக்கப்படும்)

தொடர்பு: 077 345 6552 (60742) (11,18)

## மணமகன் தேவை

யாழ்.இந்து 1980 இல் பிறந்த 8இல் செவ்வாய் உள்ள அரச உத்தியோகத்தராகத் தொழில் புரியும் மணமகளுக்கு அரச தொழில் புரியும் மணமகன் தேவை. (69339)(1.18)

தொடர்புகளுக்கு:- 077 589 1016

## காணி விற்பனை

சுன்னாகம் சந்திக்கண்மையில் கே.கே.எஸ் வீதியில் கிழக்குப்பக்கமாக அமைந்திருக்கும் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு பின்புறமாக, 100m தூரத்தில் 7பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (69352) (14,18,20)

தொடர்பு: 071 480 6309

## IELTS UK KU Education

MBA(London) Qualified Trainer Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts
0777-302882 (A.G&L) IELTS Centre@KU
தனிப்பட்ட முறையில்,உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய,அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே முன்னணி நிறுவனம்.IELTS Life Skills-A1-B1
K.U Education.No 626 1/1,First Floor,K.K.S Rd,Jaffna.

## விற்பனைக்கு

நல்ல இன தென்னங்கன்று, புதிய இன மாங்கன்று, புதிய இன கமுகங்கன்று, றெட்லேடி பப்பாக்கன்று, தேக்கு, சவுக்கு, மலைவேம்பு, சமண்டலை, கயூ, வெற்றிலைக்கன்று, முருங்கு, ஈரப்பலா மற்றும் பழ மரக்கன்றுகளும், பூக்கன்றுகளும் விற்பனைக்கு உள்ளன. (69393) (14,18,20)

K.K.S வீதி, இணுவில். 077 612 9343

## மணமக்கள் தேவை

*1984 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 39½ பாவமுடைய MSc Bio கெமிஸ்ரி முடித்து அரச நிறுவனத்தில் பணிபுரியும் சைவபோசன மணமகளுக்கு டாக்டர், எஞ்ஜினியர் மணமகன் தேவை.

*1981 இல் பிறந்த 8இல் செவ்வாய் 47½ பாவமுடைய MSc IT முடித்து லண்டன் பிரஜா உரிமை பெற்ற சைவபோசன மணமகனுக்கு BSc சைவபோசன மணமகள் தேவை.

*1982இல் பிறந்த 2இல் செவ்வாய் 16½ பாவமுடைய அரச நிறுவனத்தில் பணிபுரியும் சைவபோசன மணமகனுக்கு சைவபோசன மணமகள் தேவை.

*1982இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 40 பாவமுடைய MBBS டாக்டர் சைவபோசனமுள்ள மணமகனுக்கு சைவபோசன மணமகள் தேவை.

*1974இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 37½ பாவமுடைய அரச நிறுவனத்தில் பணிபுரியும் சைவபோசன மணமகனுக்கு சைவபோசன மணமகள் தேவை.

*1980இல் பிறந்த 12 இல் செவ்வாய் 13¾ பாவமுடைய சைவபோசனமுள்ள சட்டத்தரணி மணமகனுக்கு சைவபோசனமுள்ள பட்டதாரி மணமகள் தேவை.

*1986இல் பிறந்த 8இல் செவ்வாய் 68½ பாவமுடைய அரச நிறுவனத்தில் பணிபுரியும் சைவபோசன மணமகளுக்கு பட்டதாரி மணமகன் தேவை.

தொடர்பு:
கமலக்கண்ணன் திருமண சேவை
இல.62, இராமலிங்கம் வீதி,
பூங்கனிச்சோலையடி, முடமாவடி.
077 607 0862

# மலையக மண் சரிவின் ஓராண்டு நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம்,பெப்.20
மலையக மண்சரிவின் எதிரொலியான மனித நேயப் பயணத்தின் ஓராண்டுநினைவு நிகழ்வு இன்று சனிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரமத்தில் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சிவத்திரு மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் துணைத்தூதுவர் ஆ. நடராஜனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். அரசஅதிபர் நா. வேத நாயகன், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் க. நந்தகுமாரன், பருத்தித்துறை பிரதேச செய லர் த. ஜெயசீலன், கிளிநொச்சி ஓய்வு நிலை மேலதிக அரச அதிபர் செ. ஸ்ரீநிவாசன், யாழ். மக்கள் வங்கி ஓய்வுநிலை பிராந்திய முகாமையாளர் சி. பத்மநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (த-ஐ-ரி)

# பரதநாட்டிய அரங்கேற்றம்

யாழ்ப்பாணம்,பெப்.20
ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி அருளக நுண்கலைக் கல்லூரி மாணவிகளின் பரதநாட்டிய அரங்கேற்றம் நாளை பிற்பகல் 2 மணிக்கு வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தலைவர் அகளங்கன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். உயர் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியனும், கௌரவ விருந்தினராக வடமாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளர் தி. விஸ்வரூபனும் கலந்துகொள்வர். (த-ஐ-ரி)

# மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு

சாவகச்சேரி,பெப்.20
மீசாலை வடக்கு சனசமூக நிலையத்தினர் பரீட்சைகளில் சித்தி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வை நாளை பிற்பகல் 3.30 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடத்தவுள்ளனர்.

நிலையத் தலைவர் சு.சண்முகம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தனும், சிறப்பு விருந்தினர்களாகச் சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் அ.விஜோராஜ், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வைத்திய கலாநிதி தி.குமணன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் பிரதேசத்தைச் சேர்ந்த தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை, ஜி.சி.ஈ சாதாரண தரம், உயர்தரம் ஆகிய பரீட்சைகளில் சித்தி பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். (த-ஐ-9)

## Mobile Phone திருத்தும் பாடநெறி



58th Batch Starts on 03-03-2016

*Smart Phone கள் உட்பட அனைத்து Phone களிலும் ஆரம்பம் முதல் கற்பிக்கப்படும்.
*சுயமாக வேலை செய்யும் அளவிற்கு பயிற்சி.
*இலவசமாக தகவல்கள் அடங்கிய CD & Handbook
*அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்

மாதம் 50,000 முதல் 100,000 வரை வருமானம் பெறும் நிரந்தர உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு.

ICS Education
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள்கோவிலுக்கு அருகாமையில்)
Registration :- 021 7306000
076 7013060

# ஜம்போறி நிகழ்வில் முத்திரைக்கண்காட்சி

யாழ்ப்பாணம், பெப்.20
இலங்கை சாரணியர் சங்கத்தால் நடத் தப்படும் ஜம்போறி நிகழ்வில் முத்திரைக்கண்காட்சியும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ்.பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த ஜம்போறி நிகழ்வு யாழ்.நகரில் முற்றவெளிப் பிரதேசத்தில் நடை பெறுகின்றது. முத்திரை சேகரிப்பாளர்களின் வசதி கருதி இந்த முத்திரைக் கண்காட்சியை யாழ். மத்திய கல்லூரியில் நடத்துவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த பல ஆண்டுகளாக வெளியிட்டு வைக்கப்பட்ட முத்திரைகள் யாவும் இந்தக் கண்காட்சியில் வைக்கப்படும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (த-ஐ-17)

## VACANCY IN MALAYSIA

ரெஸ்ரோறன்டில் ஆண்களுக்கான உடனடி வேலைவாய்ப்பு. (50 ஊழியர்கள் தேவை)
சம்பளம் RM 1000(1RM= 35 RUPEE)

யாழ்ப்பாணம்
072 226 9873
072 227 0117

அடிப்படை நிபந்தனைகள்
★ 3 வருடகால ஒப்பந்தம்
★ தங்குமிடம் வழங்கப்படும்
★ மருத்துவ செலவு,போக்குவரத்து செலவு வழங்கப்படும்
★ ஒப்பந்த காலம் முடிந்த பின் திரும்ப வருதற்கான பயணச்சீட்டு வழங்கப்படும்
★ 2 நேர சாப்பாடு வழங்கப்படும்
★ வேலை நேரம் கிழமைக்கு 48 மணித்தியாலங்கள் (ஒரு நாளுக்கு 8 மணியத்தியாலங்கள்)
★ வயது எல்லை 21 -35
★ ஏனைய அனைத்தும் மலேசிய தொழில் சட்டத்தின் கீழ் அமையும்
★ மேலதிக வேலை நேரத்திற்கு மாதத்திற்கு (RM 562) வழங்கப்படும்

Licence No- 1216 Job order no- AL/1216/32/16 SLBFE Approved Charged- Rs. 90,000/=


SIO INTERNATIONAL RECRUITMENT AGENCY
NO-77, FIRST FLOOR, PEOPLE'S PARK SHOPPING COMPLEX, GAS WORK STREET, COLOMBO-11, SRI LANKA.
Hot Line – 0727977977, 0722222377, 0722269876


# தென்மராட்சி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

சாவகச்சேரி,பெப்.20
தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறுமென பிரதேச செயலர்,திணைக்களத் தலைவர்களுக்கு அறிவித்துள்ளார்.

இந்தமாத முற்பகுதியில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும், இணைத் தலைவர்கள் வருகை தராததால் அது பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-ஐ-9)

## கடைகள், வீடு விற்பனைக்கு





பருத்தித்துறை வீதி,இருபாலை சந்தியில் இரு பக்கமும் றோட்டு அமைந்துள்ள நல்ல சுற்றாடல் கொண்ட பகுதியில் கடைகள், வீடு விற்பனைக்கு உண்டு. கீழ்பகுதியில் 7 கடைகளும் மேல் தளத்தில் 4 கடைகளும் அதனுடன் ஒரு ஹோலும் உள்ளது. கீழே அமைந்துள்ள வீட்டில் சமையலறை,குளியலறை, மலசலகூடம், 2 பெரிய ஹோல் அலுவலக அறை மற்றும் கிணறும், தண்ணீர்த் தாங்கியும், மேற்பகுதியில் 4 படுக்கை அறைகளும், சமையலறை பெரிய ஹோலும் அமைந்துள்ளது. இவையாவும் கொண்ட பெரியதொரு கட்டடத் தொகுதி உடனடியாக விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு A. [illegible]: 077 920 6280
077 945 1563

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

சுன்னாகம் மயிலணியில்.
சிவன் கோயிலுக்கு முன்னால் இரண்டு பரப்புக் காணி, 10 அடி பாதையுடன் விற்பனைக்குண்டு. (8.28354)(13.16)

தொடர்பு:077 071 2600

## தேவை

தொடர்பு: 077 470 7511

கொழும்பு நகரில் பெயின்ட் வேலை செய்வதற்கு பொட்டி வேலையில் அனுபவமுள்ளவர்கள் , உதவியாளர்கள் தேவை. (68528)(2.18.20)

## சாரதி தேவை


லொறி வாகனம் செலுத்த தெரிந்த சாரதி தேவை. சாரதி அனுமதிப்பத்திரம் அவசியம். யாழ் - கொழும்பு ஓடுவதற்கு. (69412) (14,18,20)

தொடர்பு: 077 102 3824

## கடைத்தொகுதி வாடகைக்கு

இலக்கம் 150 K.K.S வீதி, சுன்னாகம் என்னும் முகவரியிலுள்ள 4பரப்பு காணியுடன், கடைத்தொகுதியும் வாடகைக்கு வழங்கப்படும். கடைத்தொகுதி அமைப்பு வேலைகள் நடைபெறுகிறது. நிறுவனங்களின் தேவைக்கு ஏற்ப அமைத்துத் தரப்படும். (69415) (14,18,20)

தொடர்பு: 077 977 0732



## இணைத் தலைவரின் பங்குபற்றலுடன் பருத்தித்துறை ஒருங்கிணைப்பு கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.20
ஆளுநர் பதவியேற்பு நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இடம்பெறுவதால் ஒரு இணைத்தலைவரின் பங்குபற்றலுடன், பிரதேச செயலர் இல்லாத நிலையிலும் பருத்தித்துறை பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டம் நேற்றுக் காலை பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தலைமையில் இடம்பெற்றது.
முதலில் ராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கூட்டத்தில் பங்குபற்றி ஆரம்ப உரையை நிகழ்த்திவிட்டுக் கூட்டத்திலிருந்து வெளியேறிச் சென்றார்.
அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தபோதிலும் அவர்களும் கூட்டத்தில் இருந்து இடைநடுவில் வெளியேறிச் சென்றனர்.
வேறு எந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூட்டத்தில் கலந்து கொள்ளாமை மக்களுக்கு ஏமாற்றமளித்தது. கூட்டத்தில் மாகாண சபை உறுப்பினர்களான எம்.கே. சிவாஜிலிங்கம், சிவயோகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.
(த-ஐ-109)

## சமாதான நீதிவான்களின் ஒன்றுகூடல் திங்களன்று

கொழும்புத்துறை,பெப்.20
யாழ்.மாவட்ட சமாதான நீதிவான்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கண்டி வீதியில் உள்ள யாழ். மாவட்ட சர்வோதய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
இந்த ஒன்று கூடலில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட சர்வோதய இணைப்பாளர் சிறியுகேந்திரா கலந்து கொள்வார்.
சமாதான நீதிவான்களுக்கான புதிய நிர்வாக சபை அங்குரார்ப்பணம், சமாதான நீதிவான்கள் மற்றும் சமூக, சமய பெரியார்களை கௌரவித்தல் தொடர்பான கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.
அதேவேளை முன்னதாக தேசிய தேசோதய சபையின் மாதாந்தக் கூட்டமும் நடைபெறும். சபையின் உறுப்பினர்களுடன் கிராம அபிவிருத்திக் குழுக்கள், சிவில் சமூக குழுவின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு கருத்துக்களை தெரிவிக்கலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.
(த-ஐ-135)

## இலங்கை -ஜேர்மனி இடையே மூன்று ஒப்பந்தங்கள் கைச்சாத்து



பேர்ளின்,பெப்20
இலங்கை- ஜேர்மனி நாடுகளுக்கிடையில் மூன்று புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.
கல்வி, உயர் கல்வி, மொழி விருத்தி, இசை பற்றிய ஆய்வு, பாரம்பரியம் மற்றும் கலை பாதுகாப்பு, விளையாட்டு ஆகிய துறைகள் சார்ந்த ஒப்பந்தங்களே கைச்சாத்தாகியுள்ளன.
இலங்கை சார்பில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமர வீர மற்றும் இலங்கைக்கான ஜேர்மனி தூதுவர் கருணாதிலக அமுனுகம ஆகியோர் குறித்த ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளனர்.
இதேவேளை, ஜனாதிபதி மைத்திரியின் ஜேர்மனி பயணத்தின் பயனாக 14 மில்லியன் யூரோக்களை வழங்க, ஜேர்மனி அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.
இந்த நிதியில் ஆறு மில்லியன் யூரோக்கள் வில்பத்து சரணாலய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகவும், வடக்கு-கிழக்குக்கு நான்கு மில்லியன் யூரோக்களும், 2.4 மில்லியன் யூரோக்கள் சிறிய மற்றும் மத்தியதர தொழிற்துறை முன் னேற்றத்துக்காகவும் மீத முள்ள 0.6 மில்லியன் யூரோக்கள் உள்ளூராட்சிமன்ற மற்றும் பேராசிரியர்கள் போன்றோருக்காகவும் பயன்படுத்தப்படவுள்ளன.
அத்துடன் மேலும் ஒரு மில்லியன் யூரோ விசேட வேலைத்திட்டத்திற்காக வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இ






# சுழிபுரம் அருள்மிகு கதிர்வேலாயுத சுவாமி திருக்கோயில்

# புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம்

## 20.02.2016 மு.ப.10 மணிக்கும் 12 மணிக்குமிடையில் நடைபெறும்.

### ஆசிச் செய்தி

கந்தபுராணக் கலாசாரம் மகிமைகுன்றாத திருவருள் பொலிவுதரும் சுழிபுரம் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி புதிய அழகு சித்திரத்தேரிலே வலம் வர இருப்பது அற்புத காட்சியாகும். இப்பதி வாழ் மக்கள் செய்த புண்ணியம் முருகனின் புதிய தேர் வடம் பிடித்து இழுக்கப்போகின்றார்கள். தேர் மனிதனுடைய சரீரம் போன்றது. தேரின் சக்கரம் பாதம், கீழ் உத்தரம் முழங்கால், கீழ்தளம் தொடைகள், இரண்டாவதுதளம் இடுப்பு, மூன்றாவதுதளம் தொப்புள், நான்காவது தளம் வயிறு, ஐந்தாவதுதளம் சுவாமி வைக்கும் பீடம் இதயம், ஸ்தம்பங்கள் கைகள், தூண்களின் கொடுங்குகள் காதுகள், தேரின்மேல் பாகம் முகம், அதன்மேல் சாற்றப்படும் சேலை சிகை என சித்தரிக்கப்படும்.
ரதமானது ஆலயத்தின் கருவறையின் அமைப்பினைப் போன்றதாகும். இராசகோபுரத்தின் வடிவமாக அமைவது சப்பறம் என்னும் சகோபுரம் ஆகும். கோபுரத்திற்கு சமமாக அமைவதனால் சகோபுரம் எனப்படுகின்றது. ஸ்தூபியின் வடிவமாக காணப்படும் தேரானது ஆலயத்திற்குள் சென்று வழிபாடாற்ற முடியாதவர்களுக்கு இறைவனின் கருவறையோடு கூடிய தரிசனத்தினை கொடுப்பதாகும்.
அந்தவகையில் சுழிபுரம் பதியில் பெருமையும் கீர்த்தியும் அருளும் நிறையப்பெற்று மக்களுக்கு அனுதினம் அருள் சொரிந்து வரும் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமிக்கு புதிய சித்திரத்தேர் அமைக்கப்பெற்று உலா காண முயற்சித்திருப்பது மிகப் பெரிய புண்ணியப்பேறாகும். இச்சிவப்பணியில் ஈடுபட்ட அடியார்கள், அமைத்த கலைஞர்கள், உபயகாரர்கள், ஆலயத்தினர்கள், அடியவர்கள் அனைவரும் முருகனது திருவருளுக்கு பாத்திரமானவர்களாவர். அவனருளாலே அவன் தாள் வணங்கிய என்னும் வாக்கிற்கு அமைய முருகனது திருவருளே தேர்க்காட்சியை காணவைத்திருக்கின்றது. அருள் கிடைக்க ஆசீர் வதித்து வாழ்த்துகின்றேன்.

"சந்நிதாச்சாரியார்"
சிவஸ்ரீ. சபா. வாசுதேவக்குருக்கள்
அமைப்பாளர், வீணாகான குருபீடம்
குருமார் சந்நிதானம் சித்தன்கேணி.

### வாழ்த்துச் செய்தி

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் தரணி சுழிபுரம். அங்கு அருள் வாரி வழங்கும் பல்வேறு ஆலயங்களில் ஒன்றாகப் பெருமையுடன் விளங்குகின்றது சுழிபுரம் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில். அருள் வாரி வழங்கும் இவ் ஆலயத்திற்கு சித்திரத்தேர் இல்லாத குறைபாட்டை நீக்குவதற்காக பரிபாலன சபையினர் மேற்கொண்ட கூட்டு முயற்சியாலும் ஊரவர்கள் யாவரினதும் கொடைச்சிறப்பினாலும் வெளிநாடு வாழ் இவ் ஊர் மக்களின் தாராள பேராதரவாலும் புதிய சித்திரத் தேர் உருவாக்கமும் புதிய சித்திரத்தேர் தரிப்பிடமான தேர்க் கொட்டகையும் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. மேலும் இதர ஆலயத் திருப்பணி வேலைகளும் பல அன்பர்களின் தாராள கொடைக் கைங்கரியங்களினால் மிக வேகமாக நடைபெறுகின்றன.
ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி திருக்கோயிலின் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் இன்று நடைபெறுவதை இட்டு மிக மகிழ்ச்சி அடைகின்றேன். இத் திருப்பணிக்கு தாராள கொடையளித்த அன்பர்கள் அனைவருக்கும் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமியின் அருள் கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.

திரு.ந.சூரியகுமார்
தலைவர், சுழிபுரம் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில்
(அதிபர், யா/சுதுமலை வடக்கு தமிழ் கலவன் வித்தியாலயம்)

### ஆசிச் செய்தி

துஜாரோகணம் (கொடியேற்றம்) ஆரம்பமாகி 9ஆம் நாள் தேர்த்திருவிழாவுக்காக புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் இன்று 8ஆம் நாள் நடைபெறுவதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற பஞ்சபூதங்களையும் மையமாகக் கொண்டு அவதரித்த ஆறுமுகசாமி கடந்த காலங்களில் செயற்கைத் தேரிலேயே வலம் வந்து அடியார்களுக்கு காட்சியளித்தார். இந்த வருடம் சுழிபுரம் வாழ் அடியார்கள் மட்டுமல்லாமல் நாடு கடந்து கடல் தாண்டி, வாழுகின்ற சகல அடியார்களின் பெரும் பங்களிப்புடன் இந்த வருடம் ஆறுமுகப் பெருமானுக்கு புதிய சித்திரத்தேர் நிர்மாணிக்கப்பட்டு இன்று வெள்ளோட்டம் நடைபெறுவதையிட்டு நான் பெரும் மகிழ்ச்சி அடைவது மட்டுமல்லாது நாளை நடைபெறும் தேர் விழாவின் ஆறுமுகப்பெருமானின் அருள் சகல அடியார்களுக்கும் கிடைக்க வேண்டுமென்று ஆறுமுகப் பெருமானின் பாதம் பணிந்து மனம், மொழி, மெய்யால் வணங்கி நல்லாசி கூறுகின்றேன்.

முன்னாள் மஹோற்சவ பிரதிஷ்டா குருவும் ஆலயகுருவுமாகிய
சிவஸ்ரீ சி.சிவசுப்பிரமணியக் குருக்கள், சுழிபுரம்.

### தீமைகள் அழியட்டும்

ஒரு ஊரிலே தேர் ஒன்று அமைக்கப்பட்டால் அந்த ஊரிலே இருக்கின்ற தீமைகள் அனைத்தும் அன்றோடு அழிந்து விடும் என்பர். ஒரு இரதம் அமைப்பதன் மூலம் ஒரு திருப்பணி நடைபெறுகின்றது என்றால் அது ஊருக்காக ஏற்படும் ஆத்மீகக் கீர்த்தி என்று தான் சொல்ல வேண்டும். அன்று திரிபுவங்களாகிய மும்மலங்களை அழிக்க பரமசிவன் பஞ்ச பூதங்களையும், சூரிய சந்திரனையும் உள்ளடக்கி வேதங்களை குதிரைகளாக்கிப் பூட்டி, அதன் மூலம் அமைக்கப்பட்ட தேரில் சென்று சம்காரம் செய்ததால் ஆன்மீக விடுதலை பெற்றதாக சிவபுராணங்கள் பேசுகின்றன. அன்று போல் இன்றும் நம் ஊரில் ஒரு திருத்தேரை பல திருத் தொண்டர்கள் பெருந்திருமுயற்சியால் உண்டாக்கியிருக்கின்றார்கள். இவர்களது முயற்சியினால் உருவான இத்திருத்தேர் எம் முருகமூர்த்தியை தாங்கி பவனி வந்து எம் பக்தர்கள் தாங்க முடியாத இன்னல்களையும் உலகமக்களின் துன்பங்களையும் போக்கட்டும். இப்பணிக்கு அன்பளிப்புச் செய்தவர்கள், ஸ்தபதியார் சிற்பாச்சாரியார் இசை, நடனக் கலைஞர்கள் அனைவருக்கும் பரிபூர்ணமான திருவருள் கிடைக்க தனிப்பெரும் தெய்வமாகிய கதிர்வேலாயுத சுவாமி திருப்பாதங்களை வணங்கி அவரது திருவருள் கிடைக்க எனது நல்லாசியை கூறுகின்றேன்.

மகோற்சவகுரு
சிவஸ்ரீ. சு. ரங்கநாதக் குருக்கள்

### ஆசிச் செய்தி

கதிர்வேலாயுதா என் பிறப்பு எடுத்த ஊரில் உனக்கு தேர் அமைத்த சந்தர்ப்பம் மகிழ்ச்சி அளிக்கின்றது. இத்தேரை அமைக்க சந்தர்ப்பம் அளித்த கதிர்வேலாயுத சுவாமி பரிபாலனை சபையினருக்கு நன்றி தெரிவிக்கின்றேன். இத்தேரை எனது கலைக்கூடம் சிற்ப சாஸ்திர முறைப்படி அழகுற நிர்மாணித்துள்ளது. இத்தேர் இன்று (20.02.2016) வெள்ளோட்டம் நடைபெறுகின்றது. இத்தேர் வடம்பிடித்து ஊர் கூடி இழுத்து மகிழ இறைவனடி வேண்டி நிற்கின்றேன்.

ஸ்தபதி விஸ்வப்பிரம்மஸ்ரீ. சிற்பகலாதிலகம். கி.சந்திரமோகன்.

### ஆசிச் செய்தி

செந்தமிழ் வளர்ச்சியிலும் சிவநெறி ஈடுபாட்டிலும் சிறந்து நிற்பவர்கள் சுழிபுரம் வாழ் இந்துக்கள். இவர்களின் இந்த தேர் நிர்மாணம் ஆழமான தத்துவப் பொருள்களை விளக்கி நிற்கும் அதாவது பிரபஞ்ச சிருஷ்டி அனைத்தும் அடங்கியதாய் முழு உலகமுமே தேரின் வடிவமாக காட்சி அளிக்கும். அதன் அடித்தளத்தில் சிற்பங்களாகச் சித்தரிக்கப்பட்டிருப்பனவற்றை அவதானிப்போமானால் பிரபஞ்ச உற்பத்தி மானுட வாழ்க்கையின் தொடக்கம் முடிவு ஆகியவற்றைக் குறிப்பனவாகும். எனவே இவ்வுலக வாழ்க்கையைத் தேர்ந்து கொள் என்பதே தேர்.
திருக்கோயில்களை அமைத்தல் காத்துப் பரிமாற்றல், புனருத்தாரணம் செய்தல் மக்களின் கடமையாகும். முருகன் அடியார்களினதும் ஏனைய சைவ சமய அபிமானிகளினதும் பொருள், பணம், சரீர உதவியினால் திருத்தேர் உருப்பெற்றமை முருகன் திருவருளே. கோயில்கள் அவை அமையும் ஊருக்குப் பெருமை தருவன. அவையின் தரம் ஊரின் தன்மையையும், மக்களையும் பிரதி பலிப்பன. ஊரின் வளம், செல்வம், பண்பு, அறிவு, ஆற்றல், புகழ், சிறப்பு, கலை, கலாசாரம் யாவும் கோயில்கள் மூலம் அறியலாம். கட்டுத்தேரில் பவனி வந்த ஆறுமுகத்திறைவன் வள்ளி தெய்வானை சமேதரராய் புதிய சித்திரத்தேரில் உலா வருவதற்கு உதவிய அன்பர்கள் ஊர் மக்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள் உளமார எமது ஆசிகளை வழங்குகின்றேன்.

மு. பாலகுருசாமி சர்மா
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம் - பறளாய் சுழிபுரம்.

(C/28459)(10.17.20)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுக்கரை நன்னீர் மீன் சந்தை திறப்பு



மன்னார்.பெப்.20
வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சால் ரூபா 2.5 மில்லியன் செலவில் அமைக்கப்பட்ட கட்டுக்கரை நன்னீர் மீன்சந்தை நேற்று முன்தினம் மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகையால் மக்கள் பாவனைக்குத் திறந்து வைக்கப்பட்டது.

மன்னார் நானாட்டான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட முருங்கன் நகரின் கட்டுக்கரைக் குளத்தை அண்டியதாக அமைக்கப்பட்ட குறித்த சந்தையானது வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சால், நன்னீர் மீன்பிடியாளர்களை வாழ்வாதாரத்தில் உயர்த்தும் நோக்கோடு குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடையின் கீழ் ரூபா 2.5 மில்லியன் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்தை திறப்பு விழாவின் போது குறித்த பிரதேசத்துக் குட்பட்ட 6 நன்னீர் மீன்பிடிச்சங்கங்களுக்கு 32 குல்லாக்களும், கட்டுக்கரையைத் தளமாகக் கொண்ட 7 சங்கங்களுக்கு 60 உயிர்காக்கும் அங்கிகளும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் மன்னார் மறை மாவட்ட குருமுதல்வர், முருங்கன் பங்குத்தந்தை, மெதடிஸ்த திருச்சபையின் போதகர், இந்து மத குருக்கள் ஆகிய மதத் தலைவர்களும், வணிக கைத்தொழில் அமைச்சர ரிசாத் பதியுதீன், வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் ரிப்கான் பதியுதீன், நானாட்டான் பிரதேச செயலாளர் என். பரமதாசன் ஆகியோரும்,கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், கட்டுக்கரைக் குளத்தையொட்டிய நன்னீர் மீன்பிடிச் சங்கங்கள், பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (த-ஜ-21)

# விதவைகளுக்குத் திருமணம்; சிவன் பவுண்டேசன் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.20
கடந்த காலப் போர் நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டு விசேட தேவைக்குட்பட்டவர்களாக மாறியுள்ளவர்கள், விதவைகள் போன்றோருக்குத் திருமணம் செய்து வைப்பதற்கு சிவன் பவுண்டேசன் நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இவ்வாறானவர்கள் இருப்பின், நெல்லியடியிலுள்ள அமைப்புடன் தொடர்பு கொள்ளுமாறு சிவன் பவுண்டேசன் நிறுவுனர் கணேஸ்வரன் வேலாயுதம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் மத்தியில் போரினால் விசேட தேவையுடையவர்களாக ஆக்கப்பட்ட ஏராளமான இளம் இளைஞர் - யுவதிகள் உள்ளனர்.

கணவனை இழந்த விதவைப் பெண்கள் ஏராளமானவர்கள் உள்ளனர். ஒரு விதவைப் பெண்ணுக்கு மறு மணம் முடித்துக் கொள்வதற்கான சமூக அங்கீகாரம் கிட்டுவதில்லை. வாழ வேண்டிய பருவ வயதில் வேறு திருமணம் முடித்துக் கொடுப்பதற்கு அவர்களுடைய பெற்றோர்கள் சிந்திப்பதில்லை. பாதுகாவலர்களும் சிந்திப்பதில்லை.

இப்படிப்பட்ட வாழ்க்கை முறைக்குள் சிக்குண்டு வாழும் விசேட தேவையுடையவர்களாக இருந்தாலும் சரி, விதவைகளாக இருந்தாலும்சரி ஒன்றிணைத்து மறு வாழ்வளிப்பதே எம்மைப் பொறுத்தவரை உண்மையான மக்கள் நலன் சார் சேவையாக இருந்து கொண்டிருக்கிறது.

இதற்கான பணியைச் சிவன் பவுண்டேசன் அமைப்பு முன்னெடுக்கவுள்ளது. முதற்கட்டமாக நாம் விசேட தேவையுடையவர்கள் விடயத்தில் கவனம் எடுத்து தகுதிக்கும் தகைமைக்கும் ஏற்ப திருமணத் தம்பதிகளாக சேர்த்து வைக்கவுள்ளோம்.

அவர்களுக்கு ஆரம்ப அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் சரியான திசையில் இலக்குகளை அடைவதற்குத் தேவையான ஆலோசனைகளையும் வசதி வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளோம்.

தேவைக்கு ஏற்ப அல்லது பொருத்தப்பாட்டிற்கேற்ப தம்பதிகளைத் தெரிவு செய்வதற்காக நாங்கள் விண்ணப்பங்கள் கோரவுள்ளோம். அந்த விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து அவர்களின் கருத்துக்களையும் விருப்பங்களையும் அபிலாசைகளையும் பெற்றுக் கொண்ட பின்னரே இரு தரப்பினரையும் தம்பதிளாகச்சேர்த்து வைக்கும் முயற்சியில் ஈடுபடுவோம் - என்றார். (த-ஜ-5)

# வாகனத்தில் மாடு கடத்தியோரை மறைந்திருந்து பிடித்தது பொலிஸ்

சாவகச்சேரி,பெப்.20
பொலிஸாருக்கு டிமிக்கி கொடுத்து மாற்றுப் பாதை ஊடாக மூன்று மாடுகளைக் கடத்திய பட்டா படி வாகனத்தை, மறைந்திருந்து பொலிஸார் மடக்கிப் பிடித்ததோடு, அதில் பயணித்தமூவரையும்கைதுசெய்துள்ளதாகத் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த புதன் கிழமை வரணி குடமியனில் இடம்பெற்றது.

ஏ- 9 வீதி ஊடாக வாகனத்தில கொண்டு வரப்பட்ட மாடுகளை கொடிகாமம் நகரப் பகுதிக்குச் செல்லாமல், மிருசுவில் குடமியன் ஊடாக வடமராட்சிக்குக் கொண்டு செல்கையில் குடமியன் பகுதியில் மறைந்திருந்த பொலிஸாரிடம் வசமாக மாட்டிக் கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸார் இந்த மூவருக்கு எதிராக மிருக வதைச் சட்டத்தின் கீழ் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து மூவரையும் நீதிமன்றில் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிவான் மூவரையும் எதிர்வரும் மூன்றாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் ஒரிரு வாரத்தில் மாடுகளை சித்திரவதைப்படுத்தும்வகையில்வாகனங்களில் ஏற்றிச்செல்லப்பட்ட போது, பொலிஸாரிடம் அகப்பட்ட மூன்றாவது சம்பவம் இதுவாகும்.

சாவகச்சேரி பொலிஸாரால் மட்டுவில் பகுதியில் வைத்து 12 மாடுகளை ஏற்றிவந்த இரு வாகனங்களையும், நுணாவில் பகுதியில் வைத்து 9 மாடுகளை ஏற்றி வந்த இரு வாகனங்களையும் கைப்பற்றி வாகனங்களில் மாடுகளைக் கொண்டு வந்த சாரதிகள் உட்பட ஆறு பேரை நீதிமன்றில் முற்படுத்தியபோது முதல் வழக்கில் பதில் நீதிவான் எம்.எச். எம்.ஹம்சா இருவருக்கு தலா 2 ஆயிரத்து 500 ரூபா வீதமும், மற்றவருக்கு 5 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதித்தார்.

மற்ற வழக்கில் நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் இருவருக்கு தலா 8 ஆயிரம் ரூபா வீதமும், மற்றவருக்கு 10 ஆயிரம் ரூபாவுமென 26 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-ஜ-4-9)

# வவுனியா விவசாயக் கல்லூரியின் வெளிக்களக் கண்காட்சி ஆரம்பம்



வவுனியா,பெப்.20
இலங்கை விவசாயக்கல்லூரிகளின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு வவுனியா விவசாயக்கல்லூரியில் இடம்பெறும் வெளிக்களக் கண்காட்சி நேற்று முன்தினம் விரிவாக்கற் பயிற்சிப் பிரிவின் மேலதிக விவசாயப் பணிப்பாளர் திருமதி ரணதுங்கவினால் ஆரம்பித்து வைக்கப் பட்டது.


கல்லூரியின் அதிபரும் பிரதி விவசாயப் பணிப்பாளருமான திருமதி குமுதினி சந்திரகாந்தன் தலைமையில் இடம் பெற்ற இந்த வெளிக்களக் கண்காட்சி தொடர்ந்து கல்லூரி வளாகத்தினுள் இடம்பெறவுள்ளது.

ஆரம்ப நிகழ்வில் வடக்கு மாகாண விவாசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார், வவுனியா மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி எல்.பிருந்தா ஈஸ்வரன், மட்டக்களப்பு மாவட்ட விவசாயப் பணிப்பாளர் ஆர்.சிவநேசன் ஆகியோர் உட்பட விவசாயப் பணிப்பாளர்கள், பிரதி விவசாயப்பணிப்பாளர்கள் ஆகியோர் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை விவசாயக்கல்லூரியின் மாணவர் ஒன்றியத்தினால் வெளியிடப்பட்ட தூறல் நூற்றாண்டு சிறப்புமலர் வெளியீடும் விவசாயக்கல்லூரியின் அதிபரும், பிரதி விவசாயப்பணிப்பாளருமான திருமதி குமுதினி சந்திரகாந்தன் தலைமையில் கல்லூரியின் அச்சுதன் மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக விரிவாக்கற் பயிற்சிப்பிரிவின் மேலதிக விவசாயப் பணிப்பாளர் திருமதி ரணதுங்க கலந்து கொண்டதுடன் நூலையும் வெளியிட்டு வைத்தார். நூலின் முதற்பிரதியை நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட வடமாகாண விவசாயப்பணிப்பாளர் எஸ். சிவகுமார் பெற்றுக்கொண்டார். (த-ஜ-2)

## கண்ணீர் அஞ்சலி




எமது பாடசாலை ஆசிரியை
திருமதி துளசி நவரட்ணராஜா
அவர்களின் தந்தையான
அமரர் தம்பிமுத்து மயில்வாகனம்
(ஓய்வுநிலை அதிபர் - நீர்வேலி றோ.க.த.பாடசாலை)
அவர்களின் பிரிவுத் துயரையிட்டு
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
நலன்புரி கழகம்,
யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.
(69430)
(11,17,18)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியரான
திரு.ஜோண்சன் ராஜ்குமாரின்
அன்புச் சகோதரன்
யோசேப் அன்ரன் ஜெயக்குமார்
அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரியர் நலன்புரிகழகம்
யா/திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலை, யாழ்ப்பாணம்.
(69409)
(13.18)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
செல்லையா
ஸ்ரீஸ்கந்தராசா (நந்தன்)
திதி: 20.02.2016 (பூர்வபக்க திரயோதசி)

ஆண்டு ஒன்று போனாலும்
ஆறாத காயங்கள் நெஞ்சினிலே
மீண்டும் வரமுடியாத நினைவுகளில்
மனம் நினைந்திருக்கும் உங்களையே !
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்
கரணவாய் கிழக்கு, கரவெட்டி.

மலர்வு 22.10.1962
உதிர்வு 03.03.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு பரவும் சூழல்; 87 பேருக்கு வழக்கு

## 4 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில்

யாழ்ப்பாணம், பெப்.20

டெங்குத்தொற்று அதிகமாகக் காணப்பட்ட 4 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளில், டெங்கு பரவும் விதத்தில் சுற்றாடலைப் பேணிய 87 குடும்பங்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தொடுத்துள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் டெங்குத் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் டெங்குத் தடுப்புப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த காலத்தில் டெங்குநோய்த் தாக்கம் யாழ். மாவட்டத்தில் அதிகரித்ததைத் தொடர்ந்து அதனைக் கட்டுப்படுத்தும் முகமாக சுகாதார அமைச்சினால் அறிவிக்கப்பட்ட விசேட டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் கடந்த வாரம் 11 ஆம், 12 ஆம், மற்றும் 13 ஆம் திகதிகளில் முன்னெடுக்கப்பட்டன.

இந்தத் திட்டத்தில் அதிகமாக டெங்கு நோய்த்தொற்றுக் காணப்படும் பிரதேசங்களாக இனங்காணப்பட்ட யாழ். மாநகர சபைப் பிரதேசம், சாவகச்சேரி, தெல்லிப்பழை, கரவெட்டி ஆகிய இடங்களில் டெங்குக்கட்டுப்பாட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

யாழ். சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இடம்பெற்ற விசேட டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையின்போது கடந்த 11, 12, 13 ஆகிய திகதிகளில் மொத்தமாக 2 ஆயிரத்து 604 வீடுகள் தரிசிக்கப்பட்டு, அவற்றில் நுளம்பு பரவுவதற்கான சாத்தியக் கூறுடன் சுற்றுச் சூழல் துப்புரவின்றி ஆயிரத்து 16 வீடுகள் இனங்காணப்பட்டன. வீடுகளைப் பார்வையிட்ட அன்றே 684 வீடுகள் துப்பரவும் செய்யப்பட்டன. அத்துடன் நுளம்புக் குடம்பிகள் 78 வீடுகளில் கண்டுபிடிக்கப்பட்டு மொத்தமாக 36 குடியிருப்பாளர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.


> கடந்த காலத்தில் டெங்குநோய்த் தாக்கம் யாழ். மாவட்டத்தில் அதிகரித்தைத் தொடர்ந்து அதனைக் கட்டுப்படுத்தும் முகமாக சுகாதார அமைச்சினால் அறிவிக்கப்பட்ட விசேட டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் கடந்த வாரம் 11 ஆம், 12 ஆம் மற்றும் 13 ஆம் திகதி களில் நடைபெற்றன.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நடைபெற்ற 3 நாள் டெங்குச் சோதனையில் மொத்தமாக இரண்டாயிரத்து 528 வீடுகள் தரிசிக்கப்பட்டு, ஆயிரத்து 149 வீடுகளில் நுளம்பு பரவுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்பட்டன. அன்றே ஆயிரத்து 79 வீடுகள் சுத்திரிகரிக்கப்பட்டன. இந்த நடவடிக்கையில் 35 வீடுகளில் நுளம்புக் குடம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டு 42 குடியிருப்பாளர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இதேபோல் சாவகச்சேரி சுகா தார வைத்திய அதிகாரி பிரிவில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் சோதனையிடப்பட்ட மூன்று தினங்களிலும் 2 ஆயிரத்து 634 வீடுகள் தரிசிக்கப்பட்டு, 766 வீடுகளில்நுளம்பு பரவுவதற்குஏதுவான சூழ்நிலைகள் இனங்காணப்பட்டன. மேலும் அன்றைய தினமே 651 வீடுகள் துப்பரவு செய்யப்பட்டன. 28 வீடுகளில் நுளம்புக் குடம்பிகள் இனங்காணப்பட்டுள்ளன.

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த மூன்று தினங்களும் மேற்கொள்ளப்பட்ட டெங்குப்பரிசோதனை நிகழ்வில் ஆயிரத்து 549 வீடுகள் தரி சிக்கப்பட்டு, அதில் 666 வீடுகளில் நுளம்பு பரவுவதற்கான சாத்தியக்கூறுகள் இனங்காணப்பட்டன. இதில் 530 வீடுகள் அன்றைய தினமே துப்புரவு செய்யப்பட்டன. இந்தப் பிரதேசத்தில் 14 வீடுகளில் நுளம்புக் குடம்பிகள் இனங்காணப்பட்டு 9 குடியிருப்பாளர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த மூன்று நாள் விசேட டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையின் போது பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்தோர் மற்றும் சுகாதாரத் தொண்டர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள், பொலிஸார், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொதுநிறுவனப் பிரதிநிதிகள், சுகாதாரப்பாது காவலர்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது (த-ஐ-ரி-17-9)



வடமராட்சி கிழக்குப் பிரதேச மக்களுக்கான ஆவணங்களைப் பதிவு செய்தல் தொடர்பான நடமாடும் சேவை நேற்று முன் தினம் மருதங்கேணியில் உள்ள பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. பிரதேச செயலர் க.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற சேவையில் பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ்கள், தேசிய அடையாள அட்டை தொடர்பான பதிவுகளும் இடம்பெற்றன. (த-ஐ-9)

# பன்றித்தலைச்சி அம்மன் ஆலய பொங்கல் ஏற்பாடுகள் ஆரம்பம்

சாவகச்சேரி,பெப்.20

மட்டுவில் வடக்கு, பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் எதிர்வரும் மார்ச் மாதம் 14 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து ஐந்து திங்கட்கிழமைகள் நடைபெறவுள்ளன.

ஆலய பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் தென்மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் ஆலய தர்மகர்த்தா , சாவகச்சேரி பிரதேச சபை பிரதேச செயலக அலுவலர்கள், பொலிஸார், சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர், முதலுதவிச் சங்கத்தினர், சாரணர் இயக்கப் பிரதிநிதிகள் உட்பட சம்பந்தப்பட்ட பலர் கலந்து கொண்டனர்.

பொங்கல் நாள்களில் வழமை போல் சாவகச்சேரி பிரதேச சபை குடிநீர் மற்றும்சுகாதார வசதிகளை வழங்குவதோடு இ.போ.ச. மற்றும் தென்மராட்சி தனியார் பஸ் சங்கம் விசேட போக்குவரத்து சேவைகளையும் நடத்தவுள்ளன.

பொங்கல் வேளைகளில் பெருமளவு அடியார்கள் வருகை தருவர் எனஎதிர்பார்க்கப்படுவதால் பொங்கல் நாள்களில் பெருமளவு பொலிஸாரைக் கடமையில் ஈடுபடுத்துவது என்றும், அவர்களுக்கு உதவியாக பாடசாலைகளின் சாரணர்களை கடமையில் ஈடுபடுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆலயக் கிணறுகள் மற்றும் தீர்த்தக்கேணி ஆகியவற்றுக்குக் குளோரின் இடப்பட்டு பொது மக்கள் பாவனைக்கு வழங்குவது என்றும், ஆலயக்கேணியில் குளிப்போர் சோப் மற்றும் ஷம்போக்கள் பாவிப்பதைத்தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

ஆலயச் சுற்றாடலில் வழமை போல் வணிக நிலையங்கள் அமைக்கப்பட்டுக் கண்காணிக்கப்படல் வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. (ற-ஐ-9)

## தபாலகங்கள் இனி இரவு 9 மணிவரை

போக்குவரத்துப் பொலிஸாரினால் விதிக்கப்படும் தண்டப் பணத்தை அறவிடுவதற்காக, வடக்கு மாகாணத்திலுள்ள தபாலகங்களை இரவு 9 மணி வரை திறக்குமாறு தபால்மா அதிபர் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய நான்கு மாவட்டங்களின் தபாலகங்கள் இரவு 9 மணிவரை திறக்கப்பட வேண்டும்.

போக்குவரத்துப் பொலிஸார் வாகனங்களைச் சோதனை செய்யும்போது அதற்கான வாகன அனுமதிப் பத்திரம், காப்புறுதிச் சான்றிதழ், வாகன வரி அனுமதிப் பத்திரம் போன்றவை இல்லாத காரணத்தினால் தண்டம் விதிக்கப்படுகின்றது.

வாகனத்தைச் செலுத்துவோரின் வசதி கருதியும், தபாலகங்களில் அவற்றைச் செலுத்தி உடன் பற்றுச் சீட்டைப் பெற்று பொலிஸ் நிலையங்களில் சமர்ப்பித்துக் குற்றத்தை இரத்துச் செய்ய வசதியாகவும் தபாலகங்கள் இரவு 9 மணி வரைக்கும் திறக்கப்பட வேண்டும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ஐ-17)

## சான்றுப் பொருள்களான அலைபேசிகளை உரியவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை

சாவகச்சேரி, பெப். 20

சாவகச்சேரி நீதிமன்றில் சான்றுப் பொருள்களாக வைக்கப்பட்டுள்ள அலைபேசிகளைப் பெற்றுக் கொள்ள சம்பந்தப்பட்ட வழக்குகளுடன் தொடர்புடையவர்களை நீதிமன்றுடன் தொடர்பு கொள்ளுமாறு நீதிமன்ற நீதிவான் நேற்று முன் தினம் நீதிமன்றில் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நீதிமன்றில் சான்றுப் பொருளாக அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த அலைபேசி பற்றரி வெடித்துத் தீப்பற்றிக் கொண்டதில், அலுமாரிக்குள் காணப்பட்ட ஒரு சில சான்றுப் பொருள்கள் தீயில் சிறு சேதங்களுக்கு இலக்காகிச் சேதமடைந்துள்ளன.

நீதிமன்றச்சான்றுப்பொருள்கள் பராமரிக்கும் அறைக்குப் பக்கத்தில் உள்ள அறையில் அதன் அலுவலர்கள் கடமையாற்றிக் கொண்டிருந்த வேளையில், திடீரென அறைக்குள் புகை பரவியதால் வெளியே வந்து பார்த்த போது அலுமாரிக்குள்ளிருந்து புகை வந்ததால் உடனடியாக அலுமாரி திறக்கப்பட்டு அருகிலிருந்து தண்ணீர் பெறப்பட்டு அலுவலர்களால் தீ அணைக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக நீதிமன்றப் பொலிஸாரால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அங்கு விரைந்த தடயங்களைப் பரிசோதிக்கும் சோகோ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதனையடுத்து நேற்று முன் தினம் நீதிமன்ற அமர்வு ஆரம்பிக்கப்பட்டபோது, நீதிமன்றில் சான்றுப் பொருள்களாக ஒப்படைக்கப்பட்டுள்ள அலைபேசிகளை உரியவர்களிடம் ஒப்படைப்பது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் நீதிவான் அறிவுறுத்தினார்.

முழுமையான மின்வலுவுடன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அலைபேசி பற்றரி வெப்பம் காரணமாக வெடித்து எரிந்திருக்கலாமெனத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# மாணவியின் மீது வீசப்பட்ட கழிவுகள்

சாவகச்சேரி,பெப்.20

மேல்மாடிக் கட்டடத்தில் இருந்து வீசப்பட்ட மதிய உணவுக் கழிவுகள் வீதியில் நடந்து சென்ற மாணவியின் உடைகளையும் பாடப் புத்தகங்களையும் சேதப்படுத்தின.

இந்தச் சம்பவம் கடந்த புதன் கிழமை பிற்பகலில் சாவகச்சேரி தனங்களப்பு வீதியில் இடம் பெற்றது.

சாவகச்சேரியில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் தனங்களப்புப் பகுதியைச் சேர்ந்த மாணவர்கள், தனங்களப்பு வீதியில் உள்ள பஸ் தரிப்பிடத்தில் நின்று வாகனங்களில் செல்வது வழமை.

அவ்வாறு கடந்த புதன்கிழமையும் அவர்கள் நடந்து சென்ற வேளை, மேல்மாடியிலிருந்து வீசப்பட்ட அசைவ உணவு உட்பட சாப்பாட்டுக் கழிவுகள் நடந்து சென்ற மாணவியொருவரின் உடலில் வீழ்ந்து சிதறியதில் மாணவியின் உடை மற்றும் பாடப் புத்தகங்கள் சேதமாகின. கழிவுப் பொருள்களின் மணத்துடன், நான்கு கிலோ மீற்றர் தூரத்துக்குச் செல்ல வேண்டிய மாணவி எவ்வாறு வீடு செல்வதெனத் தவித்த நிலையில், அவ்வழியே தனங்களப்புக்கு நெல் அறுவடைக்குச் சென்ற வாகனத்தில் அவர் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இந்த மாடியில் தங்கியிருப்பவர்கள் தாம் சாப்பிடும் உணவின் மீதிகளை வீதியில் வீசுவதாகவும், இதனால் கடைகளின் முன்னால் விழும் வேளையில் தினமும் தமது கடை முன்னால் உள்ள விறாந்தையைக் கழுவ வேண்டியுள்ளதெனவும் வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

பொதுமக்கள் சிலர் மேல்மாடிக்குச் சென்று பார்த்தபோது மாடிக்கு கீழ் தளத்தில் இயங்கும் வர்த்தக நிலையங்களின் பெயர்ப் பலகைகளுக்குப் பின்னால் உணவுக் கழிவுகள் பொதி செய்ததாள்கள் பெருமளவில் காணப்பட்டதெனவும் தெரிவித்தனர். (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒட்டுசுட்டான் வித்தியாபுரம் கிராம மக்கள் மற்றும் கிராம சேவையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர் இணைந்து நேற்றுமுன்தினம் சிரமதானம் ஒன்றை மேற்கொண்டனர். இதில் வித்தியாபுரம் அரை ஏக்கர் திட்ட மக்கள் அனைவரும் கலந்து கொண்டனர். (ற-ஜ-ரி7)

# திடீர் மழையால் முல்லைத்தீவு விவசாயிகள் பெரும் பாதிப்பு

யாழ்ப்பாணம், பெப்.20

நெல்லுக்கு நியாய விலை கிடைக்காது திண்டாடும் நிலையில், கடந்த சில தினங்களாகப் பெய்யும் மழையால் காய வைக்கப்படும் நெல் அழிவடைகின்றது என்று முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் திடீரென கடந்த இரண்டுதினங்களாக மழை பெய்து வருகின்றது. அதனால் அறுவடை செய்த நெல்லைக்காய வைத்த விவசாயிகள், அறுவடை செய்யும் விவசாயிகள், நெல்லை அறுவடை செய்யாத விவசாயிகள் என்று பல தரப்பினருமே கடுமையான பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

அத்துடன், அறுவடை செய்யும் நெல்லைக் காய வைப்பதற்குப் போதுமான வெப்பக் கால நிலை இல்லா மல் இருப்பதா லும், விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இதனைவிட, கால போகத்தில் விளை விக்கப்பட்ட உப உணவுப் பயிர்களான உழுந்து, பயறு, கௌப்பி என்பனவும் மழையால் பாதிக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே அறுவடை செய்த நெல்லை உரிய முறையில் சந்தைப் படுத்த முடியாமல், நிர்ணய விலையில் கூட விற்க முடியாமல் விவசாயிகள் திண்டாடிக் கொண்டிருந்த நிலையில், மழையினாலும் விவசாயிகள் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ-5,ரி7)

# வவுனியா மாவட்டத்தில் நெல் கொள்வனவில்லை

வவுனியா,பெப்.20

வவுனியா மாவட்டத்தில் நெல் சந்தைபடுத்தும் சபையால் இதுவரையில் நெல் கொள்வனவு மேற்கொள்ளப்படவில்லை என வவுனியா மாவட்ட கமக்கார ஒழுங்கமைப்புக்களின் அதிகார சபையின் செயலாளர் வே. இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் காலபோகத்துக்கான நெல்களின் அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் நெல் சந்தைப்படுத்தும் சபையால் விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்யப்படும் என கடந்த வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இதுவரையில் வவுனியா மாவட்டத்தில் நெல் கொள்வனவு இடம்பெறுவதற்கான எந்த ஆயத்தமும் நெல் சந்தைப்படுத்தும் சபையால் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் வவுனியா மாவட்ட விவசாயிகள் இந்த வருட நெல் உற்பத்தியில் பெரிய நட்டத்தை எதிர்கொண்டுள்ளனர்.

அறுவடைக் காலம் ஆரம்பிக்கப்பட்டு ஒருமாதத்துக்கு மேலாகியும், நெல் கொள்வனவு செய்யப்படாததால் தனியார் வியாபாரிகளுக்கு சம்பா நெல் தவிர்ந்த ஏனைய நெல் இனங்களை குறைவான விலைகளுக்கு விற்பனை செய்து விவசாயிகள் ஏமாற்றம் அடைகின்றனர்.

ஒரு மூடை நெல்லுக்கான உற்பத்திச் செலவு 2 ஆயிரம் ரூபா வரை இருக்கும்போது, குறைந்த விலையில் தனியாருக்கு நெல்லை விற்பதால், விவசாயிகள் பெருமளவான நட்டத்தை எதிர்கொள்கின்றார்கள். எனவே இவ்விடயத்தில் உரிய அதிகாரிகள் கவனம் எடுத்துத் தீர்வைப் பெற்றுத் தர வேண்டும் என்று மேலும் தெரிவித்துள்ளார். (து-ஜ-21)

# கால்நடைப் பண்ணையாளருக்கு உபகரணங்கள்

முல்லைத்தீவு,பெப்.20

வடக்கு மாகாணத்தில் சிறப்பாகச் செயற்பட்ட கால்நடைப் பண்ணையார்கள் 32 பேருக்கு, அவர்களுடைய முயற்சியை மேலும் ஊக்குவிக்கும் நோக்கோடு யு.எஸ். எயிட் தொண்டு நிறுவனத்தால் இரண்டு இலட்சம் பெறுமதியான பொருள்கள் கடந்த புதன்கிழமை கையளிக்கப்பட்டன.



புதுக்குடியிருப்பு கைவேலியில் பண்ணையாளர் ஒருவருடைய இல்லத்திலேயே குறித்த உதவிப் பொருள்கள் கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

தங்களிடம் உள்ள கால்நடைகளைச் சிறந்த முறையில் பராமரித்து, உரிய முறையில் உணவு வழங்கி அதன் மூலம் பயன்பெறும் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு போன்ற இடங்களைச் சேர்ந்த 32 பயனாளிகளுக்கே அவர்களது கால்நடை வளர்ப்பை மேலும் ஊக்குவிக்கும் நோக்கோடு அதற்கான உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் யு.எஸ். எயிட் நிறுவனத்தின் சொலிட் திட்டக் குழுத் தலைவர் மருத்துவர் டேவிட் டேயர், முல்லைத்தீவு கால்நடை உற்பத்தி சுகாதார உதவிப் பணிப்பாளர் மருத்துவர் கிரியகலா, சொலிட் திட்ட பதில் குழுத் தலைவர் பிரதீப் விஜயமாலி, யு.எஸ். எயிட் தொழில்நுட்பப் பணிப்பாளர் மருத்துவர் சிவலோகநாதன், யு.எஸ். எயிட் நிறுவனத்தின் பிராந்திய இணைப்பாளர், உத்தியோகத்தர்கள், நெஸ்லே நிறுவனப் பணிப்பாளர்கள், வடபிராந்திய கால்நடை மருத்துவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கால்நடைகளுக்கு உரிய வகையில் உணவுகளை வழங்குவதன்ஊடாக கால்நடைகள் மூலம் நல்ல பயன்களை அடையும் பொருட்டு குறித்த நிறுவனத்தினரால் இந்த இயந்திரங்கள், குறித்த பண்ணையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. குறித்த இயந்திரங்களை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பான பயிற்சிகளும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்தன. (து-ஜ-21-ரி7)

# மரண அறிவித்தல்



## திரு.பொன்னம்பலம் சீவரட்ணம்

**உரிமையாளர் :**
**Hotel Seevams - Colombo,Seevam Export (pvt) Ltd - Colombo**
**Seevam Textiles - Jaffna.**

காரைநகர் கோவளத்தைப் பிறப்பிடமாகவும்,காரைநகர் ஆலடி பொன்னம்பலம் வீதி, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த பொன்னம்பலம் சீவரட்ணம் 16.02.2016 செவ்வாய்க்கிழமை அதிகாலை காலமானார். அன்னார் காலஞ்சென்ற S.V.பொன்னம்பலம் ( கமலா பீடி ) தங்கம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற மேர்வின் சீனித்தம்பி பொன்னையா, மீனாட்சி தம்பதியினரின் பாசமிகு மருமகனும், தயாரதியின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி பத்மநாதன், மோகனாம்பிகை தர்மலிங்கம், செல்வரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தயாநிதி செல்வநாயகம், காலஞ்சென்றவர்களான தயாபரன், தயாநேசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக சனிக்கிழமை (20.02.2016) 10.00 - 12.00 மு.ப உம் 5.00 - 7.00 பி.ப அன்னாரின் இல.15 பாம் குரோவ், கொள்ளுப்பிட்டி இல்லத்தில் வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் 21.02.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக காலை 11 மணிக்கு பொரளை கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாம் குரோவ் (Palm Grove)
கொழும்பு 03.
தொ.பே : 0112573496

தகவல் :
திருமதி.தயாரதி சீவரட்ணம்
( மனைவி )

தோற்றம் : 20.07.1938 மறைவு : 16.02.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழியர் சேமலாப நிதியில் 30 வீதத்தை மீளப் பெறலாம்

## செயற்றிட்டம் வடக்கு மாகாணத்தில் ஆரம்பம்



யாழ்ப்பாணம்,பெப்.20
பத்து வருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்த தொழிலாளர்கள், தங்களுடைய ஊழியர் சேமலாப நிதியில் இருந்து 30 வீதத்தை மீளளிப்பாகப் பெற்றுக் கொள்ளும் செயற்றிட்டம் வடக்கு மாகாணத்தில் நேற்று தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் இராஜாங்க அமைச்சர் ரவீந்திர சமரவீரவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்பிரகாரம் ஊழியர்கள் தங்களது உடல் ஆரோக்கியம் தொடர்பிலும், வீட்டுத் திட்டம் தொடர்பிலும் சேமலாப நிதியில் இருந்து 30 வீதத்தை மீளளிப்பாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கருத்துரைத்த அமைச்சர் ரவீந்திர சமரவீர தெரிவித்ததாவது:-

ஊழியர் சேமலாப நிதியில் இருந்து 30 வீதத்தை மீளளிக்கும் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தச் சட்டத்தில் இடம் தரப்பட்டுள்ளது. இதன்படி ஊழியர்கள் உடல் ஆரோக்கியம், வீட்டுத்திட்டம் தொடர்பில் 30 வீதத்தை ஊழியர் சேமலாப நிதியில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

எதிர்காலத்தில் ஊழியர்களின் பிள்ளைகளின் கல்விக்காகவும், ஒரு குறித்த தொகையைப் பெற்றுக் கொள்ளும் விதமாக ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தில் மாற்றம் கொண்டு வரப்படும்.

பணத்தை ஊழியர்களின் தேவைகளுக்கு பயன்படுத்தாது சேமித்து வைத்திருத்தல் என்பது பொருத்தமற்றது. சேவையைத் தெளிவாகச் செய்ய முன்வந்திருக்கிறோம்.

யாழ்ப்பாணம்,கிளிநொச்சி,முல்லைத்தீவு,வவுனியா,மன்னார் மாவட்ட ஊழியர்கள் தமக்கான சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கடந்த காலங்களில் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக நீங்கள் பாதிக்கப்பட்டுள்ளீர்கள். வட மாகாணத்தில் உள்ள தொழிலாளர்களுக்கு இன்னும் பல சேவைகளைச் செய்ய வேண்டும் என்பதனை ஏற்றுக் கொள்கிறேன்.

தொழிலாளர்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பது தொடர்பில் நாங்கள் அதிக கரிசனையோடு இருக்கிறோம் - என்றார்

தொழில் ஆணையாளர் திருமதி எம்.டி.சி.அமரதுங்க தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கௌரவ விருந்தினராக யாழ். மாவட்டச் செயலக மேலதிக அரச அதிபர் செந்தில்நந்தனனும், சிறப்பு விருந்தினராக பெண்கள் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனும் கலந்து கொண்டனர்.

தொழிலாளர்களில் பெரும்பான்மையானோர் பல வருடங்களாக கேட்டுவருகின்ற 30 வீத ஊழியர் சேமலாப நிதியம் என்பது நாட்டின் பல பாகங்களிலும் ஏற்கனவே ஆரம்பிக்கபட்ட நிலையில், வடக்கு மாகாணத்தில் இந்தச் செயற்றிட் டம் ஆரம்பிப்பதற்கான நட வடிக்கைகள் கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இருந்தபோதும் நேற்றைய தினம் வடக்கு மாகாண தொழில்திணைக்களத்தில் இடம்பெற்ற அங்குரார்ப்பண நிகழ்வைத் தொடர்ந்து இனிவரும் காலங்களில் தொழிலாளர்கள் தங்களது 30 வீத மீளளிப்பைப் பெற்றக்கொள்ளமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (த-ஜ-ரி2-106)

### குருதிக்கொடை முகாம்

வடமராட்சி,பெப்.20
பொலிகண்டியைச் சேர்ந்த குருதிக் கொடையாளர்கள் ஒன்றிணைந்து ஒழுங்கு செய்துள்ள குருதிக் கொடை முகாம் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பொலி கண்டி குழந்தையேசு தேவாலய வளவில் நடைபெறவுள்ளது. (த-ஜ-173

### த.இராசலிங்கத்தின் 25 ஆம் ஆண்டு நினைவு தினம்

வடமராட்சி,பெப்.20
உடுப்பிட்டித் தொகுதி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் த.இராசலிங்கத்தின் 25 ஆம் ஆண்டு நினைவு தினம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கரணவாய் மூத்த விநாயகர் கோயிலடியில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமராட்சிப் பிரதேச அலுவலகத்தில் அனுஷ்டிக்கப்ப டவுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்டத் தலைவர் சூ.சே.குலநாயகம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் நினைவுப் பேருரையை தமிழரசுக் கட்சியின் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா நிகழ்த்தவுள்ளார். (த-ஜ-173)


## மரண அறிவித்தல்

### சிவக்கொழுந்து திருநாவுக்கரசு ( S.T.அரசு)

(புகைப்பட முதுபெருங்கலைஞர், கலாபூசணம் நாடகவியலாளர், மாமனிதர்)



நல்லூர், முத்திரைச் சந்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து திருநாவுக்கரசு 17.02.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து - சுந்தரம்மா தம்பதியரின் அருமை மகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், அரசகுமாரன் (அமெரிக்கா - பொறியியலாளர்), காலஞ்சென்ற கலைவாணி (கலாநிதி - யாழ். பல்கலைக்கழக நூலகவியலாளர் Phd ) மற்றும் கலைச்செல்வி (லண்டன்), காலஞ்சென்ற இளங்கோ மற்றும் ஜீவரஜனி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், புவனேந்திரன் (லண்டன்),கலாநிதி சர்வேந்திரா (நோர்வே) ஆகியோரின் மாமனும், லவன் (லண்டன்) மாயோன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம், சின்னத்தம்பி (மலையகம்), ஆறுமுகம், செல்லத்துரை (சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்), சேதுநாதன் (சிறைச்சாலை உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.02.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

28, செம்மணி வீதி,
முத்திரைச் சந்தி, நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொ.பே. 021 320 5753/ 076 834 2916


# பெண்கள் அணியும் உடைகளால் ஆண்கள் தலைகுனியும் நிலை

## சிவஸ்ரீ வாசுதேவக்குருக்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.20
பெண்களின் குட்டைப் பாவாடையும், ஸ்கூட்டி மோட்டார் சைக்கிள்களும் ஆண்களையும், சமூகத்தையும் படாதபாடு படுத்தி வருகின்றன. சில சந்தர்ப்பங்களில் சில பெண்கள் முன் ஆண்கள் தலை குனிந்து நின்று கதைக்க வேண்டிய நிலைமை ஏற்படும் அளவுக்கு பெண்களின் உடை காணப் படுகின்றது.- இவ்வாறு சிவஸ்ரீ வாசு தேவக்குருக்கள் தெரிவித்தார்.

சரசாலையில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துரை வழங்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர்மேலும்தெரிவித்துள்ளதாவது-

எமது மண்ணுக்காக, மொழிக்காக, கலாசாரத்துக்காக உயிரை அர்ப்பணித்த மங்கயைரை நாம் எண்ணும்போது, இப்படிப்பட்ட செயல்கள் எல்லாம் ஒரு தேசத் துரோகமாகும். ஒரு வகையில் இதுவோர் கலாசார அழிப்பாகும். எனவே எமது மண்ணின் கலாசாரத்தைப் பாதுகாப்பது எமது கடமையாகும்.

பெண் விடுதலை, பெண்கள் சுதந்திரம் என்பது உடைகளில் இல்லை. எமது பிரதேசத்தில் இருக்கக் கூடிய பெண்களில் இளையவர்கள்பெரும்பாலும்நாகரிக மோகம்கொண்டவர்களாகத் திகழ்வதை அவர்கள் அணியும் உடைகள் மூலம் நாம் காணக் கூடியதாக உள்ளது.

மாதர்கள் பலர் தமது பண்பியல்புகளை இழந்துவருவது மிக வேதனை தருவதாக உள்ளது.

ஒவ்வொரு குடும்பத்திலும் ஆண்களுக்கு நிகராக பெண்கள் குடும்பத்தைக் கவனித்து வருவது பாராட்டத்தக்கதாகும். ஆனாலும் பெண்கள் தமது தாய்மை, சகோதரத்துவம் பண்பியல்புகளில் இருந்து வழுவாது இருத்தல் வேண்டும். பெண்மையைத் தாயாகவும், சகோ தரியாகவும் கருதிக் கொண்டாடும் இயல்பு எமது பிரதேசத்தில் இருப்பது போற்றத் தக்கதாகும்.

அதனைச் சீர் குலைக்கும் வகையில் சில பெண்களது வாழ்க்கை முறை அமைந்து காணப் படுவது வருத்தம் தரும் செயலாக உள்ளது.

எங்கெங்கு எப்படியான உடைகளை அணிய வேண்டும். எப்படி ஆண்களுடன் சமூகத்தில் பழகவேண்டும் என்பது பண்பு சார்ந்த விடயமாகும். பெண்களை வைத்துத்தான் அந்தக் குடும்பத்தின் பண்பை அறிய முடியும். அதிகமாக இளம் தாய்மார்கள் தமது உடைகளில் அதிக கவனம் எடுத்தல் வேண்டும்.

ஆலயங்களுக்கு வரும் பொழுது பொருத்தமான ஆடைகளை அணிந்து வருவது அவசியமானது. இன்று பெண்கள் ஆலயங்களில் அமர்ந்திருந்து வணங்க முடியாத நிலையிலும், அனுஷ்டானங்களைச் செய்ய முடியாத நிலையிலும் உடைகளை அணிந்து வருகின்றார்கள்.

எமது பிரதேசங்களில் பெண்கள் அமைப்புக்கள், மாதர் சங்கங்கள் எனப் பல காணப் படுகின்றன. அவை பெண்கள் உடைகள் விடயத்தில் அக்கறை எடுப்பதாகத் தெரியவில்லை. நாகரிகம் வளர்ச்சியடைய எமது ஒழுக்கமும் வளர்ச்சியடைதல் வேண்டும். உடையென்பது ஒருமனிதனுடைய ஒழுக்கவியல் சார்ந்ததாகும்.

எனவே நாம் உடைகளைத் தேர்ந்தெடுத்து அணிவதில் அதிக கவனம் எடுத்தல் அவசியமாகும். எப்படி எமக்கு நல்ல கலாசாரத்தை எமது பெற்றோர்கள் கற்றுத் தந்தார்களோ, அதனைச் செம்மையாக எமது பிள்ளைகளுக்கு நாம் கற்றுக் கொடுத்தல் வேண்டும். அது ஒவ்வொரு தாய்மாரின் கடமையாகும்.

பெண்கள்தான், இனத்தின் ஆணிவேர் . அது அறுந்துவிட்டால் அந்த இனம் அழிந் துவிடும். வெறுமனே அரச உதவித் தொகைக் காக செயற்படாமல் மாதர் அமைப்புக்கள் கலாசாரத்தைக் காக்க முன் வருதல் வேண்டும் - என்றார். (ற-ஜ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிளவுபடவுள்ளது மகிந்தவின் தரப்பு

## இரு முக்கியஸ்தர்களுக்கு பிரதி அமைச்சர் பதவிகள்

கொழும்பு, பெப். 20

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவாகச் செயற்படும் கூட்டு எதிரணியின் முக்கிய உறுப்பினர்கள் இருவர் தேசிய அரசில் இணைந்து கொள்ளவுள்ளதுடன், அவர்களுக்கு பிரதியமைச்சர் பதவிகள் வழங்கப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியதும், இது குறித்து உத்தியோக பூர்வமான அறிவிப்பு வெளியாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவு தெரிவித்துத் தம்மை ஒன்றிணைந்த எதிர்க்கட்சி என்று குறிப்பிடுவோர், நாடாளுமன்றில் சுயாதீனமாக இயங்கவும், தங்களை ஒன்றிணைந்த எதிர்க்கட்சியாக அங்கிகரிக்குமாறும் கோரி வருகின்றனர்.

> ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியதும், இது குறித்து உத்தியோக பூர்வமான அறிவிப்பு வெளியாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறான ஒரு நிலையில், அண்மையில் கூடிய சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தின்போது, கூட்டு எதிரணியாகச் செயற்பட முடியாதெனவும், பொது எதிரணியென்ற அடையாளத்தையோ, சுயாதீனத்தையோ அங்கீகரிக்க முடியாது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மகிந்தவுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வந்த எதிரணி உறுப்பினர்கள் இருவர், உடனடியாக ஜனாதிபதியையும், சுதந்திரக் கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்களையும் சந்தித்து தமது அபிப்பிராயங்களைத் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பைத் தொடர்ந்தே அவர்கள் இருவருக்கும் பிரதியமைச்சுப் பதவிகள் வழங்கப்பட வுள்ளதாக அரசியல் தகவல்கள் குறிப்பிடுகின்றன. (த்)

# என்னை விமர்சிப்பதற்கு மகிந்தவுக்குத் தகுதியில்லை

## சொல்கிறார் எஸ்.பி. திஸநாயக்க



கொழும்பு, பெப். 20

தன்னைக் ‘காட்டு வேடன்’ என்று குறிப்பிட்டு விமர்சிப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்குத் தகுதியில்லை என்று அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை கண்டி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் பின்னர் ஜனாதிபதியின் கருத்துத் தொடர்பில், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதில் வழங்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து குறிப்பிட்ட அவர், சுதந்திரக் கட்சி தொடர்பில் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகக் குறிப்பிடும் ராஜபக்ச குடும்பத்தினர், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கட்சியைப் பிளவுபடுத்தும் நடவடிக்கையிலேயே ஈடுபட்டதாகவும் குறிப்பிட்டார்.

இவ்வாறான ஒரு நிலையில், இன்று கட்சியைப் பிளவுபடுத்த முயற்சிப்பதாக அவர்கள், மற்றவர்கள் மேல் குற்றம் சுமத்தித் தாங்கள் தப்பித்துக் கொள்ள முயற்சிப்பதாகவும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மாத்திரமன்றி அவரது தந்தையும் இவ்வாறு கட்சியை விட்டுச் சென்றிருந்ததாகவும் சுட்டிக்காட்டினார்.

தற்போது, சிறி லங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயற்படுவதற்கு 17 கட்சிகள் விருப்பத்துடன் இருப்பதாகவும், இதனால் கட்சியைப் பிளவுபடவிடமாட்டோம் என்றும் அவர் கூறினார்.

அத்துடன் தேசிய தேவை கருதி தேசிய செயற்பாட்டுக்காகவே தாம் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து செயற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (த்)



ஜேர்மனுக்குப் பயணம் மேற்கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஜேர்மனில் வசிக்கும் தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் இனங்களைச் சேர்ந்த இலங்கைப் பிரஜைகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (த்)

# கொழும்பு சேரிப்புற வாசிகளுக்கு புதிய வீடுகள் அமைக்கத் திட்டம்

கொழும்பு, பெப். 20

கொழும்பில் வாழும் சேரிப்புற வாசிகளை 3 ஆயிரம் புதிய வீடுகளில் குடியமர்த்துவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபை திட்டமிட்டுள்ளது.

கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு வேலைத் திட்டங்களின்போது, சேரிப்புறத்தில் வாழந்த 5 ஆயிரம் பேர் புதிய வீடுகளில் குடியமர்த்தப்பட்டதாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ரஞ்சித் பெர்ணாண்டோ தெரிவித்தார்.

சிறிய பகுதியில் வாழ்ந்த இவர்களுக்கு, 500 சதுர அடி பரப்பிலான வீடுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும், சேரிப்புறத்தில் வாழும் 47 ஆயிரம் பேரைப் புதிய இடத்தில் குடியமர்த்த வேண்டியுள்ளதாகவும், நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பு நகரின் பொருளாதார முக்கியத்துவம் மிக்க இடங்களில் வாழும் சேரிப்புற மக்கள் நகர அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் என்பவற்றிக்கு இடையூறாகக் காணப்படுவதாகவும் அவர்களைச் சரியான சமூக கட்டமைப்புக்குள் கொண்டுவராத பட்சத்தில் எதிர் காலத்தில் இவ்வாறானவர்கள் பெரும் சமூகப் பிரச்சினைகளை எதிர்நோக்கக் கூடும் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

சட்டவிரோதமாகக் குடியேறியிருக்கும் சேரிப்புற மக்களின் தேவைக்கேற்ப புதிய வீடுகளைப் பெற்றுக் கொடுப்பதே அரசாங்கத்தின் நோக்கம் என நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ரஞ்சித் பெர்ணான்டோ தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த்)

# எஸ்.பியின் மீது மகிந்த அணி கடும் சொற்போர் தொடுப்பு

கொழும்பு, பெப். 20

மகிந்த ராஜபக்ச தலைமையில் நீர்கொழும்பில் நடைபெற்ற கூட்டம் தொடர்பில் கடும் விமர்சனத்தை முன்வைத்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரான அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கவுக்கு எதிராக, மகிந்த அணியினர் சரமாரியாக சொற்கணைகளைத் தொடுத்து வருகின்றனர் அத்துடன், சவால்களையும் விடுத்து வருகின்றனர். எனினும், இது விடயத்தில் பதிலடிகொடுக்காது அமைச்சர் எஸ்.பி. மௌனம் காத்துவருகின்றார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்கள் கலந்துகொண்ட முக்கிய கூட்டமொன்று கடந்த வெள்ளியன்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையில் நீர்கொழும்பு, கொச்சிக்கடையில் நடைபெற்றது.

இதன்போது மகிந்த புதிய கட்சியொன்றை ஆரம்பிக்க வேண்டும் என்பது உட்பட ஐந்து தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டிருந்தன. ஜனாதிபதிக் கும் சுதந்திரக் கட்சியிலுள்ள அவரது ஆதரவாளர்களுக்கும் நெருக்கடி கொடுக்கும் நோக்கிலேயே இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தக் கூட்டம் முடிவடைந்த பின்னர், மகிந்த தரப்புக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் கொழும்பில் ஊடகவியலாளர் மாநாடொன்றை சு.கயின் பொருளாளரான அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க நடத்தினார்.

மகிந்த தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஆயிரத்து 400 பேர் கலந்து கொள்ளவில்லை என்றும், கடந்தமுறை தேர்தலில் தோல்வியடைந்தவர்களே நிரம்பிக் காணப்பட்டனர் என்றும் இதன் போது எஸ்.பி. சுட்டிக் காட்டியிருந்தார். அத்துடன், அந்தக் கூட்டம் தொடர்பில் கடும் விமர்சனங்களையும் முன் வைத்திருந்தார்.

எஸ்.பி. இவ்வாறு கருத்து வெளியிட்ட பின்னர், மறுநாள் தொடக்கமே அவருக்கு எதிராக மகிந்த அணியினர் பதிலடி கொடுக்க ஆரம்பித்து, தொடர்ந்தும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். மகிந்தவுக்கு விசுவாசமான உள்ளூராட்சிச் சபைகளின் முன்னாள் உறுப்பினர்களும், பொது எதிரணியினர் எனத் தம்மை அடையாளப் படுத்திக்கொள்ளும் நாடாளுமன்ற உறுப்பினர்களுமே எஸ்.பி. மீது சொற்போர் தொடுத்து வருகின்றனர்.

கட்சி தாவுவதில் சிறப்புத் தேர்ச்சி மிக்கவர் எஸ்.பி. இவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சீர்குலைக்கின்றார். இவர் மக்களால் நிராகரிக்கப்பட்டவர். மகிந்த தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்களின் பெயர்களை வெளியிட நாங்கள் தயார். எஸ்.பியின் வீட்டுக்கு முன்னால் அழைத்துச் சென்று உறுப்பினர்களை நிறுத்துவோம். குறித்த கூட்டம் தொடர்பில் விவாதம் நடத்த நாம் தயார். எஸ்.பி. தயாரா? என்றெல்லாம் எஸ்.பியை நோக்கி சவால்கள் விடுக்கப்படுகின்றன. எனவே, இவர்களின் சவாலை ஏற்று எஸ்.பி. பதிலடி கொடுப்பாரா என்பதே அரசியல் களத்தில் தற்போது பெரும் எதிர்பார்ப்பாக இருக்கிறது. (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐக்கிய தேசியக்கட்சியின்நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா நேற்றுமுன்தினம் இலங்கை கிரிக்கெட் வீரர்களுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டார். இதன்போது இலங்கை கிரிக்கெட் அணி சவால்களை வெற்றிக்கொள்வது தொடர்பில் அவர் விளக்கினார். இலங்கை இராணுவம் போரில் வெற்றிகொள்ளப் பயன்படுத்திய உபாயங்கள் குறித்து அவர் இதன்போது இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களுக்குத் தெளிவுபடுத்தினார். (த)

# வெலே சுதாவுக்கு பிணை

கொழும்பு, பெப்.20

கறுப்புப் பணத்தை வெள்ளைப்பணமாக மாற்றினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்த வெலே சுதா என்றழைக்கப்படும் கம்பளை விதானகே சமன் குமாரவுக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

கறுப்புப் பணத்தை வெள்ளைப்பணமாக மாற்றினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு, இவருக்கு எதிராகக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கிலிருந்தே அவருக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

இவரை 5 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் 1 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப்பிணையிலும் செல்வதற்கு, கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்ற நீதிவான் நிஷாந்த பீரிஸ் உத்தரவிட்டார்.

கடந்த 2008ஆம் ஆண்டு, கல்கிசை பகுதியில் 7.05 கிராம் ஹெரோயினை தன் வசம் வைத்திருந்தார் என்ற குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்ட வெலே சுதாவுக்கு சாவுத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (த)

# எதிர்கால அபிவிருத்திச் சவாலை வெற்றிகரமாக எதிர்கொள்வோம்

## பிரதமர் ரணில் அழைப்பு

கொழும்பு, பெப்.20

அபிவிருத்திச் செயற்பாடுகளின் போது எதிர்காலத்தில் நாடு எதிர்நோக்கும் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்வோம் என, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



இலங்கைக்கு வருகை தந்துள்ள உலக நாடுகளின் இளைஞர் மன்றங்களின் தலைவர்களுடன் கடந்த புதன்கிழமை அலரிமாளிகையில் நடைபெற்ற சந்திப்பின்போது, பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டை அபிவிருத்தியில் கட்டியெழுப்பும் நடவடிக்கையில் சர்வதேச நாடுகளின் ஒத் துழைப்புகளைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்த்துள்ளதாகக் குறிப்பிட்ட பிரதமர், நாட்டில் தகவல் தொழில்நுட்பத்துறையை மேம்படுத்த நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

காலநிலை மற்றும் இயற்கை இடர் குறித்து தெரிவிக்கும்போது, இலங்கை பல பாதிப்புக்களைச் சந்தித்துள்ளதாக எடுத்துரைத்த பிரதமர், இவற்றுக்குத் தீர்வு காணப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, நாட்டைப் பொருளாதார ரீதியில் கட்டியெழுப்புவதற்கு பல தீர்மானங்களை எடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளதாகவும், வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் இலங்கையில் வர்த்தக வாய்ப்புகள் பெற்றுக்கொடுக்கப்படும் என்றும் பிரதமர் ரணில் மேலும் தெரிவித்தார். (த)

# ஒரே இடத்தில் சந்தித்த மகிந்தவும் சிராணியும்

கொழும்பு, பெப்.20

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும், அவரால் பதவி பறிக்கப்பட்ட முன்னாள் பிரதம நீதியரசர் சிராணி பண்டார நாயக்கவும் ஒரே நேரத்தில் கொழும்பு மேல்நீதிமன்ற கட்டடப் பகுதிக்கு வருகை தந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நிகழ்ந்துள்ளது.

குறித்த சம்பவம் மேல்நீதிமன்றத்துக்கு வந்திருந்தவர்களுக்கு அரிதான காட்சியாக இருந்துள்ளது. எனினும் இருவரும் வெவ்வேறு தேவைகளுக்காகவே நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கு வந்திருந்தனர்.

மகிந்த ராஜபக்ச தனது மகன் யோசிதவைப் பிணையில் எடுப்பதற்காக நீதிமன்றம் வந்திருந்தார்.

சிராணி பண்டாரநாயக்க, இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கப் புதிய செயலாளரைத் தெரிவு செய் யும் வாக்களிப்புக்காக வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# அதிகாரப் பகிர்வால் நாடு பிளவடையாது

## ஜயம்பதி விக்கிரமரட்ண சுட்டிக்காட்டு



கொழும்பு, பெப் 20

அதிகாரங்களைப் பகிர்வதனூடாக நாடு ஒருபோதும் பிளவுபடாது. அதிகாரப்பரவலாக்கம் செய்த எந்தவொரு நாடும் உலகில் பிளவடைந்ததாக வரலாறு இல்லை என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பியும், அரசமைப்பு நிபுணருமான ஜயம்பதி விக்ரமரட்ண.

உதயனுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

28 வருடகால அனுபவங்கள் எமக்குக் கற்றுத்தந்த பாடம் என்பது இந்த நாட்டில் அதிகாரப்பரவலாக்கல் அவசியம் என்பதாகும். புதிய அரசமைப்பொன்று உருவாகும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ள நிலையில், அதனைச் சில அடிப்படைவாதிகள் குழிதோண்டிப்புதைக்கப் பார்க்கின்றனர்.

> எமது நாடு முன்னோக்கிச்செல்ல புதிய அரசமைப்பு அவசியம் என்ற புரிதலுக்கு மக்களும் வந்துள்ளனர். இந்தச் சிறந்த சந்தர்ப்பத்தை நழுவவிடும் பட்சத்தில் நாடு பாரதூரமான பிரச்சினைகளை சந்திக்க நேரிடும்.

உலகில் அதிகாரம் பகிரப்பட்ட எந்தவொரு நாடும் பிளவுபட்டதில்லை. அதிகாரம் பகிரப்படுவதால் நாடு பிளவுபடப் போவதும் இல்லை.

நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டக்கூடிய புதிய அரசமைப்பொன்றை உருவாக்கும் சிறந்த சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ள தற்போதைய நிலையில், அதனை முறியடிக்க சில அடிப்படைவாதிகள், பௌத்த மதத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இலங்கை அரசு மீது சர்வதேச அழுத்தம் பிரயோகிக்கப்படுகிறது என்றெல்லாம் கூறுகின்றனர்.

இவ்வாறானதொரு சந்தர்ப்பம் மீண்டும் ஒரு முறை இந்த நாட்டின் வரலாற்றில் அமைய இன்னும் எவ்வளவு காலம் எடுக்கும் என்பதைக் கூறமுடியாது.

13ஆவது திருத்தச்சட்டத்தில் பல்வேறு இடங்களில் மாகாண சபைகளின் அதிகாரத்தில் மத்திய அரச தலையீடு செய்யும் சந்தர்ப்பம் உள்ளது. அதனை நிவர்த்தி செய்து தமிழ் மக்களுக்குக் கொடுக்கும் அதிகாரத்தை மீண்டும் மத்திய அரசு பெற்றுக் கொள்ள முடியாதவகையிலான ஏற்பாடுகளை உள்ளடக்கிய புதிய அரசமைப்பை உருவாக்க வேண்டும்.

எமது நாடு முன்னோக்கிச்செல்ல புதிய அரசமைப்பு அவசியம் என்ற புரிதலுக்கு மக்களும் வந்துள்ளனர். இந்தச் சிறந்த சந்தர்ப்பத்தை நழுவவிடும் பட்சத்தில் நாடு பாரதூரமான பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும். சகல இன மக்களும் முன்னோக்கிப் பயணிக்கும் அரசமைப்பு, காலத்தின் கட்டாயம் என்பதை அனைவரும் புரிந்துகொண்டு செயற்பட முன்வரவேண்டும் என்றும் அவர் கூறினார். (த-சி)

# சஜின்வாஸ் வைத்திருந்த யானைக் குட்டி பறிமுதல்

கொழும்பு, பெப்.20

சட்டவிரோதமான முறையில் சஜின்வாஸ் குணவர்த்தனவினால் நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் யானைக் குட்டியை நேற்று வன ஜீவராசிகள் அதிகாரிகள் கைப்பற்றிக் கொண்டுள்ளனர்.

15 வயதுடைய குறித்த யானைக்குட்டி அம்பலாங்கொடை, ஹிரேவத்தை விகாரையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தம் வசமாக்கிக் கொண்டு சென்றுள்ளனர். எடுத்துச் சென்றுள்ளனர்.

சுமார் 10 வருடங்களாகச் சஜின்வாஸ் குணவர்த்தனவினால் பராமரிக்கப்பட்டு வந்த குறித்த யானைக் குட்டி அனுமதிப் பத்திர சிக்கல்கள் காரணமாகப் பறிமுதல் செய்யப்பட்டு உடவளவை யானைகள் மாற்று இல்லத்துக்குக் கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மக்கள் நலனை நாடிச் செயற்படும் போக்கை உயர்த்தக் கூடாதா?

அரச இராணுவத்தினரின் போர்ச் செயற்பாடு காரணமாக, வலிந்து இடம்பெயரச் செய்யப்பட்ட வலிகாமம் வடக்கின் மக்கள் அனைவரும், அவர் தம் சொந்த மண்ணில் மீளக் குடியமர்த்தப்பட வேண்டும்.

அதன் பின்னரே, பலாலி விமான நிலையத்தை விஸ்தரிப்பதா, இல்லையா என்பது குறித்து, மக்கள் முடிவு எடுக்க வேண்டும்.

மயிலிட்டி மக்கள், மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக்களின் தலைவர்கள் இணைந்து மேற்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றி உள்ளனர்.

அதேவேளை, நிவாரணம், மற்றும் விமான நிலையம் எமக்குத் தேவை இல்லை. எமக்குச் சொந்தமான காணிகளை எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்கு முன்னர், தமிழ்-சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் விடுவிக்க வேண்டும்.

அதேபோன்று, மயிலிட்டித் துறைமுகமும், படையினரின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட வேண்டும்.

இல்லையேல் நாம், மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து எமது பிரதேசத்துக்குள் உட்புகுவோம். அதனால் எவரும் எம்மைக் கட்டுப்படுத்த முடியாத நிலை மேலெழும் என்று-- நல்லிணக்க அரசுக்கும் அதன் எடுபிடிகளான அரச அதிகாரிகளுக்கும் முன்னோட்டமாக கால அவகாசம் வழங்கி உள்ளனர்.

ஆட்டுக்குள்ளே மாட்டை விடலாமா? என்ற பேச்சு வழக்கு வினா-வாசகம், தப்பான முறையில், ஒன்றுக்குள் மற்றொன்றைப் புகுத்தும் ஒவ்வாத செயலைக் கண்டித்து ஒதுக்கும் போக்கை உணர்த்துவதாகும்.

வளமான செம்மண்ணும், அதீத நீர் வளமும், கடல் வளமும் கொண்ட வலிகாமம் வடக்குப் பிரதேசத்தை, மனதில் கொள்ளாமல், நினைத்த போக்கில், பலாலி விமான நிலைய விஸ்தரிப்பு என்று உப்புச் சப்புக் கொட்டுவது, முழுக்க முழுக்க நல்லாட்சியின் கொடுமைகள் பட்டியலில் இடம்பிடிக்கும்.

ஆளும் அரசும் அதனை அடிவருடி நிற்கும் அதிகாரிகளும், மக்கள் நலன்களை நாடிச் செயற்படாமல், எடுப்பார் கைப்பிள்ளைகளாக தாவிப் பறந்து திட்டங்களை வகுப்பதால், அந்தத் திட்டங்கள் எதுவுமே மக்களுக்கோ, நாட்டுக்கோ நன்மை பயக்கப் போவதில்லை.

அதனைக் கருத்திற் கொண்டு, பலாலி விமான நிலைய விஸ்தரிப்பு என்ற திட்டத்தை ஓரம் கட்டி வைத்துவிட்டு--விமான நிலையம் அமைப்பதற்கு பொருத்தமான இடம் கிளிநொச்சி என்று பேராசிரியர்கள் பலர் முன்வைத்த கருத்தை--நல்லாட்சி அரசு இப்போது கையில் எடுத்துச் செயற்படுத்துவது இரட்டைப் பயன் (Dual Benefit) தரவல்லது.

இலங்கையின் முக்கிய மீன்பிடித்துறைமுகங்களில் ஒன்றான மயிலிட்டித்துறைமுகத்தை, சாட்டுப் போக்குக் காட்டாமல் விடுவிப்பதும் இன்றி அமையாதது.

நல்லாட்சி அரசிடம் இவற்றை எதிர் பார்க்கலாமா, இயலுமா?

# இனவாதத்தைக் கக்கும் செயற்பாடுகளில் ஊடகங்கள்

எம்.ஐ.முபாறக்

உலகில் இன்று மிகப் பெரிய ஆயுதமாகத் திகழ்வது ஊடகங்கள்தான். இந்த ஊடகங்களின் நகர்வுக்கு ஏற்பவே இந்த உலகமும் நகர்கிறது; அரசியல் மாற்றங்களும் ஏற்படுகின்றன.

முக்கியமாக சர்வதேச அரசியலைத் தீர்மானிக்கும் விடயத்தில் ஊடகங்களின் பங்கு மிக முக்கியமானது.மேற்கு நாடுகள் ஏனைய நாடுகளைத் தங்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதற்கு எதுவாக அமைவது இந்த ஊடகங்களின் பங்குதான்.

ஊடகங்களின் பலத்தை உணர்ந்த நாடுகள் பெரும் முதலீடுகளைச் செய்து அந்த ஊடகங்களை சர்வதேசரீதியில் வளர்த்து வருகின்றன.அந்தஊடகங்களின்செயற்பாடுகளை அடிப்படையாக வைத்துத்தான் உலகில் நல்லவையும் கெட்டவையும் ஏற்படுகின்றன.

இந்த ஊடகங்கள் நியாயமாகவும் செயற்படுகின்றன; அநியாயமாகவும் செயற்படுகின்றன. அந்த இரண்டு செயற்பாடுகளும் இலங்கை ஊடகங்களிலும் காணப்படுகின்றன.

### மாறுபட்ட நிலைப்பாட்டில் ஊடகங்கள்

இலங்கையைப் பொறுத்தவரை ஒவ்வொரு ஊடகமும் ஒவ்வொரு நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது.தமிழ்மொழி ஊடகங்களை எடுத்துக்கொண்டால் அவை தமிழரின் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்ற விடயத்தில் அக்கறை கொண்டு செயற்படுகின்றன. அதேபோல், சிங்களமொழி ஊடகங்களை எடுத்துக்கொண்டால், அவை சிங்கள மக்களின் நலன்களை அடிப்படையாகக்கொண்டுசெயற்படுகின்றன.

ஆனால், இவற்றுக்கு அப்பால் இந்த ஊடகங்கள் அனைத்தும் தேச நலன்களில் அக்கறை கொண்டு செயற்படுகின்றனவா? இன ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதில்அக்கறைகாட்டுகின்றனவா? என்ற கேள்வி நெடுங்காலமாக எழுப்பப்பட்டு வருகின்றது.

அந்தக் கேள்வியைப் புதுப்பிக்கும் வகையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அண்மைக் காலச்செயற்பாடுகள் அமைந்துள்ளதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இனவாதத்தை விதைத்து வரும் ஊடகங்களுக்கு எதிராக பிரதமர் இப்போது பொது இடங்களில் குரல் எழுப்பி வருகின்றார்;குற்றச்சாட்டுக்களைமுன்வைத்து வருகின்றார். பிரதமரின் இந்தக் குற்றச்சாட்டுக்கள் உண்மைதானா என்று நாம் இப்போது சற்று ஆராய்ந்துபார்க்கவேண்டியுள்ளது.

தமிழரின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய அரசியல் தீர்வை வழங்குவதற்கான அரசின் செயற்பாடுகளை அடிப்படையாக வைத்து, இன்று சில சிங்கள மொழி ஊடகங்கள் சிங்கள மக்கள் மத்தியில் இனவாதச் சிந்தனை விதைத்து வருவதை நாம் காணலாம்.

### இனவாதம் பேசும் ஊடகங்கள்

இந்த அரசியல் தீர்வு வழங்கப்படுவதன் மூலம் இந்த நாடு இரண்டாகப் பிரிந்து வடக்கு - கிழக்கில் தமிழீழம் உருவாகப் போகின்றது என்றும், புலி ஆதரவாளர்களின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப இந்த அரசு செயற்படுகின்றது என்றும் அந்த ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

மேலும், இந்த இனவாதக் கருத்துக்களைப் பரப்பிவரும் மகிந்த தரப்புக்கு இந்த ஊடகங்கள் ஆதரவாகச் செயற்படுவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறான ஊடகங்களைப் பொறுத்தவரை, தமிழரின் பிரச்சினைகள் தீர்க்கப்படுவது நாடு இரண்டாகப்பிளவுபடுவதற்கும்தமிழீழம் உருவாகுவதற்கும் சமமாகும். அரசியல்தீர்வு முயற்சிகள் மாத்திரமன்றி தமிழரின் எந்தவொரு சிறிய பிரச்சினையைத் தீர்ப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளைக்கூட இந்த ஊடகங்கள் தேசத் துரோகச் செயலாகவே பார்க்கின்றன.

> ஊடகங்களின் பலத்தை உணர்ந்த நாடுகள் பெரும் முதலீடுகளைச் செய்து அந்த ஊடகங்களை சர்வதேசரீதியில் வளர்த்து வருகின்றன.

வடக்கில் இராணுவத்தின் பிடியில் இருந்த தமிழரின் காணிகள் விடுவிக்கப்பட்டமை, வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு சிவில் ஆளுநர்கள் நியமிக்கப்பட்டமை, மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்காக உள்ளகப் பொறிமுறை அமைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டமை போன்ற நடவடிக்கைகளை இந்த ஊடகங்கள் இராணுவத்துக்கு எதிரான நடவடிக்கைகளாகவே சிங்கள மக்களுக்குக் காண்பித்து வருகின்றன.

நாடு முழுவதும் சிங்கள மயமாக இருக்கவேண்டும் என்று விரும்புகின்ற இந்த ஊடகங்களின் விருப்பத்தை நிறைவேற்றக் கூடிய ஒருவராக மகிந்த இருப்பதால், அவரை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டு வருவதற்கு இந்த ஊடகங்கள் திட்டமிடுகின்றன. அதற்கு ஏற்ப சிங்கள மக்களின் மனங்களில் இனவாதச் சிந்தனையை விதைத்து வருகின்றன.

அது மாத்திரமன்றி,இந்த நாட்டின் மூவின மக்களின் பிரச்சினைகளும் தீர்க்கப்படவேண்டும் என்பதற்காக இந்த அரசு சர்வதேசத்துடன் கைகோர்த்து செயற்படுவதை, நாட்டை சர்வதேசத்துடன் அடகு வைக்கும் செயலாகவும் இந்த ஊடகங்கள் சித்திரித்து வருகின்றன.

இவ்வாறான ஊடகங்களின் செயற்பாடுகள் மூலம் மீண்டும் இந்த நாட்டில் இனவாதம் தலைதூக்கினால், இந்த நாடு எவ்வாறான விளைவுகளை எதிர்கொள்ளும் என்பதை பிரதமர் நன்கு அறிவார். அதனால்தான் அவ்வாறான ஊடகங்கள் மீது பிரதமர் கடுமையாகப் பாயத் தொடங்கியுள்ளார். பொது இடங்களில் எல்லாம் அந்த ஊடகங்களின் பெயர்களைக் குறிப்பிட்டே விமர்சித்து வருகின்றார்.

### மகிந்த ஆட்சியில் அடங்கிப்போன ஊடகங்கள்

மஹிந்தவின் ஆட்சியில்போல் இந்த ஆட்சியில் ஊடகங்களுக்குக் கடிவாளம் இடப்படவில்லை. ஆட்சி மாற்றத்தின் பின்னர் ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மஹிந்த ஆட்சியில் அடங்கிப் போய் இருந்த -அடக்கி வைக்கப்பட்டிருந்த ஊடகங்கள் இப்போது சுதந்திரமாகச் செயற்படத் தொடங்கியுள்ளன.

ஆனால், இந்த ஊடக சுதந்திரத்தை அந்த ஊடகங்கள் பிழையாகப் பயன்படுத்துகின்றமைதான் கவலைக்குரிய விடயம். இன ஒற்றுமையை வளர்ப்பதைத் தவிர்த்து இவை இனவாதத்தையே விதைத்து வருகின்றன.

இந்த ஊடகங்கள் இவ்வாறு செயற்படுவதற்குக் காரணம் மகிந்தவை மீண்டும் ஆட்சிபீடம் ஏற்ற வேண்டும் என்பதுதான்.சிறுபான்மை இன மக்கள் அடக்கி ஒடுக்கப்படவேண்டும்; அவர்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படக்கூடாது என்று இந்த ஊடகங்கள் விரும்புவது போல், மகிந்தவும் விரும்புவதாலேயே அவரை மீண்டும் ஆட்சிபீடம் ஏற்ற இந்த ஊடகங்கள் விரும்புகின்றன.

ஆகவே, இவ்வாறான ஊடகங்கள்மீது பிரதமர் ரணில் பாய்வதில் எதுவிதத் தப்பும் இல்லை. இனவாதம் என்பது எந்த இடத்தில் இருந்து தோன்றினாலும், அந்த இடம் கட்டுப்படுத்தப்படுவது கட்டாயமாகும். இவ்வாறான ஊடகங்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் அவற்றை ஊடக அடக்குமுறை என்று அடையாளப்படுத்த முடியாது.

## வாசகர் திருமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களமூலம்– மவ்பிம
தமிழில்–வீ.எஸ்.ரி

# மைத்திரி-ரணில் அரசை சரத்பொன்சேகா பாதுகாப்பாரா?

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் அரசுக்கு ஆதரவாக ஐ.தே.கட்சி செயற்படவில்லை எனத் தம்மீது சுமத்தப்பட்ட பழிக்குப் பரிகாரம் தேடுவது போன்று, தற்போது ஐ.தே.கட்சி அரசு முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகாவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்கியுள்ளது.

இராணுவத்தின் முன்னாள் உயரதிகாரியொருவர் தெரிவித்த இந்தக் கருத்து முற்றிலும் உண்மையே. விடுதலைப் புலிகளது தாக்குதலொன்றிலிருந்து மயிரிழையில் உயிர் தப்பிப் பிழைத்து, மீண்டும் போர்முனைக்கு சரத் பொன்சேகா சென்றவேளை, இராணுவ உயர்மட்ட அதிகாரிகள் மத்தியில் அவர் பெரிதாகக் கணிக்கப்படாத போதிலும், கீழ்மட்ட இராணுவ வீரர்கள் மத்தியில் அவர் வீராதி வீரராகக் கணிக்கப்பட்டார்; மதிக்கப்பட்டார். சிரேஷ்ட தர நிலையைக் கருத்தில் எடுக்காது, போர் முனையில் வீரத்துடன் செயற்பட்டோருக்குப் பதவி உயர்வு வழங்குவதை அவர் கைக்கொண்டமையே அதற்கான காரணம். அவர் ஜனா திபதித் தேர்தலில் போட்டியிட்டவேளை, மகிந்த அரசு அவருக்குச் செய்த அவமரியாதையை மனதில் கொண்டு இராணுவ கீழ்மட்ட வீரர்கள் அவருக்கு ஆதரவு தெரிவித்தனர். போரை வென்றெடுக்கக் காரணமானவர் பொன்சேகாவே என்பதை அவர்கள் நன்கறிந்திருந்தனர்.



### போர் வெற்றிக்குக் காரணமான பொன்சேகா

சரத்பொன்சேகா இராணுவத்துக்குத் தலைமை தாங்கியிருக்கா விட்டால், தமது அரசால் போரை வென்றெடுத்திருக்க இயலாதென்பதை மகிந்தவும் ஒப்புக் கொண்டிருந்தார். கிழக்கில் 2006 ஆம் ஆண்டில் சம்பூர் பிரதேசத்தைப் புலிகளிடமிருந்து இராணுவம் கைப்பற்றிய போது மகிந்த இதனை வெளிப்படையாகவே ஒப்புக் கொண்டிருந்தார்.

அன்று அவ்விதம் சரத் பொன்சேகாவைப் போற்றிப் புகழ்ந்த மகிந்த, இன்று தமது அந்த நிலைப்பாட்டை மறுதலிக்க இயலாது. போர் முடிவடைந்த பின்னர், மகிந்த, சரத்பொன்சேகாவை அவரது பதவியில் இருந்து விலக்கியது மட்டுமல்லாது, அரசுக்கு எதிராகச் சதி செய்ததாகக் குற்றம் சுமத்திச் சிறையிலும் அடைத்தார். இதனால் பெருமளவினரான இராணுவ வீரர்கள் பெரும் மனவேதனைக்கு உட்பட்டனர். இதனாலேயே சரத் பொன்சேகாவை ஐ.தே.கட்சி தனது நியமனப்பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராக நியமித்தமை படைத்தரப்புக்கு வழங்கப்பட்ட கௌரவமாக இராணுவத்தினரால் கருதப்படுகிறது.

சரத்பொன்சேகாவை மட்டுமன்றி, போரின் போது தீவிரமாகச் செயற்பட்ட இராணுவத்தின்பல உயரதிகாரிகளைக் கூட சதிக் குற்றம் சாட்டி மகிந்த அரசு கைது செய்தது. பின்னர் அவர்கள் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டதன் மூலம் சேவையினின்றும் விலக்கப்பட்டனர். அந்த வேளையில் மகிந்த அரசால் மேற்கொள்ளப்பட்ட அந்த நீதி நியாயமற்ற செயற்பாடுகள் குறித்து ஊடகங்கள் விமர்சிக்கத் தவறின. தமது உயிரைப் பணயம் வைத்து நாட்டைக் காப்பாற்றிய தம்மைத் தேசத்துரோகிகளாக அரசு அடையாளப்படுத்தியமையை இராணுவத் தரப்பினரால் தாங்கிக் கொள்ள இயலவில்லை.

### ஊவா வெல்லஸ்ஸ கிளர்ச்சி

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இடம் பெற்ற ஊவா வெல்லஸ்ஸ கிளர்ச்சியின்போது, அதற்குத் தலைமை தாங்கிய சிங்களத்தலைவர்களை ராஜத்துரோகிகள் எனக்குறிப்பிட்டு பிரித்தானிய அரசு வர்த்தமானிப் பிரகடனம் வெளியிட்டது. 2014 ஆம் ஆண்டில், மகிந்த அரசு அந்தப் பிரகடனத்தை இரத்துச் செய்து, அதில் பங்கேற்ற கெப்பிட்டிப்பொல திசாவை உட்பட்ட சிங்களத் தலைவர்களைத் தேசிய வீரர்களாக வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தியது. அவ்விதம் செயற்பட்ட மகிந்த அரசு, பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் நாட்டைக் காக்கப் போரிட்ட இராணுவ வீரர்களை ராஜத்துரோகிகள் எனப் பிரகடனப்படுத்திச் சிறையில் அடைத்ததல்லவா?

ஊவா வெல்லஸ்ஸ கிளர்ச்சியில் ஈடுபட்ட சிங்களத் தலைவர்களுக்கு மகிந்த அரசு வழங்கிய நியாயத்தை, சரத் பொன்சேகாவை நாடாளுமன்ற உறுப்பினராக நியமித்ததன் மூலம் ஐ.தே.கட்சி நியாயப்படுத்தியுள்ளது. இருந்தபோதிலும், சரத் பொன்சேகா நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டதை மகிந்த தரப்பினரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. சரத் பொன் சேகா ஐ.தே.கட்சியுடன் ஒப்பந்தம் மேற்கொண்டபோது, பொதுத் தேர்தலில் தோல்வி கண்ட ஒருவரைத் தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராக்குவது வெட்கத்துக்கு உரியதென முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய கேலி செய்துள்ளார். சரத் பொன்சேகாவை ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக நியமித்தமையை ஐ.தே.கட்சிக்காரர்களே எதிர்த்து நீதிமன்றம் செல்லவுள்ளனர் என மகிந்த தெரிவித்திருந்தார். இவற்றிலிருந்து, மகிந்த தரப்பினர், சரத்பொன்சேகாவின் நாடாளுமன்றப் பிரவேசம் குறித்து எந்த அளவுக்கு அச்சமும் குழப்பமும் அடைந்துள்ளனர் என்பது தெளிவாகிறது.

### சரத்பொன்சேகாவும் மக்சிமஸ்சும்

சரத் பொன்சேகா, மகிந்தவுக்கு எதிராக ஜனாதிபதித் தேர்தலில் நின்றவேளை, ரோம நாட்டு வீர காவியத்தில் வரும் மக்சிமஸ் என்ற இராணுவ ஜெனரலின் கதையொன்றை மேற்கோள்காட்டி மவ்பிம பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. தனது இராணுவத் தளபதி போருக்கு மேல் போரை வெற்றி பெற்றுக் கொடுத்ததால், நாட்டு மக்கள் மத்தியில் தம்மைவிட அந்த இராணுவத் தளபதி பிரபல்யம் பெறுவதைச் சகிக்க முடியாத ரோம அரசன், அந்தத் தளபதியைப் பதவியின்றும் அகற்றினானாம். ஆனால் மனம் தளராத அந்த இராணுவத் தளபதி அரசனுக்குச் சவால் விடுத்து அரசனை நேரடி மோதலுக்கு அழைத்து அரசனைத் தோற்கடித்தானாம். அதேபோன்று, ஜெனரல் சரத்பொன்சேகாவும் அரசியலில் மகிந்தவுக்குச் சவாலாக உருவாவாரா என அந்தப் பத்திரிகை கேள்வி எழுப்பியிருந்தது.

அந்த வகையில் தற்போது ஜெனரல் சரத் பொன்சேகாவும் மக்சிமஸ் என்ற அந்த ரோம நாட்டு இராணுவத் தளபதி போன்று அரசியலில் பிரவேசித்துள்ளாரா? அவர் நாடாளுமன்றம் என்ற போர்க்களத்தில் மகிந்த தலைமையிலான பொது எதிரணியுடன் மோதி, மைத்திரி-ரணில் நல்லாட்சி அரசுக்குக் கிட்டியுள்ள மக்கள் ஆணையைப் பாதுகாப்பார் என்பதில் ஐயமில்லை.

## இலட்சக்கணக்கான மாணவர்களின் வாழ்வைச் சீரழிக்க முயற்சி

மகிந்த அரசின் ஆட்சியில், 2011 ஆம் ஆண்டு க.பொ.த.உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு ஏற்பட்ட இசற் புள்ளி குழப்பநிலை தொடர்பான பெரிய கொந்தளிப்புப் பற்றித் தாங்கள் அறிந் திருப்பீர்கள். அதன் விளைவாக 2013 ஜனவரியில் கல்வியியற் கல்லூரிகளுக்கு உள்வாங்கப்பட வேண்டிய நாம் சரியாக ஏழு மாதங்கள் கழித்து ஜுலையிலேயே உள்வாங்கப்பட்டோம். அதற்கடுத்து கிட்டத்தட்ட ஒன்பது மாதங்கள் எங்கள் அடுத்த தொகுதி மாணவர்கள் தாமதமடைந்தனர். மேலும் 2013 இல் பரீட்சை எழுதி 2015 ஜனவரியில் உள்வாங்கப்பட வேண்டிய மாணவர்கள் 2016 ஜனவரி கழிந்தும், இன்னும் உள்வாங்கப்படவில்லை என்பதை மிகுந்த மனவேதனையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அரசோ, கல்வி அமைச்சோ இது பற்றி எந்தவித கவனமும் செலுத்தவில்லை. உண்மையில் கல்வியியற் கல்லூரியில் அனுமதி பெறும் மாணவர், கள் மிகுந்த வறுமைக்கும் வேதனைக்கும் மத்தியிலேயே வருகை தருகின்றனர். எத்தனையோ மாணவர்கள் பல்கலைக்கழகத்தைத் தியாகம் செய்து, வெறுமனே மாதக் கொடுப்பனவாக கொடுக்கப்படும் 4000 ரூபாவைக் கொண்டு, போக்குவரத்து வீட்டு வாடகையுடன் பாணையும் பருப்பையும் சாப்பிட்டுக் காலம் கழிக்கின்றனர்.

இசற் புள்ளி என்றால் என்னவென்றே தெரியாத முன்னாள் கல்வியமைச்சரின் தவறுக்காக பெற்றோரின் மருத்துவச் செலவுக்குக் கூடப் பணம் வழங்க முடியாத தனயன்களாய் இன்னமும் பெற்றோர் களின் உழைப்பில் சுமையாக வாழ்கின்றோம்.

நாடளாவிய ரீதியில் 18 கல்வியியற் கல்லூரிகளிலும் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரிய மாணவர்கள் கல்வி பயின்று கொண்டிருக்கிறார்கள். அதனைவிட ஆயிரக் கணக்கில் கல்வியியற் கல்லூரிக்கு வெளியே ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். அத்தனை ஏழை மாணவர்களினதும் கோடிக் கணக்கான சம்பளப் பணத்தை திருடிவிட்டது முன்னைய அரசும், கல்வியமைச்சும்.

இது வேண்டுமென்றே நடந்த சதியாகவே எண்ணத் தோன்றுகின்றது. எது எப்படி இருந்தாலும் எவரோ செய்த தவறுக்காக எங்கள் காலத்தையும் நேரத்தையும் வீணாக்குவது எந்த வகையில் நியாயம்??

இன, மத, மொழி, பேதம் கடந்த எங்கள் நியாயமான கோரிக்கைக்கு உரிய சரியான தீர்வை அதாவது 2015 ஆம் ஆண்டுக்கு முன்பு இருந்த நிலையை காலம் தாழ்த்தாது கொண்டுவர உதவுவதன் மூலம் ஊடக ஆயுதத்தைக் கையில் வைத்திருக்கும் தங்களது தார்மீகப் பொறுப்பாகும். அத்தோடு கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்களின் ஆள்சேர்ப்பையும் நியமனத்தையும் தாமதப்படுத்துவதானது, எங்களை நம்பியிருக்கும் ஆயிரக்கணக்கான குடும்பங்களை மட்டுமல்லாது ஆசிரியர்கள் இன்றி அவதியுறும் லட்சக்கணக்கான மாணவர்களின் வாழ்வையும் சீரழிக்கும் முயற்சி என்பதைப் படித்த சமூகம் உணர்ந்து இதற்கான தீர்வைப் பெற்றுத்தர தங் கள் மேலான உதவியை வேண்டி மன்றாடி நிற்கின்றோம்.

[illegible]
யாழ்ப்பாணம்

## மேலதிக மலசலகூட வசதி நோயாளர்களுக்குக் கிடைக்குமா?

யாழ்.ஆதார மருத்துவமனையை நோயாளர்களின் ஓர் ஆலயம் என்றே கூறமுடியும். ஏனென்றால் நோயாளர்கள் தமது நோய்களுக்குத் தீர்வு காணுகின்ற ஆலயமாகவே இதனைக் கருதுகின்றனர்.

தற்போதைய சீரிய வழிகாட்டுதலின் கீழ் யாழ்.மருத்துவமனை தற்போது சிறப்பான சேவையை ஆற்றி வருகின்றது.

இருக்கின்ற ஒருசில குறைபாடுகளைத் தீர்த்து விட்டால் மருத்துவமனையின் புகழ் மேலும் ஓங்கிநிற்கும் என்பதில் ஐயமில்லை.

கிளினிக்குகள் நடைபெறும் இடத்தில் தினமும் ஏராளம் நோயாளர்கள் கூடுகின்றனர்.

இவர்கள் தமது இயற்கையின் உபாதைகளைத் தீர்க்கும் பொருட்டு மருந்து வழங்கும் இடத்துக்கு மேற்குப் புறமாக அமைந்திருக்கும் மலசல கூடத்தைப் பயன்படுத்துகின்றனர்.

இதேவேளை சிறுநீர், இரத்தம் ஆகியவற்றின் பரிசோதனையை மேற்கொள்வதற்கும் நோயாளர்கள் இங்கு வருகின்றனர். ஆனால் அந்த மலசலகூடத்தில் போதிய வசதிகள் இல்லாததன் காரணமாக இத்தகைய நோயாளர்கள் வரிசையில் நின்று அங்கு செல்ல வேண்டியுள்ளது. கிளினிக்குகளுக்கு வருகின்ற நோயாளர்களும் அந்த மலசலகூடத்தையே பயன்படுத்துவதால் பரிசோதனைக்கு வருகின்ற நோயாளர்கள் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளனர்.

இதனால் நேர விரயம் ஏற்படுவதோடு நோயாளிகள் களைப்பும் அடைந்து விடுகின்றனர்.

ஆகவே நோயாளர்களின் சிரமங்களைக் கருத்தில் கொண்டு மேலதிக மலசலகூட வசதிகளை பணிப்பாளர் ஏற்படுத்துவதற்கு ஆவன செய்யவேண்டும் எனத் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ம.நாகேஸ்வரி
மண்டைதீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# காரைநகர் வலந்தலை மடத்
# ஸ்ரீ முத்துமாரி அம்பாவ்
# சித்திரத் தேர் வெள்ளோட்ட வி



## ஆசிச் செய்தி

இலங்கைத் திருநாட்டில் யாழ்ப்பாணத்தின் காரை நகரில் மடத்துக்கரை முத்துமாரி அம்மன் என்னும் நாமம் கொண்டு வீற்றிருந்து திரு அருள் பாலித்து வரும் அம்பிகைக்கு அழகிய சித்திரதேர்(ரதம்) அமைக்கப்பட்டு வெள்ளோட்ட விழா மிகவும் சிறப்பாக நடைபெற அம்பிகையின் திரு அருளோடு குரு அருளும் கிடைக்க ஆசி கூறி அமைகின்றேன்.

சர்வே ஜனகா சுகினோ பவந்து.

**சிவ ஸ்ரீ செந்தில்நாத சுகுமாரக்குருக்கள்**
**மஹோற்சவ குரு**



## " அவளன்றி ஊர் புகும் வாயில் அறியேனே"

அவளன்றி ஊர் புகும் வாயில் அறியேனே. காரை நகர் நுழைவாயிலில் அமர்ந்து அருள் பாலிக்கின்றாள் காரைநகர் மடத்துக்கரை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் .திருப்பணி செய்வது பெரும் புண்ணியம் . பாக்கியம்.திருப்பணி செய்த கல், மரம் அந்த ஆலயத்தில் எத்தனை வருடங்கள் உள்ளதோ அத்திருப்பணி செய்தவருக்கு அத்தனை ஆயிரம் வருடங்கள் கைலாசத்திலோ வைகுண்டத்திலோ வாசம் செய்யும் புண்ணியம் உண்டாம்.

ஓர் அற்புதக் காட்சியாக அவளருளாலே எத் திருக்கோயில்களிலும் இல்லாதவாறு அம்பாளை வசந்த மண்டபத்திலே நீரின் மேல் இருத்தி சதா அருள்பாலித்துக் கொண்டிருக்கச் செய்தவர் சண்முகம் சிவஞானம். திருப்பணியில் பெயருக்கு ஏற்றவர்.

" சிவனோடொக்கும் மனிதர் ஊரில் தேடினும் இல்லை
அவரோடொப்பர் இங்கு யாவரும் இல்லை
நாடும் நகரமும் நற்திருக் கோயிலும்
தேடித் திரிந்து திருப்பணி செய்பவர்"

ஞானத்தின் மிக்க தொண்டு ஊரில் இல்லை. இக் கோயிலில் தானாகத் தோன்றிய நாகம்மாளுக்கு சிறு திருக்கோயில் அமைத்தவர்.

இன்னோர் அற்புதத்தையும் நாம் சொல்லி ஆக வேண்டும். இதுவரை நாம் தேர்த்திருவிழாவை வேறோர் திருக்கோயிலில் தேர் இரவல் பெற்றே செய்தோம். அவர் தேர் செய்யும் திருப்பணியை ஏற்பார் என்பது உண்மையில் எவருக்கும் தெரியாது. கும்பாபிஷேக இறுதித் திருவிழாவில் திருப்பணிக்கணக்காளர் என்ற வகையில் பேச வாய்ப்புக் கிடைத்தபோது திரு. சிவஞானம் அவர்களை என்ன சொல்லிப் பாராட்டுவது என அம்பாளை நினைத்தபோது " அவள் அறியாதது ஒன்றும் இல்லை"

" முல்லைக்கு தேர் கொடுத்த பாரி " என்றேன். இது சக்தியின் அருளாற்றலே. இன்று அம்பாள் சுந்தரம் மிக்க தேரை அவர் தாயார் சண்முகம் மனோன்மணி நினைவாக சிவஞானத்திடம் பெற்று வலந்தலை மாநகரில் வெள்ளோட்டத்திற்காக தெரு வீதி வந்து பக்தர்களுக்கு அருளாட்சி புரிய வைக்கின்றாள்.

**ஆ. பாலகிருஷ்ணன்.**
**ஓய்வு நிலை அதிபர். (திருப்பணிக்கணக்காளர்)**



## ஆதீன குருவின் ஆசிச் செய்தி

எமது காரைநகரின் நுழைவாயிலில் அமர்ந்து இருந்து, தன்னை நாடி வரும் அடியவர்களுக்கு அருளை வாரி வழங்கிக் கொண்டு பிரயாணம் செய்பவர்களுக்கு வழித்துணையாகவும் விளங்கும் அன்னை ஸ்ரீ முத்துமாரி அம்பிகைக்கு இன்று புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் நடைபெறுகின்றது. உண்மையில் இது அம்பிகையின் பேரருள் என்று தான் கூறலாம். உலகத்தின் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் மூலகாரணமாக இருப்பவள் அன்னை ஸ்ரீ முத்துமாரியம்மையாவாள். நாம் நினைத்து எதுவும் நடைபெறுவதில்லை நாம் நினைத்தாலும் அது நிறைவேற வேண்டும் என்றால் அன்னையின் அருள்கிடைக்க வேண்டும். அந்த வகையில் இன்று அன்னையின் புதிய தேர் சிறப்பாக அமைக்கப்பட்டு வெள்ளோட்டம் இடம் பெறுகின்றது. உலகில் எத்தனையோ பேரிடம் நிதிவளம் இருக்கின்றது. ஆனால் எல்லோரினது பணமும் பொருளும் இவ்வாறான தெய்வத்திருப்பணிக்கு, தர்ம கைங்கரியத்திற்கு பயன்படுவதில்லை. அதற்கு பலன் வேண்டும். எமது ஊரில் பிறந்து தூர இடத்தில் வசித்தாலும் எமது ஊரில் பல தெய்வத்திருப்பணிகளுக்கு, சமய, கலாசாரப் பணிகளுக்கு பேருதவிபுரிந்து கொண்டு எமது ஆலயத்தில் திருப்பணி வேலைகள் (வசந்த மண்டபம்), மகாகும்பாபிஷேகம் போன்ற காரியங்களுக்கு பேருதவி புரிந்த கொடை வள்ளல் திருவாளர் சண்முகம் சிவஞானம் அவர்கள் தமது தாயாரின் அமரர் சண்முகம் மனோன்மணியின் நினைவாக பல இலட்ச ரூபா செலவில் இன்று இந்தத் தேரை விஸ்வப்பிரம்ம கோத்திரம் திரு. ச. விஜயரத்தினம் அவர்கள் மூலம் வடிவமைத்து அன்னைக்கு காணிக்கையாக வழங்கியுள்ளார்.

" நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம்" திருவாளர் ச. சிவஞானம் அவர்களின் தர்மச் செயல்கள் தொடரவும் அவரும் அவரது குடும்பமும் சகல நலன்களும் சௌபாக்கியமும் கிடைத்து வாழ அன்னையைப் பிரார்த்தனை செய்து இச் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு எமது நல்லாசிகளைக் கூறுவதுடன் தேரை வடிவமைத்த திரு. சு. விஜயரத்தினமும் அவர் குடும்பமும் இவர்களுக்கு ஒத்துழைப்பாக விளங்கிய ஏனைய சிற்பாசாரியார்களுக்கும் வர்ணவேலைகளை சிறப்பாக செய்த திரு. ரவி குழுவினருக்கும் எமது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்றைய நிகழ்வு அன்னையின் அருளினால் சிறப்பாக நடைபெற அம்மையைப் பிரார்த்தனை செய்து நல்லாசிகளைக் கூறி அமைகின்றோம்.

" அன்னையை சரண்புகுந்தால்
அதிகவரம் பெறலாம்"

**பிரம்மஸ்ரீ.கு. சரவணபவானந்தசர்மா**
**ஆதீனகுரு (நம்பிக்கைப்பெறுப்பாளர்)**
**மடத்துக்கரை**
**ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்**



## அருளாசிச் செய்தி

காரைநகர், வலந்தலை மடத்துக்கரைப் பதியில் கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருந்து அருள் பாலிக்கும் ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கு அழகிய புதிய சித்திரத்தேர் அமைக்கப் பெற்று இன்று வெள்ளோட்ட விழா நடைபெறுவதையிட்டுப் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

வழிபடும் அடியார்களின் துயர் போக்கி இன்னருள் புரியும் ஆதிபராசக்தியின் அம்சமான ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கு அடியார்கள் ஒன்று சேர்ந்து உருவாக்கிய தேர் வெள்ளோட்டமானது சிறப்புற நிகழ எல்லாம் வல்ல அருட்தாயின் நித்திய அனுக்கிரக கிருபா கடாட்சம் கிடைக்க வேண்டும் என்று உளமாரப்பிரார்த்தித்து அருளாசிகள் வழங்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

இந்த அருள்மிகு இடத்தில் வாழ்கின்ற அனைத்து அடியார்களும் சீரோடுஞ் சிறப்போடும் வாழ வேண்டும். இந்த புதிய தேரை அமைத்த சிற்பாசாரியர்களும் திருப்பணியில் பங்கேற்ற பக்தர்களும் மற்றும் ஆலய அறங்காவலர்களும் பல வழிகளிலும் உதவிய அம்பாள் அடியார்களும் சகல சௌபாக்கியங்களும் பெற்று நலமே வாழ நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து அம்பாளின் அருள் வேண்டி அருளாசி நல்கி வாழ்த்துகின்றோம். அம்பாளின் தேர் வெள்ளோட்டம் நாட்டில் நன்மைகள் பெருகி வளம் தர வேண்டுமென்றும் தேர்த்திருவிழாவன்று அம்பாள் புதிய தேரிலே எழுந்தருளி அனைவருக்கும் ஆனந்த நல்வாழ்வை அருள வேண்டுமென்றும் பிரார்த்திக்கின்றோம்.

' என்றும் வேண்டும் இன்ப அன்பு'

**ஆதீன குரு முதல்வர்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்- இரண்டாவது குருமஹா சந்நிதானம்**

" கார் பெற்ற தோகையோ கண் பெற்ற வாழ்முகமோ
நீர் பெற்று உயர்ந்த நிறைபுலமோ அம்பாள்
தேர் பெற்று வெள்ளோட்டம் தெரு வீதி வரக்கண்ட
வலந்தலை மாநகர்க்கு எதோ உரையோம் யாம்"

காரைநகர் வலந்தலை மாநகரில் கோயில் கொண்டிருக்கும் எங்கள் மடத்துக்கரை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் இன்று சண்முகம் சிவஞானத்திடம் அவர் தாயார் சண்முகம் மனோன்மணி நினைவாக தேர் பெற்று வெள்ளோட்டத்திற்காக இரண்டாம் வீதி வருகின்றது. அம்பாளின் இத்தேரை வருக வருக என்று வாழ்த்தவும் வணங்கவும் திருவருளைப் பெறவும் எமக்கு கிடைத்த பேறு பேரின்பமாகும்.

சக்தி ஆற்றல் கொண்டே ஐந்தொழில்களும் நடைபெறுகின்றன.

" அவளை அறியா அமரரும் இல்லை
அவளன்றிச் செய்யும் அருந்தவமில்லை
அவளன்றி ஐவரால் ஆவதொன்றில்லை"

ஐந்தொழில்களில் ஒன்றான அழித்தல் தொழிலை மேற்கொள்கின்ற தன்மையினை எடுத்துக்காட்டுவதே தேர்த்திருவிழா. நாளை ஞாயிற்றுக் கிழமை அம்பிகையின் இத்தேர்த்திருவிழாவின் போது இறைவி அருளாட்சியுடன் எழுந்தருளி தேரில் வீதியுலா வருவார். இக் காட்சியினைக் காணும் பக்தர்களின் உள்ளமானது தூய்மைத்தன்மை அடையும் என்பதில் எமக்கு ஐயமில்லை.

**கு. விக்னேஸ்வரன் - (தர்மகர்த்தா)**

S.S ஞானம் கம்பனி
சென்றல் ஏஜென்சி
519, சி, ஜெயந்தி மாவத்தை,
அனுராதபுரம்.

E.S.P.NAGARATNAM & CO
52,54 Kasthuriyar Road,jaffna.
Cycles, Cycles Parts & Gift Items
Phone No: 021 222 3096, Fax: 021 222 4394
Email: espn5254@gmail.com

S.V. MURUGESU
154, Hospital Road,
Jaffna.

YOGA TRANSPORT
No.261 1/12, Main City Market,
Main Street, Colombo 11. T.P: 2445344
No.02 Thiruvalluvar Lane,
Arasady Road, Kantharmadam
T.P: 021 222 9042

B.M.ரெக்ஸ்ரைல்ஸ்
251. 1/10
மெயின் சிற்றி மாக்கற்.
கொழும்பு 11.

க.கு. கந்தையாபிள்ளை
பல்பொருள் வாணிபம்
318, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ...ந்துக்கரை ...ள் ஆலய ...விழா சிறப்பிதழ்

**தேர்த்திருவிழா நாளை (21.02.2016) ஞாயிற்றுக்கிழமை**
**காலை 6.00 மணி விநாயகர் வழிபாடு**
**காலை 8.30 மணிக்கு வசந்த மண்டப பூஜை**
**முற்பகல் 10.00 மணிக்கு சுவாமி தேரில் எழுந்தருளல்**

## வாழ்த்துச் செய்தி

மங்கல வெண்சேலையுடன் மடத்துக்கரை சுற்றும், எங்கள் காரைநகர் வயற்களமும், பனங்காடும் சூழ்ந்த மக்கள் வாழ் குடிசைகளையும், மக்களையும் பண்டையிலே காத்து வளமும் நலமும் பண்பான சுற்றங்களும் மகிழ்வுடன் காத்த வெற்றிலைப்பீடத்தில் அமர்ந்து திரு. ஆட்சி செய்த ஸ்ரீ மடத்துக்கரை அம்பாள் அம்மையே! அரசாட்சிக் கொடுவன்மை எமது மண்ணில் நாம் பிரியக் கொடூரம் செய்ததனால் உனை வணங்கத் தூரம் அதிகரித்து அல்லலுற்றோம்.

இன்று எமக்கு மங்கல வாழ்வளித்தாய் தாயே! புதிய சித்திரத்தேர் உருவாகிவிட்டது அம்மா தாயே தேரில் வலம் வந்து எமைக் காப்பாய்.

ஸ்ரீ அம்பாள் திருக்கோயில் குகனேச சர்மா சரவணபவன் சிவாச்சாரியார் வழிபாட்டுப் பூஜை செய்ய வழிபடும் அடியார்கள் சித்திரைத்தேர் உருவாக கருணை உளம் அமைந்த அறக்கொடைச் செம்மல் சண்முகம் சிவஞானம் அவர்கள் தேரை உருவாக்கிய சிற்பாசாரியார் திரு ச. விஜயரட்ணம் இவர்களுடன் அவரது கலைத் தொண்டாற்றிய உதவிக் கலைஞர்கள் அனைவருக்கும் எமது நன்றிப் பெருக்கள் சொரிய அம்மைக்கு வணக்கம்.

**க. கு.க. சிவபாலன்**
**அடியார்களின் அன்பன்.**



## கௌரவ வடமாகாண முதலமைச்சர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

காரைநகரின் நுழைவாயிலில் கோயில் கொண்டு அருள் பாலிக்கும் வலந்தலை மடத்துக்கரை ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்குப் புதிய சித்திரத் தேர் ஒன்றை வடிவமைத்து இன்று வெள்ளோட்டம் நடைபெறுவதை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன்.

1806ஆம் ஆண்டளவில் ஸ்தாபிக்கப்பட்டு 1980ஆம் ஆண்டு கற்கோவிலாக வடிவமைக்கப்பட்ட முத்துமாரி அம்பாள் ஆலயம் 2014ஆம் ஆண்டில் கும்பாபிஷேகத்தின் பின்னர் 2015இல் புதிய கொடித்தம்பம் அமைக்கப்பட்டு மஹோற்சவக் கிரியைகள் ஆரம் பிக்கப்பட்டதாக அறிகின்றேன்.

இவ்வாறு புராதன வரலாற்றைக் கொண்ட ஸ்ரீ முத்துமாரி அம்பாள் இன்று சித்திரத் தேரில் பவனி வருவது அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

காரைநகர் வாழ் மக்கள் சைவத்தின் மீதும் ஆலயக் கடமை களிலும் மிகுந்த ஈடுபாடு உடையவர்கள். ஒவ்வொருவரினதும் தர்மச் செயல்கள் அவர்களை வாழ்க்கையில் துன்பங்களிலிருந்து விடுபடுவதற்குத் துணைபுரிகின்றது. இறைவனுக்கு ஆலயம் அமைத்தல், ஆலயத்தினை முறையாகப் பராமரித்தல், நித்திய நைமித்தியக் கிரியைகள் ஒழுங்காக நடைபெறுவதற்கு துணை புரிதல் போன்ற தர்மச் செயல்கள் அவற்றுள் அடங்குவன. அந்த வகையில் இன்று சித்திரத்தேரில் அம்பாள் பவனிவருதல் அடியார்கள் அவர்தம் துன்பங்களிலிருந்து விடுபடுவதற்கு உறுதுணையாக விருக்கும்.

அந்த வகையில் ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கு நித்திய நைமித்தியக் கிரியைகளைச் சிறப்பாக நடத்தி அவளருளைப் பெறுவோமாக.

**நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்**
**முதலமைச்சர் - வடமாகாணம்.**



## சித்திரத்தேரேறும் அன்னை ஸ்ரீ முத்துமாரி அம்பாள்

காரைநகர் வலந்தலை மடத்துக்கரை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் திருக்கோயில் வரலாற்றுச் சிறப்பு மிக்க தொன்மைப்பதியாகும். அன்னையின் வற்றாத அருள் சிறப்பினால் மக்கள் சீரும் சிறப்புமாக வாழ்ந்துவருகின்றார்கள். இப்பகுதியி லும் சரி பிற இடங்கள் சென்று வாழ்ந்தாலும் சரி ஒவ்வொரு மக்களும் தமது வாழ்வின் உயர்விற்கு அன்னையின் அருள் தான் காரணம் என்னும் உணர் வுடையவர் களாக வாழ்பவர்கள் ஆவார். அதனால் தான் தமது வாழ்வில் ஒவ்வொரு உயர்வுப்படிக்கும் ஒவ்வொரு திருப்பணிகளை அம்பாளுக்கு நிறைவேற்றி வருகின் றார்கள் அந்த வகையில் அம்பாளுக்கு புதிய அழகு தரும் சித்திரத் தேரினை அமைத்து வெள்ளோட் டத்தினையும் இன்று காணுகின்றார்கள். நிறைவான ஆலயங்களினால் சூழப் பெற்று பூலோககைலாசமாக திகழ்கின்ற காரைநகர் மண்ணில் மேலும் திருவட் பொலிவுதரும் வகையில் அம்பாளின் சித்திரத்தேர் அமைந்துள்ளது. சித்திரத்தேரினில் அம்பாளைக் காணவும் திருவடம் பிடித்து இழுத்து புண்ணியம் அடையவும் இருக்கும் அடியார்கள் பாக்கியசாலிகள் . அன்னையின் கருணை அனைவருக்கும் கிடைக்க பிரார்த்தித்து ஆசிர்வதிக்கின்றேன்.

**" சந்நிதாச்சாரியார்"**
**சிவஸ்ரீ. சபா. வாசுதேவக்குருக்கள்**
**வீணாகானகுருபீடம்- குருமார்சந்நிதானம்**
**சித்தன்கேணி.**



## வாழ்த்துப்பா

திங்களொடு கங்கையினை சிரமேற் சூடும்
சிவபிரான் அடிமறவாச் சிந்தை யாளர்
தங்குமெழில் காரைவள நாட்டின் கண்ணே
சக்தி ஒளி மிளிரும் மடத்துக் கரையில்
பொங்கலுடன் பூசனைகள் ஏற்ற தாய்க்கு
புதிதான தேரொன்று ஆக்கி இன்று
மாங்களமாய் வெள்ளோ ட்டஞ்செ ய்கின்றாரே
மனதார அவளடியை வணக்கம் செய்வாம்

தவமுனிவர் பலர் வந்த காரை நாட்டில்
சக்தி ஒளி மிளிரும் மடத்துக் கரையில்
சிவமபெருக் கும்மாரி யம்மைத் தாயினுக்கு
சிவஞான ப்பேருடை யோன் நிதியை நல்க!
நவமான தேரொன் றாக்கித் தந்தான்
நற்கலை ஞன்விஜய ரத்தின ன்தானே
அவர்களி ருவருமே என்றும் வாழி
அம்பிகை யினருள் கூட்ட வாழி வாழி

**வே. குமாரசுவாமி**
**காரைநகர்**

RUPA
Versatile Trades
N0. 104 A, Stanley Road,
Jaffna.T.P: 8330

யாழ் காலணியகம்
யாழ் பாட்டா
Agent For: Bata
11, Modern Market,
Hospital Road, Jaffna.

ஏகாம்பரம்
புடவை மாளிகை
72(9), பெரியகடை, யாழ்ப்பாணம்
021 222 2151

இராஜேஸ்வரி
ரெக்ஸ்ரைல்ஸ்
(இராஜபுரம்)
105, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே :021 222 6953

KAJAMUGAN Hardware
Leading Hardware Merchant in
Jaffna Pennisulla
147, 149, Stanley Road, Jaffna
Tel: 021 222 2833, Fax: 021 222 2368
Head Quarters: 103, Old Moor Street, Colombo 12
Tel: 011 254 2985 Fax: 011 254 2984
E.mail: kajamuganhw@hotmail.com

நோத் எஜென்சி
168, 169, மார்க்கற் சைற் அனுராதபுரம்.
(Holcim சிமெந்து ஏக விநியோகஸ்தர்)
North Agency
168.169. Market Site, Anuradapuram.
(Holcim Cement Distributor.)

(C/28458)(10.17.18.20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனின் வாழ்வில் பெற்றோர்கள்

கிருஷ்ணராஜா சஞ்ஜீவன்

“அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்” எனகொன்றை வேந்தனில் ஔவையார் மிகவும் அழகாகக் கூறியுள்ளார். உலகில் நாம் அவதரிக்கும் முன்பு தாயின் வயிற்றிலே கருவாகிப் பின்னர் பிறக்கிறோம். தாய் என்பவர்,தன் பிள்ளையை எவ்வித தீய வழியிலும் ஈடுபடுத்தாமல் நல்லொழுக்கப் பண்பாடுகளைக் கற்பித்து விடும் ஒரு பெண் தெய்வம். தந்தை என்பவர்,தன் பிள்ளைக்கு நல் புத்திமதிகளும்,அறிவையும் எவற்றைச் செய்ய வேண்டும், எவற்றைச் செய்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை அன்பினூடாக அப்பிள்ளையின் சிந்தனையைத் திறக்கும் ஓர் ஆண் தெய்வம். எத்தனை காலம்தான் கடந்தாலும், எம்மைக் கண்ணை இமைகாப்பது போலக் காத்து நிற்கும் இரு தெய்வங்களும் எம் பெற்றோர்கள் தான். தம்மைப்பற்றிச் சிறிது கூடச் சிந்திக்காமல்,எப்பொழுதும் தம் பிள்ளைகளைப் பற்றிச் சிந்திக்கின்றவர்களே பெற்றோர்கள். எம்மைப் பெற்றெடுத்து வளர்த்து,எம்மைத் தாலாட்டிப் பின் நடக்கக் கற்றுக் கொடுத்து, நன்றாகப் பேசும்திறனைக் கற்றுக் கொடுத்து,தம் பிள்ளையின் கல்விக்காக முன்பள்ளியில் சேர்த்து பின்னர் கல்லூரியில் சேர்த்து பின்னர் பட்டப்படிப்புகள், மேல்படிப்புகள் என அத்தனைக்கும் தன்னலம் பார்க்காமல் துன்பப்பட்டு,பின்னர் எம்வாழ்வில் நாம் தேர்ச்சியடையும் சந்தர்ப்பத்திலும் எம்மை வாழ்த்தி ஆசி கூறுபவர்களே எம் பெற்றோர்கள்.




இத்தனை அன்பு கொண்ட பெற்றோர்கள்,தம் பிள்ளையின் விருப்பு வெறுப்புக்கள், படிப்பு மற்றும் அத்தியாவசியமான அனைத்திலும் செல்வாக்குச் செலுத்தும் காரணியாகவும் உள்ளனர். மனிதனின் வாழ்வில் முதலாவதாக அவன் கண்ணால் காண்பது தாயைத்தான். பின்னர் தான் தந்தை. முற்காலத்தில் எல்லாம் பிள்ளைகள் பெற்றோரை வணங்கி, முதியோரை வணங்கியே வீட்டை விட்டு வெளியேறுவார்கள். ஆரம்பத்தில் எல்லாம்,பெற்றோர்களுக்கு பிள்ளைகள் பயப்படும் காலமாகத்தான் இருந்தது. இப்போது அந்தக் கலாசாரத்தை கண்ணால் காண்பதே அரிதான காட்சியாகும். 21 ஆம் நூற்றாண்டிலே பெற்றோர்கள் பிள்ளைகளுக்குப் பயப்படுகின்றனரென்றால்,பிற்காலத்தின் ஒழுக்கமான சமூகத்திற்குப் பதிலாக ஒழுக்கமற்ற துர்நடத்தையான வன்முறைச் சமுதாயமே தோன்றும்.

எம்மைப் பெற்று வளர்க்க அத்தனை துன்பங்களை அனுபவித்த எம் தெய்வங் களை முதுமைக் காலத்தில் நாம் கவனமாகப் பார்த்து,அவர்களுக்கு என்ன தேவையோ அவற்றைநிறைவேற்றிக்கொடுக்கவேண்டும். தமது முதுமைக் காலத்திலாவது,தமது பிள்ளை நாம் செய்த நன்றியை மறக்காமல் தமக்கு உதவும் என்ற நம்பிக்கையில் தான் எமக்காக இவ்வளவு துன்பங்களை அனுபவித்து,எம்மை நன்றாகப் படிக்க வைத்து தாம் பட்ட துன்பம், வேதனையைத் தமது பிள்ளைகள் அனுபவிக்கக் கூடாது என பெற்றோர்கள் சிந்திக்கின்றனர். சிந்தித்துப் பாருங்கள், ஒரு முறை எம்மை எமது பெற்றோர்களோ அல்லது பாடசாலையில் அதிபர், ஆசிரியரோ அடித்தால் எமது மனதிலோ வெளிப்படையாகவோ அவர்களைத் திட்டித்தீர்க்கின்றோம். அவற்றை மீண்டும் ஒருமுறை யோசித்தால் அது எமது நன்மைக்காகவே அவ்விதம் திட்டு கின்றனர் என உணர்வோம்.

இப்போது எல்லாம் தேவையில்லாத வீணான இளவயதுத் திருமணம் மூலம் பலர் தமது பெற்றோரைத் தனியே விட்டுப் பிரிந்து செல்லுகின்றனர்.இதனால் அவர்களது பெற்றோர் மிகவும் வேதனையுடன் கண்ணீர் சிந்தி அந்தவிரக்தி காரணமாக தம் உயிரையும் மாய்த்துக் கொள்கின்றனர்.

> காலம்தான் எத்தனை கடந்தாலும் எம்மைக் கண்ணை இமைகாப்பது போலக் காத்து நிற்கும் இரு தெய்வங்களும் எம் பெற்றோர்கள் தான். தம்மைப் பற்றிச் சிறிது கூடச் சிந்திக்காமல் எப்பொழுதும் தம் பிள்ளைகளைப் பற்றிச் சிந்திக் கின்றவர்களே பெற்றோர்கள்.

இவ்வளவு வேதனையும் ஏன்? எம் சமூகம் எதனால் இப்படிப்பட்ட தேவையில்லாதவற்றினுள் தலை புகுத்தி தம் வாழ்வையும், தமது பெற்றோர் வாழ்வையும் சீரழித்துக்கொள்கின்றனர்.நாளுக்கு நாள் இப்படிப்பட்ட விடயங்கள்எம்மைச்சுற்றியோ,எம்சூழலை அண்மித்தோ, ஊருக்கு ஊர் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இவற்றை எல்லாம் திருத்தி நம் இளந் தலைமுறையினர் நல்லதொரு எதிர் கால வாழ்வைத் தமக்கும் தம் பெற்றோருக்கும் இட்டுக் கொடுக்க வேண்டும். இவ்வாறு தாய், தந்தையைப் பற்றியே ஔவையாரின் கொன்றை வேந்தன், மூதுரை, ஆத்திசூடி, நல்வழி என அனைத்திலுமே பாடியுள்ளார். அது மட்டுமல்லாமல் மேலும் பற்பல நூல்களில் எல்லாம் பெற்றோர்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வாறான வற்றினாலே “பெற்றோர் எல்லாம் பிள்ளைகள் அல்லர்” என வெற்றி வேற்கையில் கூறப்பட்டுள்ளது. தாயின் சிறப்பைப் பற்றியும் தந்தையின் சிறப்புப் பற்றியும் சொல்லத் தேவையில்லை. “தாயிற் சிறந்த கோயிலும் இல்லை, தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை” எனவும் அறிஞர்கள் கூறுவார்கள். தந்தை தாய் பேண் எனவும் கூறியுள்ளனர். எனவே இறுதிக்காலத்தில் கூட எம் பெற்றோரைக் கண்ணீர் மல்க விடாமல் வாழ வைப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் எஸ்.ரி.பி. இராஜேஸ்வரன்



# யாழ்ப்பாணச் சுண்ணாம்புக் கற்பாறையில் இடம்பெறும் செயன்முறைகளும் விளைவுகளும்


யாழ்ப்பாணப் பிரதேசத்தில் நவக்கிரி என்னும் கிராமத்தில் கடந்த மாதம் 23 ஆம் திகதி அதிகாலையில் ஏற்பட்டதாக அறியப்பட்ட நில வெடிப்பு(மண்படையில் காணப்பட்ட வெடிப்பு) பற்றி அன்றிலிருந்து இன்றுவரை பல விளக்கங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்தப்பிரதேச மக்கள் மத்தியில் இவ்விடயம் தொடாபாக பூரணமான விளக்கங்கள் கிடைக்காத நிலையில் தேவையற்ற மனப் பீதிகளும், குழப்பங்களும் ஏற்பட்டுள்ளன.

இந்தவிடயத்தைப்பூரணமாக ஆய்வு செய்து, யதார்த்த நிலையை முன்வைக்க வேண்டியது அவசியமான தாகும். அந்தவகையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக புவியற்துறையினா் இந்த விடயம் பற்றிய பூர் வாங்க ஆய்வுகளையும்,தொடர்ச்சியான அவதா னங்களையும் செய்துவருகின்றனர். இந்தவிடயம் பற்றி மக்களுக்கு எளிதில் விளங்கக்கூடியவகையில் ஊடகங்களுக்கு தகவல்கள் வழங்கப்பட்டு அவை தொலைக்காட்சியூடாகவும், வானொலி மூலமாகவும், அச்சு ஊடகங்கள் வாயிலாகவும் பொதுமக்களுக்குத் தரப்பட்டுள்ளன. மேலும் தெளிவான விளக்கங்களை ஆதாரங்களுடன் தெளிவுபடுத்தப்படவேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது. இந்தப்பின்னணியில், இந்தக் கட்டுரையில் யாழ்ப்பாணப் பிரதேசத்தின் சுண்ணாம் புப்பாறை பற்றியும்,அவற்றில் இடம்பெறக்கூடிய இயற்கையான செயன்முறைகளையும், அவற்றின் விளைவுகளைப் பற்றியும் விவரிக்கப்படுகின்றது.

### யாழ்ப்பாணப் பிரதேச சுண்ணாம்புப் பாறையின் தோற்றம்

யாழ்ப்பாணப் பிரதேசம் மட்டுமல்ல,இலங்கையின் புத்தளம் தொடக்கம் முல்லைத்தீவு வரை ஒரு கோடு வரையப்பட்டால், அந்தக்கோட்டுக்கு வடமேற்குப்பாகம் முழுவதும் அடிப்பாறையாக சுண்ணாம்புப் பாறையே காணப்படுகின்றது.

இந்திய (தென் இந்தியா) இலங்கைத் திணிவுகள் கடலால் பிரிக்கப்படாது இருந்த காலங்களில், (இன்றைய மன்னார் குடா, பாக்குடா, தாழ்நிலம் அமைந்துள்ள பகுதிகள்) அவற்றிற்கிடையே ஒரு தாழ்நிலம் இருந்ததாகவும்,சுமார் 20 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் (புவிச்சாதகாலப்படி, மயோசியன் காலம்) இந்தத் தாழ்நிலம் கடலால் ஆக்கிரமிக்கப்பட்டதாகவும் இந்தக் கடல் மிக வெப்ப மானதாகவும்,முருகை போன்ற சுண்ணச் செறிவான, உயிரினங்கள் வாழ்வதற்கு உகந்த சூழல் காணப் பட்டதாகவும் இவ்வுயிரினங்களின் எச்சங்கள் கடற் கீழ் படிவுகளாகப் படிந்து இறுகியே சுண்ணப்பாறை யாக உருவாகியுள்ளது எனவும் அறியப்பட்டுள்ளது. சுண்ணச்செறிவான இப்படிவுகள்,சில நூறு மீற்றர் தடிப்புக்கொண்டவையாகக் காணப்பட்டதாகவும் தென்இந்தியாவின் வார்காழி, காரைக்கால் போன்ற இடங்களிலும்,இலங்கையின் வடமேற்குப் பாகங் களிலும்,தடித்த படைகளாக நீர்ப்பரப்புக்கு கீழ்,படிந்தி ருக்கின்றன என்றும் கருதப்படுகின்றது. புவிச்சாத காலத்தின் 'ரேறிக்' காலங்களில்,உலகின் பலபாகங் களிலும் குறிப்பிடத்தக்க மலையாக்கங்கள் இடம் பெற்றபொழுது (கிழக்கு இந்திய மலைவலயம், இமய மலை, காப்பேந்தியன், அல்ப்ஸ், அற்லஸ், அன்டீஸ்) இந்திய - இலங்கைக் குரிய கடற்கீழ்படிவுகள் நீர்ப் பரப்பிற்கு மேல் உயர்த்தப்பட்டுள்ளன. இதன் விளை வாகவே இலங்கையின் வடமேற்குப்பாகத்திலும், யாழ்ப்பாணப் பகுதியிலும் ஏறத்தாழ கிடையான படையமைப்பில் சுண்ணாம்புப் பாறை கடல் மட்டத் திற்கு மேல் உயர்த்தப்பட்டிருக்கின்றது. பாறைகள் உயர்த்தப்பட்ட பின்னரும் பிற்காலங்களுக்குரிய படிவாக்கங்களும்,வெளியுருவ செயன் முறைகளும் இடம்பெற்று, இந்தப் பிரதேசம் இன்றைய நிலையை அடைந்துள்ளது. இந்தப்பாறைகள்,15-25 மீற்றர் வரை கடல்மட்டத்திற்கு மேல் உயர வேறுபாடு கொண்டதாகக் காணப்படுகின்றன. இந்தப் பாறைப் படைகளுக்கு மேல் வேறுபட்ட பண்பு கொண்ட மண் படைகள் காணப்படுகின்றன.



யாழ்ப்பாணப் பிரதேச சுண்ணாம்புப் பாறையின் பண்பு களைப் பொறுத்தவரையில், வன்மையானதும், இறுக்க மானதும், மற்றும் அடுக்குகளின் தெளிவற்ற தன்மையும், வெளிர் வெண்ணிறமான தன்மை யும் கொண்ட பல்லியற் பண்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ளதாகக் குறிப்பிடலாம். பொதுவாக இந்தப் பிரதேசத்தில் காணப்படும் அடையல் வகுப்பைச் (Sedimentary type) சேர்ந்த சுண்ணாம்புப்பாறையை,

அ. முருகைப் பாறை கொண்ட சுண்ணாம்புப்பாறை (Coralline lime stone). (அண்மைக் காலத்தில் இருந்து 10.0 மில்லியன் வருடகாலவயதைக் கொண்டவை)

ஆ. 25 வீதம் - 35 வீதம் சிலிக்காவைக்கொண்ட மணற் தன்மையான சுண்ணாம்புப்பாறை (Sandy limestone)

இ.வன்தன்மையான சுண்ணாம்புப் பாறை (Hard limestone) (இது 15.0 - 25.0 மில்லியன் வருடகால வயதைக் கொண்டவை) எனவும் வகைப்படுத்தக்கூடியதாகவுள்ளது. (WRB. 1982)

மிகக்கூடிய உயிர்ச்சுவடுகளைக் கொண்ட இந்தப்பாறை மிக இலகுவாக வானிலையால் அழிவுக்கு (weathe ring Process's) உட்படக்கூடியது. மணற் தன்மையான அடுக்குகள், மக்னெற்றைற், ஹாணற், ஸிர்க்கோன், மொனஸைற், மைக்கா, மணிகளைக் கொண்டதாகவுள்ளது. பெருநிலப்பரப்பின் விஜயன் பாறைகளில் வானிலை யால் அழிதல் மற்றும் அரிப்பு நடவடிக்கைகள் ஏற்பட்டதினால்,இம் மணிகள்வெளியேற்றப்பட்டு இங்குபடியவிடப் பட்டிருக்கலாம்.

> குடாநாட்டின் சிலபகுதிகளில் மேற்பரப்பிலிருந்து அடிப் பாறை வரை வன்தன்மை உள்ள பாறைப்பகுதிகளும் சில இடங்களில் மென் தன்மை, வன்தன்மை கலந்த நிலையிலும் பாறைப்படைகள் காணப்படு கின்றன. மேலும் வானிலையால் அழிதல் செயன்முறை பரவலாகக் காணப்பட்டதை பாறைப் படுக்கைகளில் சாதாரண மாக அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

குடாநாட்டில் இது அதிகமாகக் காணப்படுகின்றது. குடாநாட்டின் சிலபகுதிகளில் மேற்பரப்பிலிருந்து அடிப்பாறைவரை வன்தன்மை உள்ள பாறைப்பகுதி களும்,சில இடங்களில் மென்தன்மை, வன்தன்மை கலந்தநிலையிலும்பாறைப்படைகள் காணப்படுகின்றன. மேலும் வானிலையால் அழிதல் செயன்முறை பரவலாகக் காணப்பட்டதை,பாறைப்படுக்கைகளில் சாதாரணமாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

சுண்ணாம்புப்பாறை அதன் இயல்புக்கு ஏற்ப படையாக்கங் களையும் (beddings), மூட்டுக்களையும் (Joints), சிறிய உடைவு களையும் (Fissurees) கொண்ட தாகவும் காணப்படுகின்றன. இத் தகைய அமைப்பும், நீரை உட்புக விடும் இயல்பும்,நீரைத்தேக்கி வைத்திருக்கக் கூடிய பண்பும் இப்பாறைகளின் சிறப்பான பண்புகளாகும். நீராப்பிற்கும், கரைசல் தொழிற் பாட்டிற்கும் உட்பட்டு, உடைந்து நொறுங் கக்கூடிய பண்பும் கொண்டவை. இலகுவில் அரிக்கப்பட்டது போக எஞ்சியவை அரிபடாமல் உறுதி யாக நின்று பல்வகை நிலவுருவங்களை உருவாக்கக் காரண மாகவுள்ளன.

### சுண்ணாம்புப் பாறைகளில் இடம்பெறும் உருக்குலைவு செயற்பாடுகள்

கடலில் படியவிடப்பட்ட சுண்ணாம்புப்பாறை, நீர்ப்பரப்புக்கு மேல் உயர்த்தப்பட்ட பின்னர், தொடர்ந்தும் புவி வெளியுருவ செயன்முறைக்கு இந்தப் பாறைகள் உட்பட்டு வந்துள்ளன. பிற் காலத்திற்குரிய படிவுறுதல் செயற்பாடுகளும்,வானிலையால் அழிதல் செயற்பாடுகளும்,காற்றுக்களின் தொழிற்பாடுகளும், தாவர உயிரினங்களின் தொழிற்பாடுகளும் இடம்பெற்று வந்திருக்கின்றன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வரலாற்றில் இன்றைய தினம்

1835 - சிலி - கொன் செப்சன் பிரதேசம் நிலநடுக்கத்தால் அழிந்தது.

1810 - தேசியவாதியும், நெப்போலியன் படைகளுக்கு எதிரான புரட்சியாளருமான அன்றியாஸ் கொபர் ரைறோலீனுக்கு சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

1873 - கலிபோர்னியா பல்கலைக்கழகம் தனது முதலாவது மருத்துவக் கல்லூரியை சான் பிரான்ஸிஸ்கோவில் தொடங்கியது.

1921 - செக்கோஸ்லேவியாவில் இளம் கம்யூனிஸ்ட் சங்கம் தொடங்கப்பட்டது.

1933 - நாஷி கட்சிக்கென தேர்தல் பரப்புரைக்காக நிதி சேர்ப்பதற்கு அடல்ப் ஹிட்லரின் செயலாளர் கைத்தொழிலாளர்களைச் சந்தித்தார்.

1935 - அந்தாட்டிக்காவில் முதல் கால் பதித்த பெண்மணியானார் கரோலின் மிக்கெல்சன்.

1944 - இரண்டாம் உலக மகாபோர் ஜேர்மனிய விமான உற்பத்தி நிலையங்களின் மீதான குண்டுத் தாக்குதலுடன் "பெரியவாரம்" நடவடிக்கை தொடங்கியது.

1944 - இரண்டாம் உலக மகாயுத்தம்; எனிவெரொக் தீவை அமெரிக்கா கைப்பற்றியது.

1965 - அப்பலோ திட்ட விண்வெளி வீரர்கள் சந்திரனில் கால் பதிப்பதற்கான இடத்தைத் தெரிவுசெய்யும் புகைப் படங்களை எடுப்பதற்காக அனுப்பப்பட்ட றேஞ்சர் 8 விண்கலம் தனது பணியை வெற்றிகரமாக நிறைவேற்றிய பின்னர் விண்கலம் சந்திரனில் மோதியது.

1971 - அமெரிக்காவின் அவசர ஒலிபரப்பு முறைமை, எதிர்பாராத விதமாக இயங்கத் தொடங்கியதால் தேசிய ரீதியில் உசார் நிலை இடம்பெற்றது.

1989 - ஐ.ஆர்.ஏ. இன் குண்டுத் தாக்குதலில் பிரித்தானிய இராணுவ விடுதி ஒன்றின் ஒரு பகுதி அழிவடைந்தது.

2006 - தென்கொரியாவில் ஐக்கிய மக்கள் ஜனநாயக அரசியல் கட்சிகள் மூன்று இணைந்து தேசிய கட்சியொன்று உருவாக்கப்பட்டது.

2009 - சி-4 வெடிபொருள்கள் நிரப்பப்பட்ட தமிழ்ப் புலிகளது இரண்டு விமானங்கள் தேசிய விமானப்படைத் தலைமையகத்தைத் தாக்கச் செல்கையில் சுட்டு வீழ்த்தப்பட்டன.

2014 - முருகன், சாந்தன், பேரறிவாளன் விடுதலைக்கு இடைக்காலத் தடை.

# புத்திசாலி எப்போதும் பலசாலிதான்



ஒரு வைத்தியன் காட்டுச் செடியின் பழத்திலிருந்து ஒருவித மருந்தைத் தயாரித்து, அது மகா சக்தி வாய்ந்தது என்று கூறிப் பலருக்கு விற்றுப் பொருள் ஈட்டி வந்தான். அதைப் பயன்படுத்திய பல ருக்கு கடுமையான புதிய நோய்கள் வந்தன. ஒருவனுக்குப் பைத்தியமே பிடித்து விட்டது. இதை அறிந்த தெனாலிராமன் சாமர்த்தியமாகப் பேசி வைத்தியனை அழைத்து வந்து பைத்தியக்காரனிடம் விட்டுவிட்டான். பைத்தியம் பிடித்தவன் தனக்கு மருந்து கொடுத்த அந்த வைத்தியனைக் கண்டதும் வெறியுடன் அவனை அடித்தே கொன்று விட்டான். அரசருக்கு இந்தச் செய்தி தெரிந்தது. செத்துப் போன வைத்தியனின் உறவினர்கள் தெனாலிராமன் செய்த சூழ்ச்சியால்தான், வைத்தியன் இறந்தான் என அரசரிடம் முறையிட்டார்கள்.

அரசர் சபையினரைத் தெனாலிராமனுக்கு என்ன தண்டனை வழங்கலாம் எனக் கேட்டார். ஆளுக்கொரு யோசனை கூறினார்கள். ராஜ குரு தெனாலிராமனைக் கழுத்தளவுக்கு நிலத்தில் புதைத்து, யானையைக்கொண்டு அவனது தலையை மிதிப்பித்து சாவுத் தண்டனை நிறைவேற்றவேண்டும் எனக் கூறினார். மன்னரும் அந்த முறையிலேயே தண்டனையை நிறைவேற்றுமாறு உத்தரவிட்டார்.

காவலர்கள் தெனாலிராமனை இழுத்துச் சென்று ஒரு மைதானத்தில் கிடங்கு ஒன்றை வெட்டி, அதில் தெனாலிராமனை இறக்கி கழுத்தளவுக்கு மண்ணால் மூடிவிட்டனர். கொஞ்சநேரம் இரு, பட்டத்து யானையுடன் வருகிறோம் எனக் கூறிக் காவலர்கள் சென்றனர்.

தெனாலிராமனோ தான் எப்படித் தப்புவது என்பது புரியாமல் அவதிப்பட்டுக் கொண்டிருந்தான்.

காட்டிலிருந்த பழங்களைப் பறித்து வந்து இறந்துபோன வைத்தியனுக்குக் கொடுத்துப் பணம் பெற்றுவந்த கூனன் ஒருவன் வெளியூரிலிருந்து குறுக்குப் பாதை வழியாக அந்த இடத்துக்கு நடந்து வந்தான். இங்கு வைத்தியன் அடித்துக் கொல்லப்பட்டமை பற்றியோ, தெனாலிராமனைப் பற்றிய விவரமோ அவனுக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை. ஒரு மனிதன் மண்ணில் புதைந்து தலையை மட்டுமே வெளியே நீட்டிக் கொண்டிருக் கிறானே என அருகில் வந்து விசாரித்தான். தெனாலிராமன் "நண்பரே எனக்கு முதுகில் கூனல் இருந்தது. இப்படிக் கழுத்தளவில் உடலைப் பூமியில் புதைந்தபடி நின் றால், கூன் நிமிர்ந்துவிடும் என்று உங்கள் வைத்தியர் கூறினார். வெகுநேரமாக நிற்கிறேன். வெளியே வந்தால் தான் கூன் நிமிர்ந்துள்ளதா என்பதைப் பார்க்கலாம். கொஞ்சம் வெளியே வர உதவி செய்வீரா?" என்றான். கூனனின் உதவியுடன் வெளியே வந்த தெனாலிராமனின் முதுகில் கூன் இல்லாததைக் கூனன் கண்டு ஆச்சரியப்பட்டான். தெனாலிராமனின் ஆலோசனைப்படி அவனும் தனது கூனை நீக்கச் சொன்னான். அந்தக் குழியில் கூனன் இறங்கிக்கொள்ள தெனாலி ராமன் கழுத்தளவு மணலைப் போட்டுக் குழியை மூடி விட்டு சிறிது நேரம் கழித்து வந்து அவ னைக் குழியிலிருந்து மீட்டெடுப்பதாகக் கூறி விட்டுச் சென்றுவிட்டான்.

அரசர் தெனாலிராமனுக்கு சாவுத் தண்டனை அளித்ததிலிருந்த மனவேதனையோடிருந்தார். ஒரு நல்ல புத்திசாலியை அவரசப்பட்டுத் தீர விசாரிக்காமல் சாவுத் தண்டனை அளித்துக் கொன்றுவிட்டோமே என்று துன்பப்பட்டார்.

தனது குதிரை மீதேறி மைதானத்துக்கு வந்தார். அங்கு யானையை ஏவி தெனாலிராமன் என நினைத்து கூனனின் தலையில் யானையை மிதிக்கச் செய்த காவலர்கள் வேலை முடிந்து திரும்பிக்கொண்டிருந்தார்கள்.


அரசனைக் கண்ட அவர்கள் அரசே! உங்களது கட்டளைப்படி தண்டனையை நிறைவேற்றி விட்டோம் எனப் பணிவுடன் கூறினார்கள்.

மனத்துன்பம் கொண்ட மன்னர் அடையாளம் தெரியாமல் நசுக்கப்பட்டிருந்த கூனனின் தலையை தெனாலிராமனது தலை என எண்ணிச் சில நிமிடம் கண்கலங்கி நின்றுவிட்டு, தெனாலிராமனின் மனைவிக்கு ஆறுதல் சொல்லி விட்டு வரத் தெனாலிராமனின் வீடுநோக்கிச் சென்றார்.

வீட்டின் கதவு மூடப்பட்டிருப்பதையும் உள்ளே பேச்சுக் குரல் கேட்பதையும் உணர்ந்து குதிரையை விட்டு இறங்கி மெதுவாக நடந்து சென்ற அரசர் உள்ளே தெனாலிராமனின் குரல்கேட்டுத் திகைத்து நின்றார். தவறு செய்த வைத்தியனைத் தண்டனை அனுபவிக்க வைத்ததையும், சாவுத் தண்டனையிலிருந்து தப்ப வைத்தியனுக்குப் பழம் பறித்துத் தந்த கூனனைக் கிடங்கில் இறக்கியதையும் தன் மனைவியிடம் விரிவாகக் கூறிக்கொண்டிருந் தான் தெனாலிராமன்.

ஆனந்தத்தோடு தெனாலிராமனின் வீட்டுக்கதவைத் தட்டிய அரசர் தெனாலிராமனைக் கட்டிப் பிடித்துக்கொண்டார். அவசரப்பட்டு தீர விசாரிக்காமல் அவனுக்குத் தண்டனை வழங்கியதற்காக மன்னிப்புக் கேட்டுக்கொண்டார் மன்னர்.

## வர்ணம் தீட்டுவோம்... வாங்க....





## இவை பத்தும் பலரகம்

1. இந்தியாவிலுள்ள அழகிய மிக நீண்ட கடற்கரை - மெரீனா (சென்னையில் உள்ளது)
2. இந்திய அரசின் மிக உயர்ந்த விருது - பாரத ரத்னா
3. உலகின் மிகப் பெரிய தீவு -கிரீன்லாந்து
4. உலகின் மிகப்பெரிய கண்டம் - ஆசியா (1,72,55890 சதுர மைல்)
5. உணவின் எந்தப்பாகம் விரைவில் சீரணிக்கப்படுகிறது - சர்க்கரை
6. காளானிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட மருந்து -பென்சிலின்
7. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் பூ - குறிஞ்சி மலர் (இந்தியாவின் கோடைக் கானல் பகுதிகளில்)
8. ஆங்கிலத்தில் முதன்முதலில் அகராதியை உருவாக்கியவர் - டாக்டர் ஜோன்சன்
9. கனடாவின் பிரதான ஏற்றுமதிப்பொருள் - மரக்கூழ் (காகிதம்)
10. தனக்கென ஒரு கிராமத்தையே உருவாக்கியுள்ள சொக்லேற் தயாரிப்பு நிறுவனம் - காட்பரி சொக்லேற் நிறுவனம்.

## உங்கள் ஞாபக சக்திக்கு

இங்குள்ள பொருள்களை ஒரு நிமிடம் கவனமாகப் பாருங்கள். இவற்றை நினைவில் நிறுத்திக் கொள்ளுங்கள். பிறகு இந்தப் பக்கத்தை மூடிவிட்டு ஒரு காகிதத்தில் இந்தப் பக்கத்தில் நீங்கள் பார்த்து நினைவில் பதித்துக் கொண்ட பொருள்களின் பெயர்களை எழு துங்கள். பிறகு பத்திரிகையில் இந்தப் பக்கத்தைப் பிரித்து நீங்கள் எழுதியதோடு சரிபாருங்கள். எத்தனை பொருள்களை எழுத மறந்தீர் கள்? இல்லாத எவற்றை எழுதினீர்கள்? என்பதிலிருந்து உங்கள் ஞாபக சக்திக்கு நீங்களே மதிப்பெண்கள் போட்டுக் கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாமதமாகும் சமாதான முயற்சி; பட்டினிச் சாவில் சிரிய மக்கள்

சிரிய ஜனாதிபதி பார் அல் அஸாத்துக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் கிளர்ச்சிக் குழுக்களில், எந்தக் குழுவை ஜெனிவாப் பேச்சுகளில் கலந்து கொள்ள அழைப்பது என்பதில் இழுபறி நீடித்து வருவதால் பேச்சுகள் பின்போடப்பட்டன. சமாதானப் பேச்சுகளை ஆரம்பிக்கும் எதிர்பார்ப்பு இருந்த போதிலும் அது கைகூடவில்லை.

கடந்த ஐந்து வருடகால சிரிய உள்நாட்டுப் போரில் 2 இலட்சத்து 60 ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். மில்லியன் கணக்கானோர் தமது வீடுவாசல்களை விட்டு வெளியேறியுள்ளனர். கிளர்ச்சிப் படைகளின் முற்றுகைக்கு உட்பட்ட பிரதேசங்கள், தொடர்புகள் துண்டிக்கப்பட்ட பிரதேசங்களில் சிரியாவின் அஸாத் அரசு தனது கட்டுப்பாடுகளை இழந்ததால், கடந்த வருடம் ஐ.நா. இணங்கியிருந்த நிவாரண உதவிகளில் 75 சதவீதமானவை குறித்து அஸாத் அரசால் தீர்மானிக்க முடியவில்லை. 75 சதவீத உதவிகளைச் சிரியா இழக்க நேரிட்டது. இதனால் பல்லாயிரக்கணக்கானோர் பட்டினி அபாயத்துக்குள் தள்ளப்பட்டுள்ளனர். ஆகவே, மக்கள் அகதிகளாக உள்நாட்டுக்குள் இடம் பெயர்வதையும், வெளிநாடுகளுக்குச் செல்வதை நிறுத்துவதற்கும், பட்டினிச் சாவில் இருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்கும் சிரியப் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காண்பதற்குச் சமாதானப் பேச்சுகள் மிகவும் அவசியமானவை.

ஜெனிவா சமாதானப் பேச்சுக்களில் சிரியாவின் அரசு சார்பாக ஐ.நாவுக்கான சிரியப் பிரதிநிதி கலந்து கொள்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், எதிரணியில் உள்ள கிளர்ச்சிக்குழுக்கள் சார்பாக யார் கலந்துகொள்வது என்பது குறித்தும், பிராந்திய நாடுகளில் எந்தெந்த நாடுகள் கலந்துகொள்வது என்பதிலும் இழுபறி நீடிக்கிறது.

சிரியாவில் அஸாத்துக்கு எதிரான ஆயுதக் குழுக்களையும், அரசியல் அமைப்புக்களையும் ஒன்றிணைப்பதற்காக கடந்த மாதம் சவுதி அரேபியாவின் ஆதரவுடன் அமைக்கப்பட்ட உயர் குழு இரண்டாவது தடவையாக றியாத்தில் கூடியபோதிலும், ஜெனிவாப் பேச்சில் கலந்து கொள்ளவருமாறு ஐ.நா. விடுத்துள்ள அழைப்பை ஏற்பதா அல்லது இல்லையா என்பது குறித்து முடிவு எடுக்கவில்லை. பேச்சுக்களில் கலந்துகொள்ளும் எதிரணியின் ஏகப்பிரதிநிதியாகத் தானே இருக்கவேண்டும் என்று இந்தக் குழு ஐ.நாவை வலியுறுத்தி வருகிறது. ஏனைய கிளர்ச்சிக்குழுக்களுக்கு ஐ.நா. அழைப்பு விடுத்துள்ளதை இந்தக் குழு வன்மையாக எதிர்க்கிறது. எதிரணி, ஜெனிவா சென்று பேச்சுக்களில் கலந்துகொள்ள வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்துவதால், சாதகமான முடிவு எட்டப்படும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. ஜெனிவாப் பேச்சுக்கள் மூலம் சிரியாவில் இடைக்கால அரசு ஏற்படவும் அஸாத் பதவியில் இருந்து இறங்கவும் வாய்ப்பு ஏற்படும் என்பது அமெரிக்காவின் நம்பிக்கை. ஆனால், அஸாத் பதவி விலகுவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் அரிதாகவே உள்ளன. அஸாத் இல்லாத சிரியாவை அமெரிக்காவும், அஸாத் உள்ள சிரியாவை ரஷ்யாவும் எதிர்பார்ப்பதால் ஜெனிவாப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டாலும், அது வெற்றி அடைவது கேள்விக் குறியாகவே உள்ளது.

கடந்த வருட முற்பகுதியில் இருந்த கள நிலைமை இன்று சிரியாவில் இல்லை. துருக்கியினதும், சவுதியினதும் ஆதரவுடன் அஸாத்துக்கு எதிரான கிளர்ச்சிப்படைகள் சிரிய அரச படைகளைப் பல நகரங்களில் பின்வாங்கச் செய்திருந்தன. ஆனால், போரில் ரஷ்ய இராணுவத் தலையீடு ஏற்பட்ட பின்பு, கடந்த செப்ரெம்பரில் இருந்து சிரியாவின் கள நிலைமை மாறிவருகிறது. அஸாத் ஆதரவு அரச படைகள் பலமடைந்துவருகின்றன. இந்தப் போரில் எவரும் வெற்றிபெற முடியாது என்பது தெளிவாகிவிட்டது. சிரியா நான்காகத் துண்டாடப்படக்கூடிய ஆபத்து தற்பொழுது உருவாகி வருகிறது. நாட்டின் சனத்தொகையில் மூன்றில் இரண்டு பகுதியினர், பிரதான நகரங்கள், கைத்தொழில், விவசாய வருமானப் பகுதிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய சிரியாவின் ஐந்தில் ஒரு பகுதி அஸாத்தின் கட்டுப்பாட்டில் தற்போது இருந்தாலும், ரஷ்யாவின் ஆதரவு ஜனாதிபதி அஸாத்துக்கு உள்ளவரைதான் இது நிரந்தரம்.




ஆகவே, ஐ.நாவின் ஆதரவுடன் கடந்த வருடம் வியன்னாவில் நடைபெற்ற பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தரப்புக்களின் உயர் இராஜதந்திரிகள் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி, சிரியப் பிரச்சினைக்குத் தீர்வாக, முதலில் இடைக்கால அரசு ஒன்று அமைக்கப்பட்டு, புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டு, 18 மாத காலத்துக்குள் பொதுத் தேர்தல் நடத்தப்படவேண்டும். சிரிய மக்கள் தமது தலைவரை ஜனநாயக முறைப்படி தாமே தெரிவுசெய்வதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும்.



# வார்த்தைகளால் வாழ வைப்போம்

மிஷாந்தி செல்வராஜா

ஆம். உண்மைதான். வார்த்தைகளால் வாழ வைக்க முடியும். பொருள் ஈட்டல், வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்தல் போன்றவை, மனித வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான காரணிகளாகும். ஆனால் நாம் பேசும் வார்த்தைகளின் முக்கியத்துவம் எவ்வளவு பெறுமதி வாய்ந்தது என்பதை நாம் அறிந்திருப்பதில்லை. வார்த்தைகள்தான், ஒவ்வொரு மனிதர்களையும் வாழ வைப்பதற்கு உதவுகின்றன.

மனித வாழ்வில், அதாவது நிலையற்ற இந்த மானிட வாழ்வில், நாம் உயிரோடு இருக்கும் வரை எமது உடலையும், உயிரையும் பாதுகாக்கவும், அழகுபடுத்தவும் இரவு பகல் பாராது ஓடியோடி உழைக்கின்றோம், எம்மை நாமே கவனிக்காது பல நோய் நிலைகளுக்கு உள்ளாகுகின்றோம். அதாவது, அகத்திலே உள்வாங்கும் விடயங்களில் மனதுக்குப் பொருத்தமில்லாத பல சம்பவங்களை, பிரச்சினைகளை உள்வாங்கிக் கொண்டு உளநோயாளிகளாகவும் மாறிவிடுகின்றோம். இதற்கெல்லாம் காரணம்தான் என்ன? சற்றுச் சிந்தித்துப் பார்ப்போம்?

பொதுவாக நோக்கின், அன்பான வார்த்தைகள் மூலமே நாம் சந்தோசமாக வாழ முடிகின்றது என்பதை உணர்ந்து கொள்கின்றோம். நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தைகளும் பெறுமதியானவை. ஒருவரது சிந்தனையின் தெளிவு, அறிவுத்திறன் என்பவற்றின் மூலமே அவரது நடத்தை, செயற்பாடுகளை இனம்காண முடிகின்றது. எவனொருவன் அர்த்தமில்லாது அதிகமாகக் கதைக்கிறானோ, அவனை ஒரு பெறுமதியற்ற நபராகக் கருதி அவனை 'அலட்டல்' பேர்வழி எனக் கூறி, எந்தவித வேலைக்கும் பொருத்தமற்றவன் என ஒதுக்கி வைக்கின்றோம். ஆனால் அவன் பேசும் வார்த்தைகளில் இருந்து அவனது மனநிலையைப் புரிந்து கொள்ளக்கூடிய பக்குவமில்லாத மனிதராக நாம் இருக்கின்றோம். ஏனெனில் மனிதர்களாகப் பிறந்த ஒரு சில மனிதர்கள் தாம் பேசும் ஒவ்வொரு வார்த்தைகளும் சரியானதே என நினைத்தே தம் வார்த்தைகளைப் பிறர் மீது திணிக்கின்றார்கள். ஆனால் சில மனிதர்கள் தாம் பேசுவதைக் குறைத்து, பிறரது பேச்சின் மூலமே பல விடயங்களைக் கற்றுக் கொள்கின்றார்கள். புத்தக அறிவின் மூலம் கற்ற அறிவை விட, சில மனிதர்கள் அனுபவ வாயிலாக அறிவைப் பெற்றுக் கொள்கின்றார்கள். அதாவது நிகழ்வுகள், கூட்டங்களில் இடம்பெறும் சொற்பொழிவுகள், இலக்கிய விழாக்கள், சமய விழாக்கள் போன்றவற்றில் இடம்பெறும் பிரசங்க நிகழ்வுகளின் மூலம் நாம் அறிவைப் பெறுவது மட்டுமல்லாது, தெளிவான மன நிலை உள்ளவர்களாகவும் வாழக் கற்றுக் கொள்கின்றோம்.

இதற்கெல்லாம் காரணம் வார்த்தைகள்தான். நாம் பேசும் வார்த்தைகளால் ஒருவனை வாழ வைக்கவும் முடியும், அழிக்கவும் முடியும், நோயாளியாக்கவும் முடியும். ஆனால் நாம் அதைப் பின்பற்றுவதில்லை. ஏன்? நாம் எப்போதாவது இது குறித்துச் சிந்தித்துப் பார்த்திருக்கிறோமா? மனிதர்களாகப் பிறந்த நாம் அனைவரும், காலையில் இருந்து இரவு வரை எத்தனையோ மணித்தியாலங்களைச் செலவழிக்கின்றோம். அந்த நேரத்தில் எவ்வளவோ கதைப்போம், பேசுவோம். ஆனால் எத்தனை பேரை எமது வார்த்தைகளால் சந்தோசமாக வைத்திருந்தோம், எத்தனை பேரை எமது வார்த்தைப் பிரயோகங்களால் காயப்படுத்தினோம் எனப் படுக்கையில் படுத்திருக்கும்போது சிந்தித்துப் பார்த்திருக்கிறோமா? ஆயிரம் மனிதர்களைச் சந்திக்கின்றோம்; உரையாடுகின்றோம். ஆனால் எத்தனை பேருடன் அன்பாகக் கதைத்து மனநிறைவடைந்தோம் என்றால் அது விரல் விட்டு எண்ணக்கூடிய வரையிலே தான் இருக்கும். ஏனெனில் எம்முடைய வார்த்தைகள் சிலரை ஆறுதல்படுத்துவதாகவும், சிலரை உதாசீனப் படுத்துவதாகவும் அமைந்து விடுகின்றன. குழந்தைகள்முதல் முதியோர்வரை அன்புடன் ஆறுதலாக பேசிப் பழகிப் பாருங்கள். அலுவலகங்களிலும் கனிவாகப் பேசிப் பாருங்கள். உலகமே உங்களிடம்தான். நாம் பேசும் மொழி எதுவாக இருந்தாலும், அந்த மொழியில் ஆணவம், அகங்காரம் இல்லாமல் வார்த்தைகளைப் பிரயோகிக்க வேண்டும். வார்த்தைகளின் வேகம் ஈட்டிபோல் முள்ளாகக் குத்துமாயின், அதேவேக முள்ள வார்த்தைகளின் அம்புகள் எம்மையும் தாக்கும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எனவே மனிதர்களான நாம் அனைவரும் அன்புடன் பேசி அன்பாலாகிய உலகத்தை உருவாக்கி, அன்பான வார்த்தைகளைப் பிரயோகித்து வாழ்வோம், பிறரையும் வாழ வைப்போமாக...

# இறைவனிடம் சரணடைவோம்

“ஆண்டவரே இரக்கமாயிரும்;
ஏனெனில் நாங்கள் பாவம் செய்தோம்”

வருடா வருடம் வந்துபோகும் ஒரு காலமாக இந்தத் தவக்காலத்தை நாம் அனைவரும் கருதி விட முடியாது. இந்தக் காலத்தில் எம்மை இறைவன் பக்கம் திருப்ப திருச்சபை முனைகிறது.




இது ஏதோ பழைய ஏற்பாட்டில் நடந்தது, அது எமக்கு என்ன தரப் போகின்றது? என்று நாம் அலட்சியப்படுத்தி விட முடியாது. ஏன் இந்தச் சம்பவங்கள் கூறப்பட்டிருக்கின்றன என்று ஆராய்கின்றபோது, வேதத்தில் இவ்வாறு குறிப்பிடப்பிட்டிருக்கின்றது. 1கொரி 10:11ஆம் வசனம் “அவர்களுக்கு நிகழ்ந்த இவையனைத்தும் மற்றவர்களுக்கு எச்சரிக்கையாய் அமைகின்றன. இறுதிக்காலத்தில் வாழும் எமக்கு அறிவுரையாய் அமைகின்றன” ஆக, இந்தச் சம்பவம் எங்கள் வாழ்க்கைக்கு ஒருபாடமாகவும் அறிவுரையாகவும் இருக்க வேண்டும்.

“இப்பொழுதாவது உணவு தவிர்ப்பில் இருந்து, அழுதுபுலம்பிக்கொண்டு முழு இதயத்தோடு என்னுடன் திரும்பி வாருங்கள்”
யோவான் 2:12

நாம் செய்யப் போகின்ற, தவ முயற்சிகள், சிலுவைப் பாதைகள், பாடுகளின் தியாணம் ஆகியவை ஆண்டவரை நோக்கி வரப் பண்ணுகின்றவையாகவும் அமைய, எம்மை ஒப்படைப்போம். உடையை அல்லது உள்ளத்தை மாற்றி இறைவனிடம் சரணடைவோம்.

குருமடமாணவன் பே.பேடின் வெனோ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# ரஜினி நடிக்கும் படம் 2018 இல் வெளிவரும்




"கபாலி" படப்பிடிப்பை அண்மையில் முடித்துக் கொடுத்துவிட்டு மலேசியாவிலிருந்து சென்னை திரும்பினார் ரஜினி. அதே கையோடு சங்கரின் 2.0 படப்பிடிப்பில் முழுமையாகப் பங்கேற்க முடிவு செய்துள்ளார். ஏற்கனவே ரஜினி நடித்த சில காட்சிகளைச் சங்கர் படமாக்கியுள்ளார். அக்ஷய் குமாருடன் நடிக்க வேண்டிய முக்கிய காட்சிகள் படமாக்கப்பட, வேண்டியிருப்பதால் இருவருக்குமான காட்சிகள் உடனடியாக படமாக்கப்படவுள்ளன. இந்த ஆண்டு "கபாலி" அடுத்த ஆண்டு "2.0" என ரசிகர்களுக்கு விருந்து வழங்கத் திட்டமிட்டிருக்கும் ரஜினி, 2018 ஆம் ஆண்டுக்கான படத்துக்கும் இப்போதே தலை அசைத்திருக்கிறாராம்.

"சந்திரமுகி" ஹிட் படத்தை இயக்கிய பி.வாசு, கன்னடத்தில் இயக்கியுள்ள படம் "சிவலிங்கா". கன்னடப் பட ஹீரோ சிவராஜ்குமார், வேதிகா இதில் நடித்துள்ளனர். இந்தப் படம் திரைக்குவந்து வெற்றி பெற்றுள்ளது. "சந்திரமுகி" பாணியில் திகில், சஸ்பென்ஸ் உள்ளடங்கிய இந்தப் படத்தின் தமிழ் ரீமேக்கில் ரஜினி நடிக்கவுள்ளார். இந்தப் படம் 2017 ஆம் ஆண்டு இறுதியில் படப்பிடிப்பு தொடங்கப்பட்டு 2018 ஆம் ஆண்டில் ரிலீஸ் செய்யத் திட்ட மிடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

மகனைக் கஷ்டங்களே
தெரியாமல் வளர்ப்பவர்
நல்ல அப்பா...
மகனைக் கஷ்டங்களை
சந்திக்கவிட்டு,
எதிர்கொள்ளத்
துணை நிற்பவர் சிறந்த
அப்பா!!!








கௌண்டமணி: நான் உன்கிட்ட என்னவாங்கிட்டுவரச்சொன்னேன்...
செந்தில்: tube light வாங்கிட்டு வரச் சொன்னிங்க...
கௌண்டமணி: எத்தனை...?
செந்தில்: 2
கௌண்டமணி: ஒண்ணு இங்க இருக்கு...
இன்னொன்னு எங்கடா...
செந்தில்: இன்னொன்னு தான் sms படிக்குது

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 4 | 7 | | 1 | |
| 3 | | | | | | 6 | | |
| | 4 | | | | 9 | | | |
| 7 | | 9 | | | | | | |
| 5 | | | 3 | | 6 | | | 7 |
| | | | | | | 1 | | 8 |
| | | | 1 | | | | 5 | |
| | | 5 | | | | | | 3 |
| | 8 | | 2 | 6 | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 9 | 4 | 3 | 7 | 5 | 1 | 8 | 2 |
| 2 | 7 | 3 | 9 | 1 | 8 | 5 | 6 | 4 |
| 5 | 1 | 8 | 6 | 2 | 4 | 9 | 7 | 3 |
| 4 | 6 | 5 | 8 | 3 | 1 | 2 | 9 | 7 |
| 8 | 2 | 9 | 5 | 4 | 7 | 3 | 1 | 6 |
| 7 | 3 | 1 | 2 | 6 | 9 | 4 | 5 | 8 |
| 3 | 5 | 2 | 7 | 9 | 6 | 8 | 4 | 1 |
| 1 | 8 | 7 | 4 | 5 | 2 | 6 | 3 | 9 |
| 9 | 4 | 6 | 1 | 8 | 3 | 7 | 2 | 5 |

சுடோக்குஒருஎண்விளையாட்டு.தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப் பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

படித்ததில் பிடித்தது

WhatsApp

ஒரு ஊரின் பெரிய கோயிலின் கோபுரத்தில் நிறையப் புறாக்கள் வாழ்ந்து வந்தன. திடீரென்று கோயிலில் திருப்பணி நடந்தது. அதனால் அங்கு வாழ்ந்த புறாக்கள் வேறு இடம் தேடிப் பறந்தன. வழியில் ஒரு தேவாலயத்தைக் கண்டன. அங்கு ஏற்கனவே சில புறாக்கள் வாழ்ந்து வந்தன. அவைகளோடு இந்தப் புறாக்களும் அங்கு குடியேறின. சில நாள்கள் கழித்து கிறிஸ்மஸ் வந்தது. தேவாலயம் புதுப்பிக்கத் தயாரானது.
இப்போது இங்கு இருந்து சென்ற பறவைகளும், அங்கு இருந்த பறவைகளும் வேறு இடம் தேடிப் பறந்தன. வழியில் ஒரு மசூதியைக் கண்டன. அங்கும் ஏற்கனவே சில புறாக்கள் வசித்து வந்தன. அவைகளோடு இந்த புறாக்களும் குடியேறின. சில நாள்கள்கழித்து ரம்ழான் வந்தது. வழக்கம் போல் வேறு புதிய இடம் தேடிப் பறந்தன. இப்போது மூன்று இடங்களிலும் இருந்த புறாக்களும் கோயிலில் குடியேறின.
கீழே மனிதர்கள் சண்டை போட்டு ஒருவரை ஒருவர் வெட்டிச் சாய்த்துக் கொண்டு இருந்தனர். ஒரு குஞ்சுப்புறா தாய்ப் புறாவிடம் கேட்டது. "ஏன் இவர்கள் சண்டை போடுகிறார்கள்?" என்று. அதற்கு அந்தத் தாய்ப் புறா, "நாம் இங்கு இருந்த போதும் புறாக்கள் தான், தேவாலயத்துக்குப் போன போதும் புறாக்கள் தான், மசூதிக்குப் போன போதும் புறாக்கள் தான்", "ஆனால் மனிதன் கோயிலுக்குப் போனால் இந்து தேவாலயத்துக்குப் போனால் கிறிஸ்தவன்" மசூதிக்குப் போனால் "முஸ் லிம்" என்றது.



குழம்பிய, குஞ்சுப் புறா, "அது எப்படி? நாம் எங்கு போனாலும் புறாக்கள் தானே? அது போலத் தானே மனிதர்களும்" என்றது.
அதற்குத் தாய்ப் புறா, "இது புரிந்ததனால்தான் நாம் மேலே இருக்கி றோம், இவர்கள் கீழே இருக்கிறார்கள்" என்றது..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** சூழ்நிலை உணர்ந்து செயற்படுவீர்கள். தொழிலில், இலாபம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். தாயின் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**இடபம்:** சுயபெருமை பேச வேண்டாம். உழைப்பால், தொழிலில் இலாபத்தைத் தக்கவைத்துக் கொள்வீர்கள். கௌரவத்துக்காகப் பணம் செலவழிப்பதைத் தவிர்க்கவும். உணவு விடயத்தில் கவனம் தேவை.

**மிதுனம்:** புதியவர்கள் உங்களிடம் நட்புப் பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில், அபரிமிதமான வளர்ச்சி உருவாகும். நிலுவைப்பணம் கிடைக்கும். பணியாளர்களுக்குச் சலுகை கிடைக்கும். சிந்தனைத்திறன் பெருகும் நாள்.

**கடகம்:** பதற்றமான மனநிலை ஏற்படலாம். தொழிலில், உற்பத்தி, விற்பனை, சராசரி அளவில் இருக்கும். பெண்கள் செலவில் சிக்கனம் பின்பற்றுவர். புத்திரரின் நற்செயல் பெருமை தேடித்தரும்.

**சிங்கம்:** மனதில் புத்துணர்ச்சி உண்டாகும். தொழில் வளர்ச்சிக்கான, புதிய மாற்றங்களைச் செய்வீர்கள். பணம் கொடுக்கல் வாங்கல் சீராகும். அரசியல்வாதிகளுக்கு பதவிபெற அனுகூலம் ஏற்படும்.

**கன்னி:** எதிரியால் உருவான தொந்தரவு மறையும். தொழிலில், இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். ஓய்வு நேரத்தில் பயனுள்ள பொழுது போக்கில் ஈடுபடுவீர்கள்.

**துலாம்:** முக்கியமான பணி நிறைவேறத் தாமதமாகலாம். தொழில், வியாபாரத்தில், கூடுதல் உழைப்பு அவசியம். அளவான பணவரவு கிடைக்கும். ஒவ்வாத உணவு வகைகளைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** நண்பரின் ஆலோசனை, நல்வழி காட்டும். தொழில், வியாபாரத்தில், அளவான மூலதனம் போதும். பண விடயத்தில் கவனம் தேவை. பிள்ளைகளால் நன்மை உண்டாகும்.

**தனுசு:** லட்சிய மனதுடன் பணிபுரிவீர்கள். தொழிலில், திட்டமிட்ட இலக்கு, குறித்த காலத்தில் பூர்த்தியாகும். கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் நன்மதிப்பைப் பெறுவர்.

**மகரம்:** நண்பருக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், இலாபம் உயரும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.

**கும்பம்:** பேசுவதில் நிதானம் வேண்டும். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். உறவினர் வருகையால், வீட்டுச் செலவு அதிகரிக்கும். விஷப் பிராணிகளிடம் விலகி இருப்பது நல்லது.

**மீனம்:** மனதில் அதிக எதிர்பார்ப்பு உருவாகும். தொழில், வியாபாரம், மந்தகதியில் இயங்கும். இலாபம் சுமார். பெண்கள், செலவில் சிக்கனத்தைப் பின்பற்றுவர். மற்றவர்களது பொருளைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்கக் கூடாது.

♡அன்பின் தோழன்♡ @Sam_official_
மனிதர்களைப் பயன்படுத்துகிறோம்! பொருள்களை நேசிக்கிறோம்!!
எப்பொழுது தான் மனிதனை நேசித்து, பொருள்களைப் பயன்படுத்தப் போகின்றோம்?

சிந்தனைவாதி @PARITHITAMIL
இங்கே வாழ்வது கஷ்டம் இல்லை
அடுத்தவனைப் போல் வாழ
நினைத்தால் தான் கஷ்டம்.

## வித்தியாசமான கோப்பை






தட்டாகவும் கோப்பையாகவும் பயன்படும் சமையல் அறைப் பாத்திரம் அறிமுகமாகியுள்ளது. பிளாஸ்டிக், இறப்பரில் தயாரிக்கப்பட்ட இந்தப் பாத்திரம், மரக்கறி, பருப்பு வகைகளைக் கழுவுவதற்கு உகந்ததாகும். இதன் விலை 300 ரூபா முதல் 400 ரூபா ஆகும்.

## நாளை

மாசி-09
ஞாயிற்றுக்கிழமை 21.02.2016
திதி: சதுர்த்தசி மு.இ.11.34 வரை
நட்சத்திரம்: ஆயிலியம்
பி.இ.06.15 வரை
ராகுகாலம்: 05.01-06.31 வரை
சுபநேரம்: 09.31-11.01 வரை



## துணிகளில் கறை

- துணிகளில் பட்ட எண்ணெய்க் கறையை நீக்க, முகத்துக்குப் பூசும் பவுடரை கறை மேல் போடுங்கள். சிறிது நேரம் விட்டு வழமை போல் துணியைக் கழுவுங்கள். கறை காணாமற் போகும்.
- போகாத கறையைப் போக்க எலுமிச்சம் பழச்சாறைக் கறையின் மீது விட்டு நன்கு கசக்கினால் போயே போய் விடும்.
- சாதாரண கறையானாலும் பிரஷ் போட்டு துணியை நாசம் செய்யாமல், கைகளால் கசக்குவது நல்ல பயனைத் தரும்.



## நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | [illegible] | பருத்தித்துறை | சாவகச்சேரி | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 700 | 600 | 650 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 300 | – |
| கணவாய் | 550 | 500 | 500 | 500 | 600 | 600 | – |
| பாரை | 450 | 500 | 500 | 600 | 600 | 500 | 450 |
| சுறா | 400 | 600 | 600 | 800 | 700 | 600 | – |
| சீலா | 250 | 400 | 400 | 450 | 450 | 400 | 400 |
| விளை | 500 | 500 | 400 | 500 | 500 | 500 | 450 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 400 | 400 | – |
| கும்பிளா | 400 | 350 | 300 | 400 | 350 | 400 | 350 |
| கிழாக்கன் | 500 | 700 | – | – | 400 | – | – |
| ஓரா | 300 | 400 | – | – | 300 | 400 | 350 |
| திரளி | 200 | 250 | 200 | 200 | 200 | – | 350 |
| நகரை | 150 | 300 | – | 300 | 300 | 100 | 300 |
| சூடை | 100 | 150 | 100 | 200 | 200 | 100 | 100 |
| ஒட்டி | 250 | 200 | 150 | 250 | 250 | 250 | 250 |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 300 | 200 | 150 |
| மதனம் | 100 | 200 | 180 | 300 | 250 | 300 | 300 |
| கொய் | 80 | 150 | 60 | 80 | 120 | 100 | – |
| பாலை | 300 | 250 | 250 | 400 | 400 | 300 | – |
| வாழை | 100 | 200 | 200 | 300 | 300 | 200 | 250 |


## நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | [illegible] | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | [illegible] | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 60 | 40 | 60 | 30 | 40 | 30 | 30 |
| கத்தரி | 70 | 80 | 80 | 100 | 50 | 80 | 70 | 30 |
| கரட் | 200 | 240 | 240 | 180 | 100 | 240 | 150 | 220 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 | 40 | 40 | 35 | 40 |
| பயிற்றை | 120 | 100 | 100 | 100 | 80 | 100 | 70 | 80 |
| பாகல் | 80 | 80 | 80 | 100 | 80 | 120 | 80 | 80 |
| கருணைக்கிழங்கு | 70 | 80 | 70 | 60 | 50 | 60 | 50 | 50 |
| பெ.வெங்காயம் | 60 | 60 | 70 | 60 | 50 | 70 | 50 | 60 |
| சி.வெங்காயம் | 60 | 100 | 80 | 80 | 70 | 90 | 80 | 70 |
| பூசணி | 60 | 60 | 100 | 80 | 60 | 120 | 70 | 80 |
| தக்காளி | 60 | 50 | 60 | 60 | 50 | 80 | 50 | 50 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 60 | 50 | 40 | 45 | 40 |
| கீரை | 20 | 30 | 25 | 10 | 20 | 30 | 15 | 30 |
| பொன்னாங்கானி | 30 | 40 | 30 | 40 | 20 | 30 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 200 | 180 | 200 | 150 | 160 | 200 | 160 | 200 |
| புடோல் | 60 | 80 | 60 | 60 | 60 | 60 | 30 | 60 |
| கோவா | 80 | 80 | 60 | 100 | 60 | 80 | 60 | 60 |
| வெண்டி | 100 | 100 | 80 | 80 | 120 | 80 | 70 | 120 |
| போஞ்சி | 80 | 120 | 120 | 80 | 60 | 90 | 60 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 100 | 100 | 120 | 80 | 100 |
| தேங்காய் | 40 | 40 | 50 | 40–50 | 40 | 40 | 30–40 | 30 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 70 | 70 | 50 | 60 | 50 | 100 |
| தேசிக்காய் | 100 | 60 | 80 | 60 | 60 | 50 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 20 | 10 | 08 |
| கறிமிளகாய் | 150 | 200 | 240 | 180 | 160 | 200 | 180 | 200 |
| இராசவள்ளி | 150 | 140 | 140 | 100 | 140 | 150 | 90 | 75 |
| முருங்கைக்காய் | 800 | 600 | 600 | 250 | 400 | 500 | 450 | 500 |
| பனங்கிழங்கு | 04 | 02.50 | 05 | 02 | 07 | – | 03 | 02 |

## வாழைப்பழப் பொங்கல்

**தேவையானவை:**

பாசிப்பருப்பு - கால் கப்
கொண்டல் கடலை - 1 கரண்டி
அரிசி - 1 கப்
பால் - 1 கப்
வெல்லம் - 2 கப்
நெய் - கால் கப்
ஏலக்காய் தூள் - கால் கரண்டி
வாழைப்பழம் - 3
உலர்ந்த திராட்சை, முந்திரி - சிறிதளவு



**செய்முறை:**

ஒரு தாச்சியில் பாசிப் பருப்பு மற்றும் கொண்டல் கடலையை எண்ணெய் சேர்க்காமல் வறுத்துத் தனியே வைத்துக் கொள்ளவும்.

குக்கரில் அரிசி, வறுத்த பருப்பு வகைகள், பால் மற்றும் தேவையான அளவு தண்ணீர் சேர்த்து நன்றாக வேகவைத்துக் கொள்ளவும்.

வெல்லத்துடன் தேவையான அளவு தண்ணீர் சேர்த்து, பாகு எடுத்துக்கொள்ளவும்.

வேகவைத்த அரிசி, பருப்புக் கலவையை வெல்லப்பாகு, ஏலக்காய்த் தூள் மற்றும் வாழைப்பழத் துண்டுகளோடு சேர்த்துக் கலந்துகொள்ளவும்.

ஒரு சட்டியில் நெய் ஊற்றி, உலர்ந்த திராட்சை, முந்திரி ஆகியவற்றை நிறம் மாறும் வரை வறுத்து வாழைப்பழப் பொங்கலுடன் சேருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுட்பம்

## 103 மொழிகளை மொழிமாற்றம் செய்யும் கூகிள் ட்ரான்ஸ்சிலேற்றர்

மொழிமாற்றம் செய்யப் பயன்படும் கூகிள் ட்ரான்ஸ்சிலேற் இல் புதிதாக 13 மொழிகள் இணைக்கப்பட்டுள்ளன என்று கூகுள் நிறுவனம் அறிவித்துள்ளது. தற்போது 13 மொழிகள் சேர்க்கப்பட்டுள்ளதால், மொத்தம் 103 மொழிகளை மொழிமாற்றம் செய்வதற்கு



கூகிள் ட்ரான்ஸ்சிலேற்றர் பயன்படுகிறது.

இது குறித்து கூகுள் நிறுவனத்தின் சிரேஷ்ட திட்ட முகாமையாளர் கூறியதாவது, கூகுள் இயந்திரத்தின் மூலம் மக்கள் புதிய மொழிகளைக் கற்றுக்கொள்ளலாம். அதிகமான வரிகளை மொழிமாற்றம் செய்வதற்கு சில பிரச்சனைகள் இருந்து வந்தது. ஆனால் தற்போது அதனைச் சரிசெய்வதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதுவரை 3 மில்லியன் மக்களிடம் இருந்து 200 மில்லியன் வார்த்தைகளை மொழிமாற்றம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அவுட்லுக்கின் புதிய பதிப்பில் அதிரடி வசதி




மைக்ரோசொப்ட் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுவரும் முன்னணி மின்னஞ்சல் சேவையான அவுட்லுக்குக்கான மொபைல் அப்பிளிக்கேஷனின் புதிய பதிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

ஐஓஎஸ், அண்ட்ரொய்ட், மற்றும் விண்டோஸ் 10 ஆகிய இயங்குதளங்களைக் கொண்ட மொபைல் சாதனங்களுக்காக அறிமுகம் செய்யப்பட்டுள்ள இப் புதிய பதிப்பில், அனிமேஷன்களைக் கொண்ட ஜிவ் கோப்புக்களையும் இணைத்துக் கொள்ளக்கூடியதாக இருப்பதுடன், இலகுவாகக் கையாளக்கூடிய வகையிலும் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஒபிஸ் 365 அப்பிளிக்கேஷனைப் பயன்படுத்துபவர்களுக்கு பெரிதும் பயன்தரக்கூடிய புதிய சில வசதிகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

## ஹுவாவி அறிமுகம் செய்யும் புத்தம் புதிய மீடியாபாட் ரி 2

மொபைல் சாதன உற்பத்தியில் விரைவாக வளர்ச்சியடைந்துவரும் நிறுவனங்களுள் ஒன்றான ஹுவாவியானது, மீடியாபாட் ரி 2எனும் புத்தம் புதிய மொபைல் சாதனத்தை விரைவில் அறிமுகம் செய்யவுள்ளது.

இந்தச் சாதனமானது 10.1 அங்குல அளவுடையதும், 1902 X 1080 பிக்சல் ரெசுலேசன் உடையதுமான தொடுதிரையைக் கொண்டுள்ளதுடன் குவால்கொம் சினப்ரகன் 615 புரொசஸர், பிரதான நினைவகமாக 2ஜி.பி ரம், 16ஜிபி சேமிப்பு நினைவகம் என்பவற்றையும் கொண்டுள்ளது.

இவை தவிர, அண்ட்ரொய்ட் 5.1 லொலிப்பொப் இயங்குதளத்தில் செயல்படக்கூடியதாக வடிவமைக்கப்பட்டிருப்பதுடன், நீடித்து உழைக்கக்கூடிய 6660 mAh மின்கலம் என்பவற்றையும் இது உள்ளடக்கியுள்ளது.

எனினும் இதில் காணப்படும் கமெராக்களின் வினைத்திறன் மற்றும் விலை தொடர்பான தகவல்கள் இதுவரை வெளியிடப்படவில்லை.



# இரண்டாயிரம் பேருக்கு வழங்கப்பட்டுள்ள செலிங்கோ லைப் பிரணாம புலமைப் பரிசில்



ஆயுள் காப்புறுதித் தலைவர் 154 மேலதிக புலமைப் பரிசில்கள் வழங்கியதையடுத்து, கம்பனியின் நிதி ஒதுக்கீடு ரூபா 110 மில்லியனாக அதிகரித்துள்ளது

செலிங்கோ லைப்பின் பிரணாம புலமைப்பரிசில் திட்டம் இம்மாதம் இன்னொரு மைல்கல்லைத் தொட்டுள்ளது. அதன் 15வது சுற்று புலமைப் பரிசில் பரிசளிப்புடன் இதுவரை இந்தத் திட்டத்தினால் நன்மை அடைந்தவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

நாட்டின் சகல பாகங்களையும் சேர்ந்த சிரேஷ்ட கல்விமான்கள், அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், மாணவர்கள் என பல்வேறு தரப்பினர் கலந்து கொண்ட இந்தப் புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு, கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கோலாகலமாக இடம்பெற்றது. மேலும் 154 பேருக்கு ரூபா 10 மில்லியனனை விட அதிக பெறுமதியுள்ள தொகை புலமைப் பரிசிலாகப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

செலிங்கோ காப்புறுதிக் கொள்கைகளைக் கொண்டிருப்பவர்களின் பிள்ளைகள் கல்வி ரீதியாகவும் ஏனைய செயற்பாடுகளிலும் அடைந்துள்ள வெற்றியை அங்கீகரிக்கும் வகையில் இந்தப் புலமைப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன. ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில், ஜி.சி.ஈ சாதாரண தரம் மற்றும் உயர்தரம் ஆகிய பரீட்சைகளில் மாவட்ட ரீதியாக அடைந்து கொள்ளும் வெற்றி, விளையாட்டு, கலை, கலாசாரம், நாடகம் மற்றும் புத்தாக்க செயற்பாடுகளில் தேசிய மட்டத்திலான சாதனைகள் என்பவை கௌரவிக்கப்பட்டு, அவற்றுக்கான வெகுமதிகள் வழங்கப்படுகின்றன.

> “செலிங்கோ காப்புறுதி கொள்கைகளைக் கொண்டிருப்பவர்களின் பிள்ளைகள் கல்வி ரீதியாகவும் ஏனைய செயற்பாடுகளிலும் அடைந்துள்ள வெற்றியை அங்கீகரிக்கும் வகையில் இந்தப் புலமைப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன.”

இந்த வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய பேராதனைப் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் உபுல் திஸாநாயக்க, மிகவும் விவேகமான மாணவர்கள் தமது முழு ஆற்றலையும் வெளிக் கொண்டு வர புலமைப்பரிசில்கள் எவ்வாறு துணை புரிகின்றன என்பதை விளக்கினார்.

சமூக மேம்பாட்டுக்கு கல்வி மிகவும் முக்கியத்துவமானது என்பதை வலியுறுத்திய பேராசிரியர் திஸாநாயக்க, இவ்வாறான நிகழ்வுகளில் பங்கேற்கும் பெற்றோர்களின் அளவற்ற மகிழ்ச்சியையும் தன்னால் உணர முடிவதாகக் கூறினார். எல்லாப் பிள்ளைகளும் தம்மிடம் இருப்பதைவிட இன்னும் மேலதிகமாகப் பெற்று வாழ்க்கையில் உயர் நிலைக்கு வரவேண்டும் என்பதுதான் சகல பெற்றோரினதும் எதிர்ப்பார்ப்பாகும். பெற்றோரின் இந்த அபிலாஷைகள் நிறைவேற பிரணாம புலமைப்பரிசில் வழிவகுக்கின்றது என்று அவர் மேலும் கூறினார்.

செலிங்கோ லைப் பணிப்பாளரும், பிரதிப் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான துார ரணசிங்க பேசும் போது, இன்று வரை 110 மில்லியன் ரூபாவை இந்தத் திட்டத்துக்கு அர்ப்பணித்துள்ள செலிங்கோ லைப், அதை ஒரு செலவாகக் கருதவில்லை. இலங்கையின் எதிர்காலத்தின் மீது செய்யப்பட்டுள்ள ஒரு முதலீடாகவே அது கருதப்படுகின்றது- என்றார்.

ஏற்கனவே இருக்கின்ற ஆற்றல்களுக்கு அப்பால் தலைமைத்துவ தகைமைகள் மற்றும் பண்புகள் என்பனவற்றை வலியுறுத்திய அவர், 90 வீதமான தலைமைத்துவ தகைமைகளும், பண்புகளும் வெளியில் தெரியாமலேயே பலரிடம் மறைந்து காணப்படுகின்றன என்றார். உங்கள் ஆற்றல்களால் உங்களை உயர் நிலைக்கு கொண்டு வர முடியும். ஆனால் உங்களிடம் உள்ள நற்பண்புகள் தான் உங்களை அந்த இடத்தில் தக்க வைக்கும் என்று மேலும் கூறினார். (த)

## வணிகம்

# நறுமணம் கொண்ட தங்க நகையால் வாடிக்கையாளர்களை ஈர்க்கும் லக்ஸ்



யுனிலிவரின் தயாரிப்புக்களில் ஒன்றான லக்ஸ் புதிய பரிணாமம் ‘Lux Fragrant Gol-” அறிமுகவிழா கடந்த செவ்வாய்க்கிழமை சினமன்ட் கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் அற்புத வாசனையை வெறும் சவர்க்காரக் கட்டியில் மாத்திரம் மட்டுப்படுத்தாமல், லக்ஸ் பிரெஞ்ச் ரோஸின் அற்புத நறுமணம் நிறைந்த சிறப்பான ஒரு வடிவமைப்பாகக் காட்சிப்படுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில், காதலர் தினத்தன்று தெரிவு செய்யப்பட்ட சில நகரங்களில் வானிலிருந்து பிரெஞ்ச் ரோசாப் பூக்கள் தூவப்பட்டன. லக்ஸ் பிரெஞ்ச் ரோஸ் அற்புத நறுமணத்தைக் கொண்ட அழகாக வடிவமைக்கப்பட்ட பதக்கங்களை வெல்லும் வாய்ப்பையும் லக்ஸின் வாடிக்கையாளருக்குப் பெற்றுத் தந்தது. அதில், வெற்றி பெற்ற வெற்றியாளர்களுக்கே செவ்வாய்க்கிழமை பதக்கங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

எதிர்வரும் காலங்களில் லக்ஸின் வாடிக்கையாளர்களுக்கு லக்ஸ் சவர்க்காரத்தின் பிரத்தியேகக் குறியீட்டிலக்கத்தை, 072-0444000 என்ற எண்ணுக்கு குறுஞ்செய்தியாக அனுப்பிவைப்பதன் மூலம் எதிர்வருங்காலங்களில் மற்றைய வாடிக்கையாளர்களும் பதக்கங்களைப் பெற்றுக்கொள்ளலாம். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர்ப் பாதிப்பு

சபையின் நடமாடும் சேவை நேற்றுக் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

போரினால் சேதமடைந்த பொதுமக்களின் சொத்திழப்புக் கொடுப்பனவு, அரச ஊழியர்களின் சொத்திழப்புக் கொடுப்பனவு, வணக்கத்தலங்களின் கொடுப்பனவு, உயிரிழந்த மற்றும் காயமுற்றவர்களுக்கான கொடுப்பனவு தொடர்பாக ஏற்கனவே முழுமையாகப் பூரணப்படுத்தப்படாத விவரங்களைப் பூர்த்தி செய்யும் முகமாக பளை, கண்டாவளை மற்றும் கரைச்சி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 650 பயனாளிகளின் கோவைகளைப் பூரணப்படுத்தும் முகமாகவே குறித்த நடமாடும் சேவை நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளார்.

இதன்போது, புனர்வாழ்வு அதிகார சபையின் மேலதிகப் பணிப்பாளர் எஸ்.எம் பதுர்தீன் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

1983ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான போரினால் பாதிப்புக்களுக்கான மக்களில் புனர்வாழ்வு அதிகார சபையிடம் விண்ணப்பித்தவர்களுக்கு ஏற்கனவே நட்டஈட்டுக் கொடுப்பனவு வழங்கியவர்களைத் தவிர, ஏனையவர்களுக்கு வழங்குவதற்கு இன்னும் 3 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி தேவையாக உள்ளது. ஆனால் 550 மில்லியன் ரூபா நிதி மாத்திரமே கடந்த வருடம் அரசினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே பெருமளவு நிதியை வேறு நிதி மூலங்கள் மற்றும் வெளிநாட்டு நிதி உதவிகள் மூலம் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து எமக்கு 15 ஆயிரம் வரையான விண்ணப்பப் படிவங்கள் கிடைத்துள்ளன. அதில் 4 ஆயிரம் வரையான விண்ணப்பதாரிகளுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. ஏனையவர்களுக்கு தொடர்ச்சியாக ஒவ்வொரு வருடமும் படிப்படியாக ஒரு லட்சம் ரூபா வீதம் வழங்கப்படும்.

புனர்வாழ்வு அதிகார சபைக்குப் போர்ப் பாதிப்பின் கீழ், பொது மக்களுக்கான பாதிப்பு, அரச ஊழியர்களுக்கான பாதிப்பு, உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்கள், ஆலயங்களுக்கான பாதிப்பு, முன்னாள் போராளிகளுக்கான கடன் போன்றவற்றுக்கு இழப்பீட்டுக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகிறது - என்றார்.

நேற்றுக்காலை 8.30 மணியளவில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாவட்ட அரச அதிபர், மேலதிக அரச அதிபர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர், புனர்வாழ்வு நிறைவேற்றுப் பணிப்பாளர், மேலதிக பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர்கள், மாவட்டப் புனர்வாழ்வு உத்தியோகஸ்தர்கள், கிராம சேவகர்கள் மாவட்ட செயலக ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு மக்களின் விண்ணப்பங்களை பூரணப்படுத்தும் பணிகளை மேற்கொண்டனர்.

குறித்த நடமாடும் சேவை நேற்று முன்தினம் பூநகரி பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது இதில் 300 பேர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(த-வ-21-ரி3)

## 9 ஆவது

பாசறை இன்று முதல் எதிர்வரும் 26ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

முதல் முறையாக வடக்கு மாகாணத்தில் நடைபெறவுள்ள இந்தப் பாசறையில் நேபாளம், இந்தியா, மலேசியா, பங்களாதேஷ், மாலைதீவு உள்ளிட்ட பல நாடுகளில் இருந்தும் 150 இற்கும் மேற்பட்ட சாரணர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

நாளை மறுதினம் திங்கட்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் மாலை 4மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் உத்தியோகபூர்வ நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்படும். எனினும் நாளை காலை 8 மணிக்கு அனைத்துச் சாரணர்களும் யாழ் மாநகரசபை மைதானத்தில் ஒன்றுகூடி நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்படவுள்ளனர். தொடர்ந்து ஐந்து நாள்களுக்குச் சாரணர்களின் போட்டிகள் நடைபெறுவதுடன், மாலை நேரத்தில் இசை நிகழ்வு முதலான கலை நிகழ்ச்சிகளும், 22ஆம் திகதி இரவு வெளிநாடுகளில் இருந்து வருகை தந்த சாரணர்கள் நடத்தும் சர்வதேச இரவு நிகழ்வும் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

பயிற்சிப்பட்டறை நாள்களில் சாரணியர்களின் மையமாக யாழ். மத்திய கல்லூரி செயற்படுவதுடன் தற்போது வருகைதந்துள்ள மாணவர்கள் யாழ்.மத்திய கல்லூரியின் றேமைன் மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள சாரணர் அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(த-ரி5)

## சரணடைந்தவர்கள்

வர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு விசா ரணைக்கும் இராணுவம் முழுமையாக ஒத்துழைப்பு வழங்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போரின் இறுதிக் கட்டத்தில் இராணுவத்தின் 58 ஆவது படை யணியிடம் சரணடைந்தவர்கள் பற்றிய பட்டியலை ஒப்படைக்கு மாறு, முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவு தொடர்பாகக் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயநாத் ஜயவீர குறிப்பிட்டுள்ளதாவது:-

சரணடைந்தவர்களின் பெயர் பட்டியல் 58 ஆவது டிவிசன் தலைமையகத்தில் இருக்கிறதா, இல்லையா என்பது குறித்து எனக்குத் தெரியாது. ஆனால், நீதிமன்றம் ஊடாக இது தொடர்பாக விசாரணை இடம்பெற்று வரும் நிலையில், அந்த விசாரணைகளுக்கு இராணுவம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கும்.

காணாமற்போனவர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு விசாரணைக்கும் இராணுவம், முழுமையாக ஒத்துழைப்பைத் தரும். 58 ஆவது டிவிசனிடம் சரணடைந்தவர்கள் தொடர்பாக நீதிமன்றில் விசாரணை இடம்பெற்று வருவதால், அது குறித்த மேலதிக தகவல்களை வெளிப்படுத்துவது பொருத்தமாக இருக்காது - என்றார்.

இதேவேளை, 58 ஆவது இராணுவப் பிரிவின் கட்டளைத் தளபதி, சரணடைந்தவர்களின் பெயர்ப் பட்டியல் இருக்கின்றது என்று நீதிமன்றில் கருத்து வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-வ-5)

## தனக்குள்ள

பதியும் உள்ளார் என்றும், அவரின் முகவரான ஆளுநரும் அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

வடக்கு மாகாணத்தின் 5 ஆவது ஆளுநராக முன்னாள் அமைச்சர் ரெஜினோல்ட் கூரே, நேற்று வெள்ளிக்கிழமை மு.ப 10.30 மணிக்கு, வடக்கு மாகாண சபை யின் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் முன்னிலையில் பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு புதிய ஆளுநருக்கான வரவேற்பு உரையை வழங்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது, அவர் தனது உரையில், புதிய ஆளுநருக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பிலும் தலைமைகளின் சார்பிலும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். தற்போது வடக்கு மாகாணம் தொடர்பில் அரசு சரியான முடிவை எடுத்துள்ளது. தமிழ்மொழி பேசும் ஒருவரை ஆளுநராக இங்கு நியமித்துள்ளது. இவர் என்னுடைய நண்பர். நாடாளுமன்றத்தில் எம்முடைய எதிர்த் தரப்பில் அமர்ந்திருந்தவர் என்றபோதிலும் தமிழ் மக்கள் தொடர்பில் சிறந்த சிந்தனைகளைக் கொண்டவர்.

வடக்கு மாகாண சபையின் தலைமை என்ற வகையில், அதிகாரப் பகிர்வைச் செயற்படுத்தி மாகாண சபைக்கு அதிகாரங்களை வழங்க வேண்டும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட்டு ஆளுநர் மாகாண சபையில் அதிகாரம் கொண்டவராகச் செயற்படும் வகையில் சிறப்பாகச் செயற்படமுடியும்.

நிறைவேற்று அதிகாரத்தைத் துறக்கும் நிலையிலேயே தற்போதைய ஜனாதிபதியும் உள்ளார். ஆளுநர் தனக்குள்ள நிறைவேற்று மற்றும் சட்டவாக்க அதிகாரங்களை மாகாண சபைக்கு மாற்றி, இவற்றுக்கு முன்னின்று கண்காணிப்புடன் செயற்பட முன்வரவேண்டும். மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் ஊடாகவே இவை செயற்படுத்தப்படுவது சிறப்பாக அமையும்.

எனவே இவற்றைப் புதிய ஆளுநர் ரெஜினோல்ட் கூரே கருத்தில் எடுக்க வேண்டும்-என்றார்.

இந்த நிகழ்வில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், மாவட்ட அரச அதிபர்கள், இராணுவம் மற்றும் கடற்படை, பொலிஸ் உத்தியோ கத்தர்கள், இந்தியத் துணைத் தூதுவர், அரச அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(த-வ-ரி5)

## மரண அறிவித்தல்

### திருமதி
### நாகேஸ்வரி பத்மநாதன்



கரம்பனைப் பிறப்பிடமாகவும், அளவெட்டியை வசிப்பிடமாகவும் தற்போது யாழ்ப்பாணம் கில்னர் வீதியில் வசித்த வருமாகிய திருமதி நாகேஸ்வரி பத்மநாதன் நேற்று (19.02.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற **நாதஸ்வர கான கலாநிதி அளவையூர் N.K.பத்மநாதன்** அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நடராஜா - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - பரிமளம் தம்பதிகளின் அன்பு மருமகளும் ரவீந்திரன், கலைவாணி, கிரிதரன், ரஞ்சினி, கனகாம்பரி (ஆசிரியை - யா/இந்து மகளிர் கல்லூரி) காலஞ்சென்ற நாதஸ்வர வித்துவான் முரளீதரன், பாலேந்திரன் ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற கல்யாணி, கலைச்செல்வி, சிவகுருநாதன், சிவபுரத்தரசி (ஆசிரியை - யா/இந்து ஆரம்பப் பாடசாலை) முருகபூபதி, சிவனேஸ் வரநாதன், மோகனரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமியாரும் அர்ஜீன், அபிராம், வைஸ்ணவி, விஜித்தா, ஆர்த்திகா, ரஜித்தா, சண்முகேஷன், சகானா, கீர்த்தனா, கௌதமன், ராகப்பிரியா, கானவர்சினி, பத்மஜா, ஹரிஷயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.02.2016) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 9.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

199/4, கில்னர்லேன்,
யாழ்ப்பாணம். (69437)(15.17)
T.P:077 071 2324

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மலர்விழி நந்தகுமார்



காரைநகர் பயிரிக்கூடலை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி மலர் விழி நந்தகுமார் நேற்று (19.02.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா நந்தகுமாரின் (இந்திரன் - ஐயப்பா நகைமாடம்) அன்பு மனைவியும், பொன்னையா பேரின்ப நாயகம் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், ரவிச்சந்திரன், அன்பரசி, அருள்மொழி, எழில்ரசி, மணிமொழி, இளங்கோ, தேன்மொழி, கயல்விழி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நந்தினி காலஞ்சென்ற ரோகினி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்துக்காக நாளை (21.02.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு கோம்பயன் மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

1209, K.K.S. Road,
பூநாறி மரத்தடி, கொக்குவில்,
யாழ்ப்பாணம். (69435) (10.17)

தகவல்:நந்தகுமார்
(கணவர் -இந்திரன்)
077 262 7818

### திருமதி இந்திரபூபதி மாணிக்கவாசகர்



பிறப்பு
05.11.1931

இறப்பு
09.02.2016

யாழ்.கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திரபூபதி மாணிக்கவாசகர் 09.02.2016 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசிதம்பரப் பிள்ளை (கொக்குவில், கோண்டாவில் - உடையார்) - நாகம்மா தம்பதிகளின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற சின்னத்துரை (கொக்குவில் கிழக்கு, நாமகள் ஒழுங்கை - வைத்தியர்) - சுபத்திரை தம்பதிகளின் ஏகபுத்திரியும் காலஞ்சென்ற நடராசா(கட்டட திணைக்களபட பொறியியலாளர், மலேசியா), நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற V.N.மாணிக்கவாசகர் (கொக்குவில் கிழக்கு, மாத்தனை கந்தசாமி கோயில் -High court registrar, Jaffna ) அவர்களின் அன்பு மனைவியும் மங்கையற்கரசி(Australia), சிவகுமார் (Norway), இந்திரகுமார்(Australia), ஜெயகுமார் (London), நமணகுமார்(London), சுபாசினி (London) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற நித்தியரட்ணம்(Excutive Engineer Highways Department, Jaffna), லலிதாதேவி, பமிலா, ராகினி, ராகிலா, லோகநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் நிரோஜன், தீபனா, தர்சனா, சாரங்கன், பவித்திரன், மயூரி, பிரியங்கா, சுரேன், லவன், லாவண்யா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஞாயிற்றுக்கிழமை (21.02.2016) முற்பகல் 10.00 மணிமுதல்Hendon cemetery & Cremattorium, Holder Hill Rd, Mill Hill, London,NW7 INB,UK இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து மு.ப 10 - பி.ப 12 மணி வரை கிரியைகள் நடைபெற்று பி.ப 12.00 - 1.00 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(c 29337) (14.17.18)

மங்கையற்கரசி (Australia) +61296363754
சிவகுமார் (Norway) +4791358989
இந்திரகுமார் (Australia) +61286778840
ஜெயக்குமார்(London) +442083689222
நமணகுமார் (London) +447897535133
சுபாசினி (London) +442085782083

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் மின்பிறப்பாக்கிக்குத் தன்னியக்கக் கருவி

சாவகச்சேரி,பெப்.20
சாவகச்சேரி வைத்திய சாலையில் உள்ள மின்பிறப்பாக்கி இயந்திரத்துக்கு லக்ஸபான மின்சாரம் தடைப்படும் வேளைகளில் தன்னியக்கமாகச் செயற் படக்கூடிய வகையிலான கருவிகள் பொருத்தப்பட் டுள்ளன.
வைத்தியசாலையில் 250 கே.வி. மின்பிறப்பாக்கி உள்ளபோதிலும் இதுவரை காலமும் மின்சாரம் தடைப்படும் வேளைகளில் அங்கு கடமையாற்றுவோர் மூலம் மின் பிறப்பாக்கியைச் செயற்படுத்தி வைத்தியசாலைக்கு மின்சாரம் வழங்கப்பட்டது.
இந்த நிலையில் புதிய கருவிகள் வரவழைக்கப்பட்டு யாழ்.பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனை, மின்சாரப் பகுதியினரால் பொருத்தப்பட்டு மின்சாரம் தடைப்படும் வேளைகளில் தன்னியக்கமாகச் செயற்படும் வகையில் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. (த-ஐ-9)

# அமைச்சர் ராஜிதவுக்கு நேற்று திடீர் சுகயீனம்
## சிங்கப்பூரில் சிகிச்சைக்கு ஏற்பாடு

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன மருத்துவ பரிசோதனை ஒன்றுக்காக கொழும்பு தனியார் வைத்தியசாலையில் நேற்று மாலை அனுமதிக்கப்பட்டதாக அவரின் ஊடகப் பேச்சாளர் நிபுன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.இதன்போது அவரது உறவினர்கள் அமைச்சரிடம் கேட்டுக் கொண்டதற்கிணங்க மேலதிக மருத்துவ பரிசோதனைகளுக்காக அவரை சிங்கப்பூருக்கு அழைத்துச் செல்ல இருப்பதாக அவர் குறிப்பிட் டுள்ளார்.
இதேவேளை, அமைச்சர் ராஜித சேனரத்னவுக்கு நேற்றுமாலை மாரடைப்பு ஏற்பட்டதாகவும் அதனைத் தொடர்ந்து அவர் கொழும்பு தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார் எனவும் கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (வ)

## மரண அறிவித்தல்
### தம்பிமுத்து மயில்வாகனம்
(ஒய்வு நிலை அதிபர்)



யாழ்ப்பாணம், நீர்வேலி மத்தியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிமுத்து மயில்வாகனம் (ஓய்வுநிலைஅதிபர்-யா/நீர்வேலி றோ.க.த.க பாடசாலை) நேற்று (19.02.2016) வெள்ளிக்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - பொன்னு தம்பதிகளின் அன்புப் புத்திரனும் நாகலிங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தெய்வநாயகி அவர்களின் அன்புக்கணவரும் துளசி (ஆசிரியை - யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), துகிர்தா (ஆசிரியை - யா/புத்தூர் மெதடிஸ்த மிஷன் பாடசாலை), ஓம்சக்தி (முகாமையாளர் - கிராமிய வங்கி, நீர்வேலி) காலஞ்சென்ற தயாவாணி மற்றும் பதுமநிதி (ஜேர்மனி), சுரபி (குரு பிறிண் டேர்ஸ் - திருநெல்வேலி), மயூரா ஆகியோரின் அன்புத் தந்தையும் நவரத்தினராசா, சச்சிதானந்தம், மகேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் விக்கினேஸ், சதுர்த்திகா, அஞ்சுகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (19.02.2016) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்தில் நடைபெற்றது என்பதை அறியத்தருகின்றோம்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொலைபேசி இல:
077 6171 511
(69441)(15.17)
தகவல்:
குடும்பத்தினர்.

## வித்தியா

பட்டுக் கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுப் பின்னர் கொல்லப்பட்டிருந்தார். அந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் எம்.எம்.றியால் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது.
இதன்போது சந்தேக நபர்கள் 10 பேரும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். வழக்கு விசாரணை முடியவில்லை. தொடர்ந்து கொண்டிருக்கின்றன என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் நேற்றும் தெரிவித்தனர்.
அதேவேளை, மாணவியின் பரிசோதனை அறிக்கைகள் எதுவும் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவில்லை. இந்நிலையில், இந்த வழக்குத் தொடர்பில் அப்படி இதுவரை என்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளீர்கள்? என்ன விசாரணை நடக்கிறது? என்று கேள்வியெழுப்பிய நீதிமன்று, அவை பற்றிய தெளிவான விளக்க அறிக்கை ஒன்றை அடுத்த தவணை நீதிமன்றில் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும் என்று கண்டிப்பான உத்தரவைப் பிறப்பித்துள்ளது.
விளக்கமறியலில் நீடிப்பதற்காக மட்டும் தவணையிட்டுக் கொண்டிருக்க முடியாது. வழக்குத் தொடர்பான தற்போதைய நிலை பற்றி அடுத்த தவணை நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும்.
ஆய்வு அறிக்கைகள் எதுவும் நீதிமன்றில் இதுவரை சமர்ப்பிக்காததால் பொதுமக்கள் நீதிமன்றம் மீது வைத்துள்ள நம்பிக்கை இல்லாமல் போகும்நிலை ஏற்படக்கூடாது. எனவே அடுத்த தவணை நீதிமன்றில் இதுவரையான நடவடிக்கை அறிக்கை கட்டாயம் தாக்கல் செய்ய வேண்டும் என்று நீதிமன்று நேற்றுத் தெரிவித்தது.
இந்த வழக்கில் 10 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கூறி வழக்கை ஒத்தி வைத்தது நீதிமன்று.
குறித்த மாணவி கடந்த ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி கடத்தப்பட்டுக் கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-4)

## 26 கிலோ

நாட்டுவதிவிட உரிமையைக் கொண்டவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
கஞ்சா விற்பனை மற்றும் கொள்வனவுக்காகவே குறித்த நபர்கள் மோட்டார் சைக்கிள்களில் சென்றிருந்ததாக ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் கூறினர்.
யாழ். பண்ணையிலிருந்து தீவகம் நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றைப் பொலிஸார் மறித்துச் சோதனையிட்டபோது அதில் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 10 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது. அதனைக்கொண்டு சென்ற குற்றச்சாட்டில் அம்பலவன் பொக்கணை, புதுக்குடியிருப்பைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.
இதேவேளை, யாழ். பண்ணையில் அமைந்துள்ள தனியார் பஸ் தரிப்பிடத்தில் பயணிகள் பஸ் ஒன்றிலிருந்த நபர் ஒருவரிடமிருந்தும் 2 கிலோ கஞ்சா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. அதனைக் கொண்டு சென்ற குற்றச்சாட்டில் அம்பலவன் பொக்கணை, புதுக்குடியிருப்பை சேர்ந்த மற்றொரு குடும்பஸ்தரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.
இதுதவிர, யாழ்.நகரப்பகுதியில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட வேறு சுற்றிவளைப்பொன்றில் 14 கிலோ நிறையுடைய கஞ்சா போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. அதனைக் கொண்டு சென்ற குற்றச்சாட்டில் வடமாராட்சியைச் சேர்ந்தவரும் பிரான்ஸ் வசிப்புரிமையாகக் கொண்டவருமான இளைஞரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கைது செய்யப்பட்ட மூவரும் நேற்று யாழ்.நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 4 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார்.
அவர்களது இரண்டு மோட்டார் சைக்கிள்களும் அலைபேசிகளும் பறிமுதல் செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.
யாழ்.பிரதேச பொலிஸ் அத்தியட்சகர் பிரிவின் போதைத் தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட வெவ்வேறு சுற்றிவளைப்புக்களிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது.
(த-4-103-101-106)

## காட்டு யானை

ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றொருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
வீரபுரம், செட்டிகுளத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தர்மலிங்கம் (வயது-57) என்பவரே இவ்வாறு காட்டு யானையின் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார்.
செட்டிகுளம், சுடரிக்குளம் பகுதியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது காட்டுப் பகுதியிலிருந்து குறுக்கே வந்த யானை குறித்த நபரை இடை மறித்துத் தாக்கியுள்ளது. இதனால் பலத்த காயங்களுக்கு உள்ளான அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.
அத்தோடு வவுனியா செட்டிகுளம் பகுதியில் வயலில் வேலை செய்துகொண்டிருந்த ஒருவரும் நேற்றுக் காலை 6மணியளவில் யானையின் தாக்குதலுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். குறித்த நபர் வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோதுவயலுக்குள் நுழைந்த காட்டு யானை அவரைத் தாக்கியுள்ளது. இதனாலேயே அவர்படுகாயமடைந்துள்ளார். வவுனியா செட்டிகுளத்தை சேர்ந்த ஜோண் றீகன் (வய து-34) என்பவரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார். (த-21)

## மரண அறிவித்தல்
### திருமதி பராசக்தி நடராஜா

12, மணிக்கூட்டு ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் அம்மன் கோயிலடி வதிரியை வசிப்பிடமாகவும் கொண்ட பராசக்தி நடராஜா 18.02.2016 வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற பரமசாமி-சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வைரமுத்து-பார்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், நடராஜாவின் அன்பு மனைவியும் சக்திராஜின் அன்புத் தாயும், நிசானியின் அன்பு மாமியும் காலஞ்சென்ற சரஸ்வதி, பரமலிங்கம், பரராஜசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், நீலாம்பிகை நாகலிங்கம், நாகேஸ்வரி, நவரத்தினம், பொன்னம்மா, ஜெயஸ்ரீ காலஞ்சென்ற பத்மநாதன் பரமேஸ்வரி, கணேஸ மூர்த்திநாதன் ஆகியோரின் மைத்துனியும் பத்மலதா வின் அன்புச் சித்தியும், சஸ்விந்தின் அன்பு போர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (19.02.2016) வெள்ளிக்கிழமை நிறைவுபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.
தகவல்:குடும்பத்தினர்.
(C/29182) (10.17)
மகன் 0772653 159

## மரண அறிவித்தல்

தோற்றம்
13.09.1980

திருமதி
### ரேணுகா தவயோகராஜன்

மறைவு
09.02.2016



சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும் East Ham, London னை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரேணுகா தவயோகராஜன் கடந்த 09.02.2016 செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் நாகேந்திரம் காலஞ்சென்ற விஜயலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், பாலசிங்கம் காலஞ்சென்ற இரத்தினசிகாமணி (வட்டுக் கோட்டை) தம்பதியரின் பாசமிகு மருமகளும், தவயோக ராஜனின் ஆருயிர் மனைவியும், ரிசிபன், கரிஷா, கபிஷா ஆகியோரின் பாசமிகு தாயும், குணரத்தினம் (குணம்-லொறி உரிமையாளர்) செல்வலட்சுமி தம்பதியரின் பெறாமகளும், குகதாஸ் (CTB நடத்துனர் - காரைநகர் சாலை), மீராம்பாள் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கமலராஜன் (கனடா), குகதாஸ் (லண்டன்), ஜெயதர்சன் (கனடா), செந்தூரன் (ஆசிரியர்) ஆகியோரின் மைத்துனியும், சுஜி(கனடா), துஷி(கனடா) ஆகியோரின் சகலியும், தஷ்விதன், அஜய், சஜீவ், துஷாந், யஷ்மிகா, ஆருஷ், ரிசிகா ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(21.02.2016) ஞாயிற்றுக்கிழமை 116, Nappier Road, East Ham, London, E62SG இல் காலை 6.00 மணி முதல் மு.ப 9.00 மணிவரை இறுதிக் கிரியைகள் நடைபெற்று பின்னர் City of London Cemetery & Crematorium Alders Brook Road, London E 12 5DQ இல் மு.ப 10.00 மணிமுதல் 11.00 மணிவரை பார்வைக்காக வைகப்பட்டு தகனக்கிரியைகள் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வை.குணம்
செல்வநாயகம் வீதி,
சங்கரத்தை, வட்டுக்கோட்டை.
T.P:0778446071, 076 6384 598
(69436)(15.17)

தகவல்:
குடும்பத்தினர்.
East Ham, London
T.P: 00447828616189

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு

நாம் எமது தூரத்தை உயர்த்தவேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் வட மாகாணத்தின் புதிய ஆளுநர் றெஜினோல்ட் கூரே.

அத்துடன், வடக்கில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகளை, வேறு மாவட்டம் - வேறு மொழி சார்ந்தவர்கள் செய்வதை விட, இந்த மாகாணத்தில் உள்ள துறை சார்ந்தவர்களால் செய்யப்படும் போது, தவறுகள் இடம்பெறுவதைத் தவிர்க்கலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு மாகாணத்தின் ஐந்தாவது ஆளுநராக முன்னாள் அமைச்சர் றெஜினோல்ட் கூரே நேற்று மு.ப 10.30 மணிக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் முன்னிலையில் பணியை ஏற்றுக்கொண்டார்.

யாழ்.மாவட்டச் செயலகம் முன்பாக அமைந்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்தப் பணியேற்பு வைபவத்தில், தமது பாரியாருடன் கலந்து கொண்ட புதிய ஆளுநர், தேசியக் கொடியை ஏற்றிவைத்த போது, சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

தொடர்ந்து அலுவலகத்தில் இந்து, கிறிஸ்தவ, பௌத்த மதகுருமார் முன்னிலையில் ஆசி பெற்றுக் கொண்ட றெஜினோல்ட் கூரே, முதலமைச்சர் முன்னிலையில் பணியேற்றுக் கொண்டார்.

இதன்போது, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், புதிய அளுநருக்கு மலர் மாலை - பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.

இதன்போது பதவியேற்பு உரையாற்றிய வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே:-

அனைத்து வளங்களாலும் சிறந்த - ஆரோக்கியமான மக்கள் வசிக்கும் இந்த நாட்டில், ஏனோ பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. பிரச்சினைகள் வெளிப்படையான விடயங்களில் இல்லை. நமது மனதில் தான் உள்ளன.

எமது சிந்தனையில் - உணர்வுகளில் - பார்வையில் பரந்து காணப்படுகிறது. அவற்றை நாம் மாற்ற வேண்டும். வாழும் உக்தியை கண்டு பிடிக்கவேண்டும். உள்ளக ரீதியில் நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டும்.

அதாவது, பொருளாதார - தொடர்பாடல் - சமூக ரீதியில் நாம் இணைந்து செயலாற்றவேண்டும். இதற்கு ஒரே வழி இனங்களுக்குள்ளான கலப்பாகும். ஜாதி, மதம், மொழி என்பவற்றை தாண்டி வாழ்க்கையை அமைக்கும்போது, ஆரோக்கியமான சமூகம் ஒன்றை உருவாக்க முடியும்.

தற்போது, வாழும் சிங்களவர்கள் முழுமையான சிங்களவர்கள் அல்லர். அதே போன்று இஸ்லாமியர்களிலும் இனக்கலப்புகள் நிகழ்ந்துள்ளன. இவை ஆரோக்கியமான மாற்றங்களாகும்.

இங்கே நான் ஆளுநராக அல்லாமல், ஒரு சேவையாளனாக உங்களுக்கு பணிபுரிவதற்காக வந்துள்ளேன். என்னுடைய வாழ்க்கையில் எல்லா இன மக்களையும் மதிக்கிறேன். வடக்கில் நிலம், நீர் உள்ளிட்ட பல பிரச்சினைகள் உள்ளன. அவற்றுக்குத் தீர்வு காண நாம் எமது தூரத்தை உயர்த்த வேண்டும்.

வடக்கில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகளை, வேறு மாவட்டம், வேறு மொழி சார்ந்தவர்கள் செய்வதைக் காட்டிலும், இந்த மாகாணத்தில் உள்ள துறை சார்ந்தவர்களால் செய்யப்பட்டால் தவறுகள் இடம்பெறுவதைத் தவிர்க்கலாம்.

எனது நீண்டகால அரசியல் அனுபவத்தில் இருந்து வடக்கில் உள்ள மக்களின் தேவைகளை எதிர்கொண்டு செயலாற்றுவேன். முதலமைச்சர் மற்றும் மாகாணசபை செயற்பாடுகளில் ஒத்துழைப்புடன் செயற்பட்டு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு சிரத்தையுடன் செயற்படுவேன் - என்றார். (த-வ-4-ரி5)

## புதைகுழி

வான் மன்றில் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டது.

அத்துடன் அங்கு மேலும் எலும்புக்கூடுகள் உள்ளதெனச் சந்தேகிக்கப்படும் கிணற்றை எதிர்வரும் ஏப்ரல் 4 ஆம் திகதி தொடக்கம் தோண்டுமாறும் மன்னார் நீதிமன்று நேற்று உத்தரவிட்டுள்ளது. மன்னார் நீதிவான் ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. இதன்போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கை ஏப்ரல் மாதம் 4ஆம் திகதிக்கு ஒத்திவைத்ததுடன். அன்றைய தினம் அடையாளம் காணப்பட்ட சந்தேகத்துக்கிடமான கிணறு அமைந்துள்ள பகுதியில் தொடர்ச்சியாக 4 நாள்கள் மனித எச்சங்களை அகழ்வதற்கு நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் வீதிக்கு அருகில் நிலத்திற்கடியில் குடிதண்ணீர்க் குழாய்கள் புனரமைப்பின்போது அங்கு மனித எச்சங்கள் இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக 32 தடவைகள் அகழ்வு செய்ததில் 82 எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அத்துடன் குறித்த பகுதியில் உள்ள கிணறு சம்பந்தமாகவும் சந்தேகம் வெளிடப்பட்டிருந்தது.

அந்தக் கிணற்றினுள் மனித எச்சங்கள் இருக்கக்கூடும் என்ற அச்சப்பாடு இருப்பதனால் அதனையும் தோண்டவேண்டும் என காணாமற்போனோர் சார்பில் நீதிமன்றில் முன்னிலையாகிய சட்டத்தரணிகளினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

குறித்தவேண்டுகோளின் அடிப்படையில் அந்தப் பகுதியில் உள்ள கிணறு அடையாளம் காணப்பட்டிருந்தது. ஏற்கனவே அரச தரப்பினரால் அவ்விடத்தில் கிணறு இல்லை என்று கூறப்பட்டிருந்த போதும், பின்னர் காணாமற்போனோர் சார்பாக முன்னிலையாகிய சட்டத்தரணிகளினால் நீதிமன்றத்தின் ஊடாக குறித்த கிணறு அடையாளம் காணப்பட்டிருந்தது.

இதன் அடிப்படையில் நேற்று வெள்ளிக்கிழமை குறித்த கிணற்றைத் தோண்டுவததாகவும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தோண்டும் உபகரணங்களுடன் வருமாறும், அவ்வாறு தோண்டி அதனுள் மனித எச்சங்கள் இருப்பின் அவற்றை முறையாக எடுத்துச் செல்ல சம்பந்தப்பட்ட திணைக்களங்களும் சமூகமளிக்கவேண்டும் எனவும் நீதிமன்றினால் உத்தரவிடப்பட்டிருந்தது.

இதன்படி நேற்று வழக்கு விசாரணைக்கு வந்தபோது, நீதிமன்றில் முன்னிலையான மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, அந்த கிணற்றை அண்டிய பகுதியிலே நீர் நிறைந்திருப்பதால் இன்று (நேற்று) அதனை அகழ்வதற்குரிய வாய்ப்பு ஏற்றதாக இல்லை என்று தெரிவித்தார். அவ்விடத்தில் நீர் நிரம்பிக் காணப்படுவதாகவும் அதனைத் தோண்டுவதில் சிக்கல் உண்டு எனவும், அதனைத் தோண்டினாலும் மனித எச்சங்களைக் கண்டுபிடிப்பதில் பிரச்சினைகள் இருக்கும் என்றும் நீதிமன்றில் தெரிவித்ததோடு, அந்தப் பகுதியில் நீர் வற்றிய பின்னர் அகழ்வைச் செய்யலாம் என்றும் பொலிஸ் அதிகாரி மன்றிடம் கோரியிருந்தார்.

இருப்பினும் காணாமற்போனோர் தொடர்பாக முன்னிலையாகிய சட்டத்தரணிகள் அங்கு சென்று பார்க்குமாறு விண்ணப்பம் செய்திருந்தனர். இதன்படி நீதிவான் கிணறு உள்ள பகுதிக்கு நேற்றுச் சென்று பார்வையிட்டுக் கட்டளை பிறப்பித்தார்.

இதன்படி, வெள்ள நீர் அந்தப் பகுதிக்கு வராமலிருக்கும் வகையில் குறித்த கிணற்றுப் பகுதியைச் சுற்றி ஒரு அணை கட்டி தற்பொழுது இருக்கும் வெள்ள நீரை அகற்றவேண்டும் என்று கூறினார்.

அத்துடன் அந்த இடம் காய்ந்த பின்னர் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி அதனை அகழும் பணியை மேற்கொள்ளவேண்டும் என்றும் அவர் உத்தரவிட்டார். களநிலையை அவதானித்து அங்கு சமுகமாகியிருந்த கிராம அலுவலரிடம், குறித்த கிணறு உள்ள பகுதியில் மக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரம் உண்டா என நீதிவான் வினவியபோது, ஆதாரம் உண்டு என்று கிராம அலுவலர் பதிலளித்திருந்தார்.

இதனால் குறித்த ஆதாரங்களை நீதிமன்றில் சமர்ப்பிக்கும்படியும் நீதிவான் பணித்தார். இந்த வழக்கை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்ததுடன், அன்றைய தினத்தில் இருந்து தொடர்ச்சியாக நான்கு நாள்கள் கிணற்றைத் தோண்டும் பணி முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

நேற்றையதினம் காணாமற்போனவர்கள் சார்பாகச் சட்டத்தரணிகளான ஜீ.ராஜ குலேந்திரம், வி.எஸ்.நிரஞ்சன் மற்றும் மன்னார் சட்டத்தரணிகள் சங்கம் சார்பாகச் சட்டத்தரணிகளான எம்.சபூர்தீன், பிரிமூஸ் சிராய்வா மற்றும் லோகு ஆகியோர் மன்றில் முன்னிலையாகியிருந்தனர். (த-4-56)

## மக்களின்

ணத்துக்கு புதிய ஆளுநராக நியமிக்கப்பட்ட றெஜினோல்ட் கூரே நேற்று தமது பதவியை ஏற்றார்.

இதன்போது, ஆளுநரின் பதவியேற்பைத் தொடர்ந்து உரையாற்றியபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன்.

இதன்போது, அவர் தனது உரையில்,

தமிழ் பேசும் மக்களின் எதிர் பார்ப்புக்களை நிறைவேற்றக்கூடிய ஆளுநர் எமக்கு கிடைத்துள்ளார். புதிய ஆளுநர் தகைமை உடையவர். அவ்வாறு தகைமையுடையவர்களாக தமிழ் மக்களுக்காக வரக்கூடியவர்களை விரலில் எண்ணி எடுக்க வேண்டியிருக்கின்றது.

புதிய ஆளுநர் ஒரு ஆசிரியராக இருந்தவர். ஆசிரியராக இருப்பவர்கள் கொடுப்பதற்காக இருக்கின்றார்களே தவிர, எடுப்பவர்கள் இல்லை. எதையும் மற்றவர்களுக்கு கொடுக்கவேண்டுமென்ற மனப்பாங்கினைக் கொண்டவர்கள். அவர்கள் எந்தளவுக்கு மனித நேயத்துடனும், தமிழ் மக்களுடனும் வாழக்கூடியவர்கள் என்பதனை அறிந்துகொள்ளலாம்.

இவர் பத்து ஆண்டுகள் மேல் மாகாணத்தின் முதலமைச்சராக இருந்தவர். எனவே எவ்வாறு மாகாண சபை இயங்கவேண்டும். அது இயங்கும்போது, இருக்கக் கூடிய பிரச்சினைகளை என்ன விதத்தில் நடவடிக்கை எடுத்துச் செல்லவேண்டும் என ஆளுநரின் இடத்தில் இருந்து, தன்னுடைய முதலமைச்சர் என்ற இடத்தையும் கருத்தில் எடுத்து நடவடிக்கைகளை எடுக்க கூடிய ஒருவராக ஆளுநர் இருக்கப் போகின்றார்.

நாங்கள் பேசுவது என்ன, எங்களின் மனோநிலை என்ன, எங்களின் எதிர்பார்ப்புக்கள் என்ன, என்பதனை எல்லாம் அறிந்து கொள்ளக்கூடிய திறன் அவருக்கு இருக்கின்றது என்றார்.

இந்த நிகழ்வுகளைத் தொடர்ந்து புதிய ஆளுநர் றெஜினோல்ட் கூரே தனது குடும்பத்தினர் மற்றும் சுதந்திரக்கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனுடனும் நல்லூர் கந்தசுவாமி ஆலயம், யாழ். நாகவிகாரை ஆகியவற்றில் விசேட வழிபாடுகளில் கலந்து கொண்டார்.

(த-வ-4-ரி5-106-ரி4)

## இராணுவம்

விநாயகத்தின் மனைவி, கிளிநொச்சி அரச அதிபருக்கு வழங்கிய கடிதத்தில் கோரியுள்ளார்.

இது தொடர்பில் அரச அதிபரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, குறித்த வீட்டின் உரிமையாளர் என்று அடையாளப்படுத்தியவர், தற்போது யாழ்ப்பாணம் வரணிப் பகுதியில் தாயாருடன் இணைந்தே வாழ்வதாகவும், தமது சொந்த வீட்டைப் படையினரிடம் இருந்து பெற்றுத்தருமாறும் கோரி விண்ணப்பித்துள்ளார் - என்றார்.

புலிகளின் தளபதிகளில் ஒருவரான விநாயகத்தின் குடும்பத்தினர், போரின் இறுதியில் இராணுவத்தினரிடம் சரணடைந்து பின்னர் அவர்கள் காணாமற்போனதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதல் வாரத்தில், விநாயகத்தின் மனைவி மற்றும் பிள்ளைகள் இனந்தெரியாதோரினால் - 6 ஆண்டுகளின் பின்னர் தமது பேர்த்தியாரின் வீடு அமைந்துள்ள வரணிப் பகுதியில் இறக்கி விடப்பட்டிருந்தனர் எனக் கூறப்பட்டது.

விநாயகம் தற்போது மேற்குலக நாடு ஒன்றில் வசித்து வருவதாகவும், விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகத்தை நடத்தி வருவதாகவும், கடந்த அரசினால் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-வ-5,101)

## மன்னார்

தெரிவித்தனர்.

நேற்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில் இலுப்பைக் கடவை அந்தோனியார்புரம் கிராமத்தைச் சேர்ந்த மூவர் ஒரு மோட்டார் சைக்கிளில் இலுப்பைக் கடவை பிரதான வீதியூடாக பயணித்துக்கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரமாக நின்ற பனை மரத்துடன் மோதியதாக ஆரம்ப விசாரணையில் தெரியவந்ததுள்ளதாகப் பொலிஸார் கூறினர்.

விபத்தில் ஜேம்ஸ் மெக்கி (வயது - 23) என்ற இளம் குடும்பஸ்தர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். ஏனைய இருவரும் படுகாயமடைந்த நிலையில் மன்னார் பொது வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டபோது சதாசிவம் கஜேந்திரன் (வயது-30) என்பவர் மன்னார் பொது வைத்தியசாலையில் உயிரிழந்தார். படுகாயமடைந்து மன்னார் பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த ஆர்.ரவிக்குமார் (வயது -30) எனும் குடும்பஸ்தர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

குறித்த மூவரும் இலுப்பைக் கடவை அந்தோனியார்புரம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் எனவும், விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் இலுப்பைக்கடவை பொலிஸார் தெரிவித்தனர்.

(த-4-56)

## நெற்றிக்கண்

உன்னுடைய ஆசிரியரில் குற்றம் கண்டுபிடிப்பதை நிறுத்திவிட்டாயா? என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனிடம் கேட்க, பதிலுக்கு அவர் 'நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே' என்று தெரிவித்துள்ளார்.

'குற்றம் இருந்தால்தானே கண்டுபிடிக்கலாம்' என்று முதலமைச்சர் மீளவும் கேட்க, 'குற்றம் இருக்கின்றது. நெற்றிக்கண்ணையும் நீங்கள் திறந்து வைத்திருக்கின்றீர்கள். உங்களின் சிவப்புப் பொட்டுத்தான் நெற்றிக்கண்' என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சிரித்தபடி பதிலளித்துள்ளார்.

(த-வ-5-101-ரி5)


**கண்ணீர் அஞ்சலி**

**யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத்தின் கணக்காளர்**
**ப.பாலேந்திரன் அவர்களின் அன்புத் தாயார்**
**திருமதி நாகேஸ்வரி பத்மநாதன்**
**அவர்களின் பிரிவுத் துயரில் நாமும் பங்கு**
**கொண்டு அவரின் ஆத்மா சாந்தியடைய**
**பிரார்த்திக்கின்றோம்.**

முகாமைத்துவக் குழுவினரும், பணியாளர்களும்.
**யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனம்.**
(சி/29175)
(11,17,18)

**பாஷாண உத்தாபன, சபிண்டீகரண அழைப்பு**



09.02.2016 சிவபதம் அடைந்த
***சிவகிரி சிவசுப்பிரமணியக்குருக்கள்***
அவர்களின் அன்பு புத்திரி
**யோ.சிவகௌரி**
அவர்களின் பாஷாண உத்தாபன,
சபிண்டீகரண நிகழ்வு 21.02.2016
ஞாயிற்றுக்கிழமை அன்னா ரின்
இல்லத்தில் இடம்பெறவுள்ளது.
அத்தருணம் இடம்பெறும் ஆத்ம
சாந்திப்பிரார்த்தனையிலும்,
நண்பகல் இடம் பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து
கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.
***இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.***

**சிவகிரி,**
**இல. 37/3 கணேசபுரம், கிளிநொச்சி.**
(64239)
(14,18,20)
**குடும்பத்தினர்.**
**077 998 0492**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# களத்தில்தான் ஒற்றுமை தேவை வெளியே அது அவசியமில்லை

## ஊடகங்களுக்கு றொனால்டோ பதிலடி

ரியல் மட்ரிட் வீரர்கள் களத்தில் சிறப்பாகச் செயற்படும் வரை களத்துக்கு வெளியே எவ்வாறு இணைந்து செயற்படுகிறார்கள் என்பது தேவையற்றது எனத் தெரிவித்துள்ளார் அந்த அணியின் நட்சத்திர வீரரான றொனால்டோ.

கடந்த வார இறுதியில் பார்சிலோனா அணியின் மெஸ்ஸி, தனக்குக் கிடைத்த பெனால்டி வாய்ப்பை கோல் கம்பத்தை நோக்கி உதையாமல் அருகில் தட்டிவிட, அதனை லூயிஸ் சுவாரஸ் கோலாக்கி அந்த ஆட்டத்தில் தனது ஹற்றிக் கோலைப் பதிவுசெய்தார். இது, அந்த அணியிலுள்ள வீரர்களுக்கிடையில் நட்பின் அடையாளமாகக் கருதப்படுகிறது.

ஆனால் மறுபுறத்தில் பார்சிலோனா அணியின் பரம எதிரியான ரியல் மட்ரிட் அணியில், முன்னணி வீரர்களான றொனால்டோ, பலே, கரிம் பென்சிமா ஆகியோர் அவ்வாறான நட்பைப் பகிர்வதில்லை என்ற கருத்துக் காணப்படுகிறது.

இதுதொடர்பாகக் ஊடகவியலாளரின் கேள்வியொன்றுக்கு கருத்துத்தெரிவிக்கையிலேயே றொனால்டோ மேற் குறிப்பிட்டவாறுவெளிப்படுத்தியுள்ளார்.



அவர்மேலும்தெரிவிக்கையில், ''மன்செஸ்டர் யுனைற்றெட்அணியில்நான் இருந்தபோது, றயன் கிக்ஸ், போல் ஸ்ஹோல்ஸ், றியோபேர்டினாண்ட் போன்ற சில வீரர்களுக்கு 'ஹாய்' கூடச் சொல்ல மாட்டேன்.

ஆனால் ஆடுகளத்தில் ஒற்றுமை சிறப்பாகக் காணப்பட்டது. பலேயுடன் வெளியே சாப்பிடப் போகத் தேவையில்லை. களத்திலிருக்கும் போது என்ன நடக்கிறது என்பதுதான் முக்கிமானது. களத்துக்கு வெளியே என்ன நடக்கிறது என்பது தேவையற்றது. அது அவசியமற்றது.

அந்த வாய்ப்பு கோலாக்கப்பட்டதால் மெஸ்ஸி செய்தது சரி என்கிறீர்கள். கோலாகாமல் விட்டிருந்தால் மெஸ்ஸியின் மீது குற்றம் சுமத்தியிருப்பீர்கள். ஏனையவர்களின் கருத்துக்கள் அவசியமற்றவை. என்மீதான விமர்சனங்களையோ அல்லது என்னைத் தொடர்புபடுத்தி வரும்விமர்சனங்களையோ நான் கருத்தில் கொள்வதில்லை.

மெஸ்ஸி செய்வதெல்லாம் நான் செய்ய வேண்டுமென்றோ அல்லது நான் செய்வதெல்லாம் மெஸ்ஸி செய்ய வேண்டுமென்றோ எதிர்பார்க்காதீர்கள் உங்களுக்கு ஏமாற்றமே மிச்சமாகும்." என்றார்.

சொந்த மைதானத்துக்கு வெளியே கோல்களைப் பெறுவதில் சிரமப்படுவது போல் தெரிகிறது என்று ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதில் தருகையில், சொந்த மைதானத்துக்கு வெளியே என்னை விட அதிகமாகக் கோல்களைப் பெற்ற ஒரு வீரரைச் சொல்லுங்கள். ஒரு வீரரின் பெயரை மாத்திரம் சொல்லுங்கள். உங்களிடம் ஒரு பெயர் இல்லை.

ஏன் இவ்வளவு நேரம் நீங்கள் பெயர் குறிப்பிட்டு தெரிவித்த வீரர்கள் கூட (மெஸ்ஸி, நெய்மர், சுவாரஸ்) நெருங்க இயலாது. என்றார். (ம)

# மீண்டும் விரைவில் வருவேன் என்கிறார் சுழல் வீரர் அஜ்மல்

சந்தேகத்துக்குரிய முறையில் பந்துவீசுவதாக குற்றம் சுமத்தப்பட்ட பாகிஸ்தானின் சுழல் பந்துவீச்சாளரான அஜ்மல், தான் தனது பந்துவீச்சை மாற்றியமைத்து விட்டதாகவும் விரைவில் மைதானம் திரும்ப காத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

சந்தேகத்திற்குரிய முறையில் பந்து வீசுகிறார் என கடந்த 2014ஆம் ஆண்டு அஜ்மலுக்கு தடை விதிக்கப்பட்டது. அதுவரை அவர் பாகிஸ்தான் கிரிக்கெட்டின் முக்கிய சுழல் பந்துவீச்சாளராக இருந்து வந்துள்ளார்.

தடைக்குப்பின்னர் கடந்த வருடம் உலகக்கிண்ணத் தொடர் தொடங்குவதற்கு ஒரு வாரத்துக்கு முன் பந்துவீச அனுமதி வழங்கப்பட்டது.

ஆனால், அனைவரும் எதிர்கொள்ள அச்சப்படும் தனது பழைய பந்து வீச்சைக் கொண்டு வர அவர் கடுமையாகப் போராடினார். இதனால் அணியில் இருந்து புறக் கணிக்கப்பட்டார்.

தற்பொழுது அணிக்கு திரும்புவது தொடர்பாக அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், – நான் திரும்பவும் விளையாட வருவேன். அந்த நாள்தொலைவில்இல்லை. நான் நீண்ட நாள்கள் தொடர்களில் விளையாடாமல் இருந்துள்ளேன். பாகிஸ்தான் அணி தோல்வி அடையும் பொழுது அது என்னை துயரமடையச் செய்துள்ளது. அனுமதிக்கப்பட்ட 30 டிகிரி அளவுக்குள் சிறந்த உட்திரும்பல் வகையில் எனது பந்துவீச்சை மாற்றியமைத்துள்ளேன். நிச்சயம் வலிமையான வீரராக அணிக்குத் திரும்புவேன். (ம)

# இல்லமெய்வன்மை போட்டிகள் இன்று

யாழ்ப்பாணம், பெப். 20

புத்தூர்மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்லமெய்வன்மைப் போட்டிகள் இன்று பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன. பாடசாலையின் அதிபர் பொ.வரதகுலசிங்கத்தின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். (ம)

# செல்சிக்கு மீண்டும் பலத்த அடி இம்முறை ஜேமாவிடம் வாங்கியது




ஐரோப்பிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையே இடம்பெற்றுவரும் சம்பியன்ஸ் லீக் தொடரின், இறுதிப் பதினாறு அணிகளுக்கான விலகல் முறையிலான சுற்றில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் பரிஸ் ஸா ஜேமா அணி வெற்றி பெற்றுள்ளது.

பரிஸ் ஸாஜேமா, செல்சி அணிகளுக்கிடையில் பரிஸ் ஸா ஜேமா அணியின் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பரிஸ் ஸா ஜேமா அணி, 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. ஆட்டம் ஆரம்பித்து 39ஆவது நிமிடத்தில் ஜேமா அணியின் நட்சத்திர வீரர் சல்டான் இப்ராமோவிக்கின் கோலின் மூலம் அவ்வணி முன்னிலை பெற்றது.

எனினும் முதற்பாதியின் இறுதி நிமிடத்தில் செல்சியின் ஜோன் மைக்கல் ஒபி பெற்ற கோலின் மூலம் கோல் எண்ணிக்கை சமமானது. இரண்டாம் பாதியில் இரு அணிகளும் சமமான ஆதிக்கம் செலுத்திய போதிலும் ஜெமாவின் வீரரான கவானி 78ஆவது நிமிடத்தில் பெற்ற கோலின் மூலம் அந்த அணி வெற்றிபெற்றது. (ம)

# கௌரவிப்பு நிகழ்வு

வலி. வடக்கு, பெப். 20

யாழ். மாவட்ட அரச ஊழியர்கள் ஐந்து பேர் இன்று சனிக்கிழமை இலங்கை அரச ஊழியர்கள் நலன்புரிச் சங்கத்தினால் இராஜகிரியவில் நடைபெறவுள்ள நிகழ்வு ஒன்றில் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளார்கள்.

கடந்த வருடம் அரச ஊழியர்களுக்கு இடையே அரச ஊழியர்கள் நலன் புரி சங்கத்தினால் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் தமது திறமைகளை வெளிப்படுத்தியவர்களை கௌரவிக்கும் நிகழ்வின் கீழ் இவர்கள் கௌரவிக்கப் படுகின்றார்கள். கலப்பு வலைப்பந்தாட்டத் தொடர் மற்றும்பெண்களுக்கான போட்டிகள் ஆகியவற்றில் திறமைகளை வெளிப்படுத்திய சூ.அகிலன், சி.சிவசொருபன், ஸ்ரீபன், இ.அகல்யா, செ.கீர்த்திகா ஆகியவர்களே அவ்வாறு கௌரவிக்கப்படவுள்ளார்கள். (ம-86)

# மக்கலத்தின் இறுதி டெஸ்ட் இன்று ஆரம்பமாகிறது



ஆஸ்திரேலியா- நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவதும் இறுதியுமான ஆட்டம் இன்று ஆரம்பமாகிறது. இந்த ஆட்டத்துடன் நியூசிலாந்தின் தலைவரான மக்கலம் சர்வதேச கிரிக்கெட்டுக்கு விடை கொடுக்கிறார். முடிவடைந்த முதலாவது டெஸ்டில் ஆஸ்திரேலியா இன்னிங்ஸ் வெற்றியைப் பதிவுசெய்திருந்தது. இதனால் இந்த ஆட்டத்தின் முடிவு எவ்வாறாக அமைந்தாலும் அது ஆஸ்திரேலியாவுக்கு பாதிப்பை ஏற்படுத்தப்போவதில்லை. ஆனால் தொடரை குறைந்த பட்சம் சமநிலையில் முடிக்க வேண்டுமாயின் வெற்றிபெற வேண்டும் என்ற கட்டாயம் நியூசிலாந்துக்கு ஏற்பட்டுள்ளது. மறுமுனையில் மக்கலத்தை வெற்றியுடன் வழியனுப்பவும் நியூசியின் வீரர்கள் எத்தனிப்பார்கள் என்பதால் ஆட்டத்தில் விறுவிறுப்புக்கு பஞ்சம் இருக்காது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் இலங்கைக்கு உரிய வசதி தரவில்லை

## விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி விசனம்

இந்தியாவின் சில்லாங், குவாத்தி நகர்களில் நடைபெற்ற 12ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் போது இலங்கை வீரர்களுக்கு உரிய வசதிகள் செய்துகொடுக்கப்படவில்லை என்று விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜெயசேகர குற்றம் சுமத்தியுள்ளார். மட்டுமல்லாமல் இந்தியா- இலங்கை அணிகளுக்கு இடையே நடைபெற்ற ரி-20 தொடரின் மூன்றாவது ஆட்டத்தில் தவறான தீர்ப்புக்கள் வழங்கப்பட்டமைக்கும் அவர் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

இம்முறை தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற இலங்கை வீரர்கள் அதீத திறமைகளை வெளிப்படுத்தினர். இவர்களை வரவேற்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர மேற்குறிப்பிட்ட கருத்துக்களை முன்வைத்துள்ளார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில், இந்தியாவில் பல பிரச்சினைகள் ஏற்பட்டன. போக்குவரத்து உள்ளிட்ட வசதிகள் இருக்கவில்லை. வாய்த்தர்க்கத்தில் ஈடுபடவேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டது. எமது வீரர்கள் முறையாகக் கவனிக்கப்படவில்லை. அண்மையில் நடைபெற்ற இந்தியா - இலங்கை ரி-20 தொடரின் இறுதி ஆட்டத்தில் தவறான மூன்று தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அந்தவகையில், இலங்கை அணி தோற்கவில்லை. தோற்கடிக்கப்பட்டது என்றே கூறவேண்டும். இந்தியா என்பதால் பயப்படவேண்டிய அவசியமில்லை. இன்னும் இரண்டு அல்லது மூன்று வருடங்களில் இந்தியாவுக்கு பாடம் புகட்டமுடியும். அதற்காக தீவிர பயிற்சிகள் இடம்பெறுகின்றன. சிறந்த விளையாட்டு வீரர்கள் தேர்வு இடம்பெற்று வருகின்றது. அடுத்த தெற்காசிய, ஒலிம்பிக் தொடர்களை மையப்படுத்தி செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. என்றார். (ம)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், பெப். 20

*யங்ஸ்ரார் வி.கழகத்தொடர்*

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் நடத்தும் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நியூபைட் அணியை எதிர்த்து 786 அணி மோதவுள்ளது.

*ஊர்காவற்றுறை பிரதேச கால்பந்தாட்டத் தொடர்*

ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான இரு பாலாருக்குமான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலக விளையாட்டு மைதனத்தில் இடம்பெறவுள்ளன.

*றூபவாகினி கிண்ணத் தொடர்*

றூபவாகினி கிண்ணத்துக்கான கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகள் மற்றும் இளைஞர் கழகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு 55ஆம் கட்டையில் அமைந்துள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மைதானத்தில் இடம்பெறவுள்ளன. (ம-23)

## மாகாண மட்ட தாச்சித் தொடருக்கு விண்ணப்பம் கேட்கிறது யாழ். சங்கம்

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் வடமாகாண விளையாட்டுத்திணைக்களத்தின் அனுமதியுடன் சித்திரை வருடப் பிறப்பை முன்னிட்டு தாச்சித் தொடர் ஒன்றை முன்னெடுக்கவுள்ளது. தொடருக்கான ஆட்டங்கள் யாழ். மாவட்டத்தில் நடைபெறவுள்ள போதிலும் வடமாகாணத்தைச் சேர்ந்த கழகங்களும் தொடரில் கலந்து கொள்ள முடியும் எனவும், இம்மாதம் 29ஆம் திகதிக்கு முன்னர் கழகங்கள் தமது பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

தொடரின் இறுதியாட்டம் சித்திரைப் பதுவருட தினத்தில் நடைபெறும். (ம-23)

# பயிற்சிக்காக இந்தியா சென்றுள்ளது யாழ். மாவட்ட கால்பந்தாட்ட அணி



யாழ்ப்பாணம், பெப். 20

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தினால் தேசிய ரீதியாக நடத்தப்பட்ட 19 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான 2015ஆம் ஆண்டுக்கான தொடரில் கிண்ணம் வென்ற யாழ். மாவட்ட அணி மேலதிக பயிற்சிக்காகவும், சில பயிற்சி ஆட்டங்களில் பங்கெடுப்பதற்காகவும் நேற்று இந்தியா சென்றுள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதி வரை இந்தியாவில் தங்கி நிற்கும் யாழ். மாவட்ட அணி, கைலாசலிங்கம் பல்கலைக்கழக அணியுடனும், விருதுநகர் லீக்குடனும் சில பயிற்சி ஆட்டங்களில் விளையாடவுள்ளது. இந்தத் தகவலை அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தின் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் இ.ஆனல்ட் தெரிவித்தார். குறித்த சந்திப்பில் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா மற்றும் யாழ். உதைபந்தாட்ட லீக்கின் செய லாளர் அஜித்குமார், உபதலைவர் கிளிபேட் அன்ரனிப்பிள்ளை ஆகியோரும் கலந்து கொண்டனர். (ம-23)

## நீர்வேலி ஐக்கிய வி. கழகத்தின் கரப்பந்தாட்ட இறுதிகள் இன்று

யாழ்ப்பாணம், பெப். 20

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் 65ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இருபிரிவாக நடத்தப்பட்டுவந்த கரப்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன.

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் 'பி' பிரிவு அணிகளுக்கான ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் அணியை எதிர்த்து தோப்பு வாலிபர் அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் 'ஏ' பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய அணி மோதவுள்ளது. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ம-23)

## கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தொடர்

யாழ்ப்பாணம், பெப். 20

*யூனியர் லீக் தொடர்*

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் யூனியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் முல்லைத்தீவு லீக் அணியை எதிர்த்து அனுராதபுரம் லீக் அணி நாளை மோதவுள்ளது. இந்த ஆட்டம் பிற்பகல் 3 மணிக்கு அளம்பில் மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

*எவ்.ஏ. கிண்ணத் தொடர்*

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படும் எவ்.ஏ. கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நெடியகாடு அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் அணி நாளை மோதவுள்ளது. இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு ஆட்டம் இடம்பெறும். (ம-23)

## ஊர்காவற்றுறை பிரதேச துடுப்பாட்டத் தொடர்

யாழ்ப்பாணம், பெப். 20

ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான மென்பந்து துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு கனகபுரம் விளையாட்டுக்கழக, அம்பாள்புரம் இளந்தளிர் விளையாட்டுக்கழக மைதானங்களில் இடம்பெறவுள்ளன. (ம-23)

# புனித சவேரியார், லூசியா அணிகள் மன்னார் கோட்டத்தில் சம்பியனாகின

யாழ்ப்பாணம், பெப். 20

மன்னார் கோட்டமட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 15, 17, 19 வயதுப்பிரிவு ஆண்கள் அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத்தொடரில் 17வயதுப் பிரிவிலும், 19 வயதுப்பிரிவிலும் புனித சவேரியார் கல்லூரி அணியும், 15வயதுப்பிரிவில் புனித லூசியா மகாவித்தியாலய அணியும் சம்பியனாகின.

தாழ்வுபாடு ஆயர் ஜோசப் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதி ஆட்டங்களில் 19 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தின் புனித சவேரியார் கல்லூரி அணியை எதிர்த்து புனித லூசியா மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது.

இதில் புனித சவேரியார் அணி 1:0 என்ற கோல் கணக்கில் சம்பியனானது. தொடர்ந்து இடம்பெற்ற 17 வயதுப்பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் புனித சவேரியார் அணியை எதிர்த்து புனித லூசியா மகா வித்தியலாய அணி மோதிக்கொண்டது. இதில் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற 15 வயதுப்பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் புனித சவேரியார் கல்லூரி அணியை எதிர்த்து புனித லூசியா மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது. இதில் புனித லூசியா மகா வித்தியலாய அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெஸ்ஸி 300

பார்சிலோனா கழகத்தின் நட்சத்திர வீரரான மெஸ்ஸி, உலகின் முதல்நிலை கால்பந்தாட்ட வீரர் தானென்பதை மீண்டுமொருமுறை வெளிப்படுத்துமுகமாக, லாலிகா தொடரில் 300 கோல்களைப் பெற்ற முதலாவது வீரர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

ஸ்போர்ட்டிங் கிஜோன் அணிக்கெதிராக இடம்பெற்ற ஆட்டத்தில், 299 கோல்களுடன் களமிறங்கிய மெஸ்ஸி, 25ஆவது நிமிடத்தில் பெற்ற கோலின் உதவியுடன் 300ஆவது கோலைப் பெற்றார். அந்த ஆட்டத்தின் 31ஆவது நிமிடத்தில் அவர் மற்றொரு கோலையும் பதிவுசெய்ய 301 கோல்களை இதுவரை மொத்தமாகப் பெற்றுள்ளார். இதன்படி, லா லிகா வரலாற்றில் அதிக கோல்களைப் பெற்றவர்




கள் பட்டியலில் தனது முதலிடத்தை, மெஸ்ஸி உறுதிப்படுத்திக் கொண்டார். இதுவரை 334 ஆட்டங்களில் விளையாடியுள்ள மெஸ்ஸி, 301 கோல்களைப் பெற்றுள்ளார். இரண்டாவது இடத்தில் அத்லெட்டிபில்பாவோ அணியின் பிரபல முன்னாள் நட்சத்திரம் தெல்மோ சர்றா காணப்படுகிறார். மூன்றாவது இடத்தில் ரியல் மட்ரிட் அணியின் நட்சத்திர வீரர் ரொனால்டோ காணப்படுகிறார். 224 ஆட்டங்களில் விளையாடியுள்ள ரொனால்டோ 246 கோல்களைப் பெற்றுள்ளார். (ம)



# கொழும்பு சாகிராக் கல்லூரியை நொறுக்கி தேசியத்தில் கிண்ணம் வென்றது ஹென்றிஸ்

யாழ்ப்பாணம், பெப். 20

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட 19 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி தேசியமட்டத்தில் சம்பியனாகியுள்ளது.

கொத்மலை சொக்ஸ் கிண்ணத்துக்கான இந்தத் தொடரின் இறுதியாட்டத்தில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு சாகிராக் கல்லூரி கொழும்பு குதிரை சவாரித்திடலில் நேற்று மாலை 4 மணியளவில் பலப்பரீட்சை நடத்தியது. ஆட்டத்துடன் இணைந்த முறையில் இரு அணிகளதும் விடாப்போராட்டம் அரங்கேறியது. நீண்ட முனைப்புக்குப்பின்னர் முப்பதாவது நிமிடத்தில் முதல் கோலை பதிவுசெய்தார் ஹென்றியரசரின் மைந்தன் கனிஸ்ரன். அடுத்த சில நிமிடங்களிலேயே பழிதீர்த்து முடித்தது சாகிராக் கல்லூரி அணி. 1:1 என்று இரு அணிகளதும் சம ஆதிக்கத்துடன் முடிவடைந்தது முதல் பாதி.

இரண்டாம் பாதியில் சாகிராவை விட ஹென்றிஸின் ஆதிக்கம் சிறிது தலைதூக்கியது. குறித்த பாதியின் பதின்ம நிமிடத்தில் ஹென்றிஸின் அன்ரனிராஜ் மற்றுமொரு கோலைப் பதிவுசெய்ய தற்பொழுது நிலைமை 2:1. நிமிடங்கள் உருண்டோட ஹென்றிஸின் வாய்ப்பு அதிகமாகிக் கொண்டிருந்த அதேநேரம் சாகிராவுக்கு நெருக்கடி அதிகமாகியது. அனோயன் பிறிதொரு கோலை பதிவுசெய்ய கிண்ணம் யாழுக்கு வருவது கிட்டத்தட்ட உறுதியானது. மேலதிக மாற்றம் ஏதும் ஏற்படாத நிலையில் முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் மற்றுமொரு தேசிய கிண்ணம் ஹென்றிஸின் பெயரில் பதிவானது. (ம-23)

# காலிறுதிக்கான வாய்ப்பை அதிகப்படுத்தியது மட்ரிட்

ஐரோப்பிய கால்பந்தாட்ட கழகங்களுக்கிடையே இடம்பெற்று வரும் சம்பியன்ஸ் லீக்கின், இறுதிப் பதினாறு அணிகளுக்கிடையிலான ஆட்டங்களில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ரியல் மட்ரிட் வெற்றிபெற்று, காலிறுதிக்குச் செல்வதுக்கான தனது வாய்ப்பை அதிகமாக்கிக் கொண்டுள்ளது.

இத்தாலியின் தலைநகர் உரோமில், றோமா அணியின் மைதானத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இந்த ஆட் டத்தில் ரியல் மட்ரிட் அணியும் றோமா அணியும் பலப் பரீட்சை நடத்தின. கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமலேயே முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 57ஆவது நிமிடத்தில் ரொனால்டோ முதல் கோலைப் பதிவுசெய்தார். 86ஆவது நிமிடத்தில் ஜெஸி ஒரு கோலைப் பெற்றிருந்தார். முடிவில் மட்ரிட் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம)

# விறுவிறுப்பான கட்டத்தில் நகர்கிறது ஸ்கந்தா - மகாஜனவின் மோதல்



யாழ்ப்பாணம், பெப். 20

வீரர்களின் போர் என்று வர்ணிக்கப்படும் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரிக்கும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையிலான துடுப்பாட்டத் தொடரில் நேற்றைய முதல் நாளில் முதல் இன்னிங்ஸ் முழுவதுமாக நிறைவடைந்ததுடன் மகாஜனக் கல்லூரி 95 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது.

தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுவரும் இந்த ஆட்டத்தில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணியின் ஆரம்பம் சிறப்பாக அமையவில்லை. சீரான இடைவெளியில் இலக்குகள் சரிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி சகல இலக்குகளையும் இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சயந்தன் 68 ஓட்டங்களையும், சாருசன் 38 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி அணியின் சார்பில் டினேஸ் 3 இலக்குகளையும், சுஜீவன், லக்ஸ்மன் இருவரும் தலா இரு இலக்குகளையும் வீழ்த்தினர்.

தனது முதலாவது இன்னிங்சிற்காக பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மகாஜனக்கல்லூரி அணி சகல இலக்குகளையும் இழந்து 226 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக பிரணவன் 61 ஓட்டங்களையும், சுஜீவன் 46 ஓட்டங்களையும், புருஸ்சோத்தமன் 24 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் சார்பில் கதியோண் 6 இலக்குகளை யும், சஞ்சேயன் 3 இலக்குகளையும் வீழ்த்தினர். ஆட்டத்தின் இரண்டாம் நாள் இன்றாகும்.

# யாழ். இந்து சிறப்பான ஆரம்பம்; கொழும்பு இந்துவும் தக்க பதில்

## இந்துக்களின் போரில் நேற்றைய முதல் நாளில்

யாழ்ப்பாணம், பெப். 20

இந்துகளின் சமர் என்று அழைக்கப்படும் யாழ்.இந்துக் கல்லூரி அணிக்கும் கொழும்பு இந்துக்கல்லூரி அணிக்கும் இடையிலான துடுப்பாட்டத் தொடரின் நேற்றைய முதல் நாளில் இரு அணிகளும் சீரான ஆதிக்கம்செலுத்தியுள்ளன. யாழ்.இந்துக்கல்லூரியின் மைதானத்தில் நடைபெறும் இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொழும்பு இந் துக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. இதன்படி தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த யாழ். இந்துக்கல்லூரி அணி 9 இலக்குகளை இழந்து 296 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது. அதிகபட்சமாக துவாரகன் 57 ஓட்டங்களையும், கணேஸ்வரன் 47 ஓட்டங்களையும், நிகோஸ் 43 ஓட்டங்களையும், சிவலக்சன் 39 ஓட்டங்களையும், கிருதகணேஸ் 35 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கொழும்பு இந்துக்கல்லூரி அணியின் சார்பில் அசான், டினேஸ் இருவரும் தலா இரு இலக்குகளை வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த கொழும்பு இந்துக்கல்லூரிக்கும் ஆரம்பம் சிறப்பாக அமைய அந்த அணி இலக்குகள் இழப்பின்றி 50 ஓட்டங்களை எட்டியது. 50 ஆவது ஓட்டத்திலேயே இலக்குச்சரிவும் ஏற்பட்டது. பின்னர் அவ்வப்பொழுது இலக்குகள் வீழ்த்தப்படுவதும் இணைப்பாட்டம் பேணப்படுவதமாக இருக்க, நாள் முடிவில் அந்த அணி 5 இலக்குகளை இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக அசான் 48 ஓட்டங்களையும், யுதிஸ்கான் 23 ஓட்டங்களையும், சேரன் 23 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் யாழ். இந்துக்கல்லூரி அணியின் சார்பில் சிவலக்சன் 3 இலக்குகளையும், பிரகலாதன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர். ஆட்டத்தின் இரண்டாம் நாள் இன்றாகும். (ம)



PERSONAL CLASS
இரசாயனவியல்
சி.அங்கதன் B.Sc (Chem.sp)
37 வருட
வினாத்தாள்கள் கற்பிக்கப்படும்.
தொடர்புக்கு: 077 618 9610

ஹைவர் தேவை
கனரக வாகனத்திற்கு ஐந்து வருட அனுபவம் உள்ள சாரதி தேவை.
சம்பளம் - 45,000/= இருந்து 60,000/= வரை வழங்கப்படும்.
தொடர்பு:
அலுவலகம் - 077 3398 775
உரிமையாளர் - 077 8448 775
துர்க்கா கிறேசர், புத்தூர்.

A/L Personal Class
Biology
Chemistry
Theory & 37 Years PastPapers
கற்பிக்கப்படும்.
T.P No:- 076 6541 292

வெளிவந்துவிட்டது
CLASS WORK BOOK GRADE - 7
2016 ஆம் ஆண்டு புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக K.V Printers இன் வெளியீடு
Class Work Book Grade - 7
பயிற்சி நூல் தற்பொழுது சகல புத்தக சாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
K.V. PRINTERS
355, Clock Tower Road, Jaffna.
T.P No: 021 720 0237

போட்டிப்பரீட்சை வழிகாட்டிகள் விற்பனையாகின்றன
தொகுப்பு:
த.தவசேகர்
* SLEAS மட்டுப்படுத்தப்பட்டது (700/-)
* SLEAS திறந்தது (750/-)
* GS வழிகாட்டி (350/-)
* சமுர்த்தி வழிகாட்டி (350/-)
* SLAS திறந்த, மட்டுப்படுத்தப்பட்ட வழிகாட்டி (700/-)
திங்கள் முதல் கிடைக்கும்
பிரபல புத்தக நிலையங்களிலும், வகுப்பிலும்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.02.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org